பக்கங்கள்: 16+சூரியகாந்தி-VI=22

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 சித்திரை 27 ஞாயிற்றுக்கிழமை (09~05~2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:166

### ✪ போராளிகள் கொலைச் சம்பவத்தால் புலிகள் சீற்றம்

### ✪ கண்காணிப்புக் குழுவுக்கு கடுந்தொனியில் கடிதம்

# சமாதான முயற்சி, போர் நிறுத்த ஒப்பந்தம் மிக ஆபத்தான கட்டத்தில் என எச்சரிக்கை!

## கொலைகள் தொடர்ந்தால் ஸ்ரீலங்கா இராணுவம் கடும் விளைவுகளைச் சந்திக்கும் என்றும் அறிவிப்பு

கிளிநொச்சி,மே9

**மட்டக்களப்பு, தன்னாமுனையில் தமது போராளிகள் இருவர் சுட்டுக் கொலைசெய்யப்பட்டிருப்பது விடுதலைப் புலிகளின் தலைமையைக் கடும் சீற்றத்துக்குள்ளாக்கியிருக்கிறது. இந்தக் கொலைகளுக்கு ஸ்ரீலங்கா இராணுவம் உடந்தையாகச் செயற்பட்டிருக்கின்றது என்று கடுந்தொனியில் குற்றஞ்சாட்டியிருக்கும் புலிகள், இவ்வாறான சம்பவங்களில் இராணுவம் தொடர்ந்தும் சம்பந்தப்படுமானால் போர்நிறுத்த உடன்படிக்கையும் சமாதான முயற்சிகளும் முறிந்துபோகக்கூடிய ஆபத்தான நிலை ஏற்படும் என்றும் எச்சரித்திருக்கின்றனர்.**

விடுதலைப் புலிகளின் சீற்றத்தையும் கண்டனத்தையும் வெளிப்படுத்தும் கடிதம் ஒன்றை அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் நேற்று போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு அனுப்பினார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

மட்டக்களப்பு, தன்னாமுனையில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் இருவரைச் சுட்டுக்கொன்ற கொலையாளிகள் ஸ்ரீலங்கா இராணுவத்தின் சகல ஒத்துழைப்புடனுமே இச்சம்பவத்தில் செயற்பட்டிருக்கிறார்கள் என்பது தெளிவாகிறது. எனவே, இவ்வாறான சம்பவங்களில் ஸ்ரீலங்கா இராணுவம் ஈடுபடுமானால் போர்நிறுத்த ஒப்பந்தமும், சமாதான முயற்சியும் முறியும் ஓர் அபாயகரமான நிலை ஏற்படும் என்பதோடு, பாரதூரமான விளைவுகளையும் ஸ்ரீலங்கா இராணுவம் சந்திக்க வேண்டியேற்படும்.

மட்டக்களப்பிலிருந்து செங்கலடி நோக்கிச் சென்றுகொண்டிருந்த மேற்படி இரு போராளிகளும் நண்பகல் 12 மணியளவில் தன்னாமுனையில் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். இருவரும் சுட்டுக்கொல்லப்பட்ட இடத்திற்கு இரு மருங்கிலும் 250 மீற்றர் தொலைவில் ஸ்ரீலங்கா இராணுவத்தின் காவலரண்கள் உள்ளன. எனினும், கொலையாளிகள் கைதுசெய்யப்படவில்லை. கொலையாளிகள் ஸ்ரீலங்கா இராணுவத்திடமிருந்து சகல ஒத்துழைப்பையும் பெற்றிருக்கிறார்கள் என்பதையே இது எடுத்துக்காட்டுகிறது. இவ்வாறான "மறைமுக சக்திகளின்" உதவியுடனான கொலைகள் தொடர்ந்தால் இந்த விடயத்தில் வெறுமனே அமைதியைக் கடைப்பிடித்தவாறு இருக்கும் புலிகளின் பொறுமையை இழக்கச் செய்துவிடும்.

கண்காணிப்புக் குழு இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாமல் தடுப்பதற்கும் சம்பந்தப்பட்டோரை அடையாளம் காணுவதற்கும் சகல வழிகளிலும் முயற்சிக்கும் என்று நம்புவதோடு, இவ்வாறான சதியாளர்களை அடையாளம் காண்பதற்கான ஆழமான விசாரணைகளை அவசரமாக ஆரம்பிக்க வேண்டுமெனவும் கேட்டுக்கொள்கிறோம்.

- இவ்வாறு புலிகளின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ஐ-3)

## ஜப்பானின் விசேட தூதர் அடுத்த வாரம் வருகிறார்

கொழும்பு,மே9

ஜப்பானின் விசேட தூதர் யசூஷி அகாஷி அடுத்தவாரம் கொழும்பு வரவிருக்கின்றார்.

இலங்கையில் புதிய அரசு பதவியேற்றுள்ள நிலையில் சமாதான முயற்சிகளில் அந்த அரசுக்கு இருக்கும் ஈடுபாட்டை தெளிவுபடுத்துவதற்காகவும் - டோக்கியோ மாநாட்டில் இணக்கம் காணப்பட்ட நிதி உதவியை வழங்கக்கூடிய சூழ்நிலை பற்றி ஆராயவுமே அகாஷி இலங்கைக்கு விஜயம் மேற்கொள்கின்றார் என்று தெரிவிக்கப்பட்டது.

கொழும்பில் ஜனாதிபதி மற்றும் அமைச்சர்களைச் சந்திக்கும் அவர், பின்னர் கிளிநொச்சிக்குச் சென்று விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன், மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் ஆகியோருடன் பேச்சுக்களை நடத்தவிருக்கின்றார்.

இலங்கை சமாதான முயற்சிகளில் ஜப்பான் முக்கிய பங்கு வகித்து வருவதால், புதிய அரசியல் சூழ்நிலையின் மாற்றம் குறித்து அறிவதில் அகாஷி கூடுதல் கவனம் செலுத்துவார் எனச் சுட்டிக்காட்டப்பட்டது. (ஐ-3)

## பஸ்ஸில் இருந்து வீழ்ந்து காயமடைந்த பெண் மரணம்!

யாழ்ப்பாணம்,மே9

ஓடிக்கொண்டிருந்த பஸ்ஸில் இருந்து தவறிவீழ்ந்தார் என்று தெரிவித்து படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் கடந்த ஆறாம் திகதி சேர்க்கப்பட்ட வயோதிபப்பெண் நேற்று முன்தினம் மாலை அங்கு உயிரிழந்தார்.

கொடிகாமம் பஸ் நிலையத்துக் கண்மையில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் கொடிகாமம் வெள்ளாம்போக்கட்டியைச் சேர்ந்த வினாசி வள்ளி (வயது 66) என்பவரே மரணமானவராவார். மரணவிசாரணையின் பின் சடலம் உறவினர்களிடம் நேற்று ஒப்படைக்கப்பட்டது.

முகமாலையில் இருந்து பஸ் வண்டியில் ஏறி கொடிகாமம் சென்ற இப்பெண் கொடிகாமத்தில் பஸ் தரித்து நின்றதை அறியாது பஸ்ஸினுள்ளேயே இருந்ததாகவும், பஸ் கொடிகாமத்திலிருந்து புறப்பட்டவேளையே தான் இறங்கவேண்டிய இடத்தில் இறங்கவில்லை என்பதை அறிந்து, பஸ்ஸை நிறுத்துவதற்காக மணியை அடித்துவிட்டு பஸ் நிறுத்தப்படுவதற்கு முன்பே அவசரப்பட்டு இறங்கியபொழுது வீழ்ந்து படுகாயமடைந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-15)

## கிரனேட் வீச்சுத் தொடர்பாக இருவர் கைதாகி விசாரணை!

மட்டக்களப்பு,மே9

மட்டக்களப்பு நகரில் கோவிந்தன் வீதியில் உள்ள விசேட அதிரடிப் படையினரின் காவல் நிலையத்தில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற கைக்குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக இருவர் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டிருக்கின்றனர்.

ஓட்டோ சாரதியான மணியன் இராசலிங்கம், நாவலப்பிட்டியைச் சேர்ந்த சுப்பையா விஜயகுமார் ஆகியோரே கைதுசெய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டனர்.

அவர்களிடம் வாக்குமூலம் பெற்ற பொலீஸார் நேற்று மாலை இருவரையும் விடுவித்தனர்.

இதேவேளை-

கோவிந்தன் வீதிப் பகுதியில் தேடுதல் நடத்திய படையினர் அங்கு வீசப்பட்ட கிரனேட்டின் பாகம் ஒன்றை (கிளிப்பை) மீட்டுள்ளனர் என்று தெரி

(16ஆம் பக்கம் பார்க்க)

## வெலிக்கடை ஆயுள்கைதிகள் கூரை மீது ஆர்ப்பாட்டம்!

கொழும்பு,மே9


வெலிக்கடைச் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள ஆயுள் தண்டனைக் கைதிகள், தமது தண்டனையைக் குறைக்கும்படி கோரி - போராட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

சிறைச்சாலைக் கூரைக்கு மேல் ஏறி இவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தமது போராட்டத்துக்கு ஆதரவு தருமாறு, இச்சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகளிடம் அவர்கள் கோரியிருக்கின்றனர்.

ஆயுள் தண்டனைக் கைதிகளின் போராட்டத்துக்கு ஆதரவு வழங்க மறுத்த தமிழ்க்கைதிகள் சிலர் எச்சரிக்கப்பட்டனர் என்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஐ-3-6-ரி)

## முரளி சாதனை!



ஹராரே,மே9

இலங்கை கிரிக்கெட் அணியின் நட்சத்திர சுழல் பந்துவீச்சாளர் முத்தையா முரளிதரன் டெஸ்ட் வரலாற்றில் அதிகூடிய டெஸ்ட் விக்கெட்டுகள் (521 விக்கெட்டுக்கள்) பெற்று உலக சாதனை ஒன்றைப் படைத்துள்ளார்.

நேற்று மாலை 5.55 மணிக்கு (இலங்கை நேரப்படி) இச்சாதனையை அவர் நிலைநாட்டியுள்ளார்.

மேற்கிந்திய அணியின் கொட்னி வோல்ஷின் சாதனையை முரளிதரன் நேற்று முறியடித்துள்ளார்.

ஸிம்பாவே அணியுடன் நேற்று இடம்பெற்ற ஆட்டத்தில் 2ஆவது இன்னிங்ஸில் இரண்டு விக்கெட்டுகளை முரளி கைப்பற்றினார்.

32 வயதான முரளி தனது 90 ஆவது ஆட்டத்தில் இச்சாதனையை நிலைநாட்டியுள்ளார். கொட்னி வோல்ஷ் 132 ஆட்டங்களில் மொத்தம் 519 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியிருந்தார்.

620 விக்கெட்டுக்களைக் கைப்பற்றும் இலக்குடன் உள்ள முரளி கடந்த காலங்களில் பல நெருக்கடிகளையும் சோதனைகளையும் சந்தித்து வந்துள்ளார். எனினும், தனது விடாமுயற்சியினால் இந்தச் சாதனையை நிலைநாட்டியுள்ளார். முரளியின் சாதனையை விளையாட்டு அமைச்சர் ஜீவன் குமாரதுங்க உட்பட பல அமைச்சர்கள் பாராட்டியுள்ளனர்.

கொழும்பு நகரில் நேற்றுமாலை இந்தச் சாதனை அறிவிப்பு வெளியானதும் கிரிக்கெட் ரசிகர்கள் வெடிகளைக் கொளுத்தி ஆர்ப்பரித்து கொண்டாடினர். வாகனங்களில் முரளியின் படங்கள் ஒட்டப்பட்டன. (ஐ-3-6)


# யாழ். மருத்துவபீட மாணவர்களின் கலைத்திறன் மிளிரும் வெள்ளிவிழா நிகழ்வு

யாழ். பல்கலைக்கழகத்தின் வெள்ளிவிழாவையொட்டி நடைபெற்றுவரும் நிகழ்வுகளில் கலை நிகழ்வின் இறுதிநாள் நிகழ்வுகள் இன்று மாலை 3 மணிக்கு யாழ். மருத்துவபீட கேட்போர் கூடத்தில் நடைபெறுகின்றன.

முழுக்க முழுக்க மருத்துவ மாணவரின் நெறியாள்கையிலும், பங்களிப்புடனும் நடைபெறும் இக்கலை நிகழ்வு அவர்களின் கலைத்திறனை வெளிப்படுத்தும் ஓர் அரிய நிகழ்வு என்றே கருதவேண்டும்.

ஏனெனில், தமது சுமை மிகுந்த கல்விக்கு மத்தியில் கலை ஆற்றலை வெளிப்படுத்தத் தயாராக உள்ளோம் என்பதை நிரூபிக்கும் வகையிலும் நாமும் சிறந்த கலைஞர்கள் என்பதை எடுத்துக்கூறும் வகையிலும் இக்கலை நிகழ்வு நடைபெறுகின்றது.

இக்கலை நிகழ்வில் அவர்கள் மருத்துவர்களாக அல்லாமல் ஒரு முழுமையான கலைஞர்களாக மாறிவிடுகின்றார்கள். மருத்துவபீட மாணவர்களின் ஒட்டு மொத்தக் கலைகளின் உச்ச வெளிப்பாட்டை இந்தக் கலை நிகழ்வு மூலம் அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கும்.




யாழ்.மருத்துவபீட
வெள்ளி விழா
கலை நிகழ்வுகள்



ஊடக அனுசரணை உதயன்

கலை ஒரு மனிதனை ஆளுமையுள்ளவனாக்குகின்றது என்பதை நிரூபிக்க இந்தக் கலை நிகழ்வில் பல கலை நிகழ்வுகளை அவர்கள் ஏற்பாடு செய்துள்ளனர். இதற்காக அவர்கள் இரவு பகல் என்று பாராது தமது நேரத்தை செலவு செய்துள்ளனர்.

இன்று நடைபெறும் இறுதிநாள் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் ம.சிவசூரியவும், சிறப்பு விருந்தினராக 'உதயன்' பத்திரிகை நிர்வாக இயக்குநர் ஈ.சரவணபவனும் கலந்துகொள்கின்றார்கள். குழு நடனம், நாடகம், இசைக்கச்சேரி, பட்டிமன்றம் என்பன இன்று நடைபெறுகின்றன.

தொகுப்பு: தேவா

## மூத்த கலைஞர்களின் நோக்கில் மருத்துவ மாணவரின் கலை ஆர்வம்

### நேரப்பஞ்சம் மிகுந்த மாணவரிடம் முளைவிட்டிருக்கும் கலை ஆர்வம்



மருத்துவ மாணவர்கள் என்றால் அவர்கள் விழுந்து, விழுந்து படிப்பவர்கள் என்றுதான் கேள்விப்பட்டிருக்கின்றோம். எனினும், இத்தகைய நேரப்பஞ்சம் மிக்க மருத்துவ மாணவர்களிடம் கலை ஆர்வம் முளைவிட்டிருக்கின்றதென்றால் அதனைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

- இவ்வாறு தெரிவித்தார் ஈழத்தின் மூத்த இசை நாடகக்கலைஞர் கலாபூஷணம் நவாலியூர் நா.செல்லத்துரை.

மருத்துவம், கலை ஆகிய இரண்டும் அவைகூறும் பொருளுணர்வில் வெவ்வேறானவை. எனினும், மருத்துவம் எவ்வாறு உடல்நலத்தைப் பேணுவதற்கு உதவுகின்றதோ அதே போன்று ஒருவனது உளநலத்துக்கு கலை மிகவும் இன்றியமையாததாகும். இதனை மருத்துவ உலகம் ஏற்றுக்கொள்ளும். இந்தவகையில், மருத்துவ உலகின் ஆரம்பப்படியில் ஏறியிருக்கும் மருத்துவ மாணவர்கள் உடல் நலக் கல்வியைக் கற்கின்ற அதேவேளை - ஏககாலத்தில் கலைநிகழ்வுகளில் தம்மை முழுமையாக ஈடுபடுத்தியிருக்கின்றார்கள் என்றால் அதனை மிகப்பெரும் சாதனையாகவே கொள்ளவேண்டும்.

கடந்த வருடங்களில் மருத்துவ மாணவர்களால் மேடையேற்றப்பட்ட நாடகங்களில் மத்தியஸ்தராகப் பணியாற்றும் வாய்ப்புக்கள் எனக்குக் கிடைத்தன. புதிய சிந்தனைகளை உருவாக்கவேண்டும் என்ற கருப்பொருளுடன் மேடையேற்றப்பட்ட இந்த நாடகங்கள் மருத்துவத்தின் ஊடாக கலை வடிவங்களைப் பேணமுடியும் என்பதை எடுத்துக்காட்டத் தவறவில்லை. நோய்க்கு மருந்தாக கலைவடிவங்களும் அமையும் என்பதையும் இத்தகைய நாடகங்கள் எடுத்துக்காட்டின. கலை நிகழ்வுகளில் புதிய புதிய உத்திகளைப் புகுத்த வேண்டும் என்பதில் மருத்துவ மாணவர்கள் காட்டிவரும் ஆர்வத்தை நான் வரவேற்கின்றேன். எனவே, தொடர்ந்து மருத்துவக் கற்கையில் நுழையும் புதிய மாணவர்களும் வருடாந்தம் கலை நிகழ்வுகளை நடத்தி தமிழ்க் கலையுலகம் வளர்ச்சிபெற தம்மால் இயன்ற பணியை ஆற்றவேண்டும் எனக்கேட்டுக் கொள்கின்றேன் - என்றார் அவர்.

### கலைஞர்களுக்குரிய அந்தஸ்தை வழங்குவதில் மருத்துவ மாணவர் முன்மாதிரியானவர்கள்



கலைஞர்களை மதித்து அவர்களுக்குரிய அந்தஸ்தை வழங்குவதில் மருத்துவ பீட மாணவர்கள் முன்மாதிரியாகத் திகழ்கின்றார்கள்.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் இசை விரிவுரையாளா திருமதி விக்னேஸ்வரி நாகேந்திரா.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மருத்துவபீட மாணவர்கள் உண்மையிலேயே மிகுந்த கலையாற்றலையும், ஆவலையும் உடையவர்கள். அவர்கள் தமது விரிவுரைகள், ஏனைய செயற்பாடுகளுக்கு மத்தியில் இந்தக் கலை நிகழ்வை நடத்துவது மிகவும் வரவேற்புக்குரியது. எந்தவொரு நிகழ்விலும் அவர்கள் சலிக்காமல் ஆர்வமுடன் பங்குகொள்கின்றார்கள்.

அவர்கள் கல்விகற்கும் துறை ஒரு மிகவும் கஷ்டமான, கடினமானதுறை. ஆயினும், அவர்கள் கலைக்கு உரிய மதிப்பை வழங்கிவருகின்றார்கள். தனிப்பட்ட ரீதியில் எந்தனையோ மருத்துவ மாணவர்கள் கலை பயின்றுவருகின்றார்கள். அதன் மூலம் அவர்கள் ஒரு மருத்துவனாக மட்டுமல்ல சிறந்த கலைஞனாகவும் உருவாகக்கூடிய சூழல் உள்ளது.

ஒன்றைச் சொல்லிக்கொடுக்கும் போது அதைச் சரியாகக் கற்றுக்கொள்ள வேண்டும் என்ற ஆர்வமும், அதனைத் திறம்படச் செய்யவேண்டும் என்ற திறமையும் அவர்களிடம் நிறையவே உள்ளது. கலையின் மகிமையை அவர்கள் இலகுவில் புரிந்துகொள்கிறார்கள்.

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த மருத்துவ மாணவர்கள் மட்டுமல்ல வெளிமாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்களும் கலைத்திறன் உடையவர்கள் கலை அவர்களுக்கு ஆறுதலைக கொடுக்கின்றது என்பதால் அதனை அவர்கள் விரும்பிக் கற்கின்றார்கள் - அதனை மதிக்கிறார்கள்.

ஆகவே, அவர்கள் நடத்தும் இந்தக் கலைநிகழ்வு ஒரு மாபெரும கலை விழாவாக அமையும் என்பதில் சந்தேகமில்லை - என்றாா அவர்.

### மருத்துவ மாணவரின் கலைத்திறன்; வெளிப்படுத்த இது ஒரு சந்தர்ப்பம்



மருத்துவபீட மாணவர்கள் தமது கலைத்திறனை வெளிப்படுத்தவும் ஏனையோர் அதனைக் கண்டுகொள்ளவும் இது ஒரு சிறந்த சந்தர்ப்பம்.

- இவ்வாறு தெரிவித்தார் மூத்த வானொலி நாடக எழுத்தாளர் கலாபூஷணம் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை.

பொதுவாக மருத்துவ மாணவர்கள் படிப்பதற்கே நேரம் இல்லாமல் இருக்கிறார்கள். இதற்கு மத்தியில் ஒரு கலை நிகழ்வை அவர்கள் நடத்துவதென்பது ஒரு விளையாட்டான விடயம் அல்ல. ஒவ்வொரு மருத்துவனும் ஒவ்வொரு நோயாளியையும் பார்க்கும் போது ஒவ்வொரு புதிய விடயங்களைக் கற்றுக்கொள்கின்றான். அதைப்பற்றி சிந்தித்து நிறையக் கற்கவேண்டிய தேவை அவனுக்கு உள்ளது. அவற்றுக்கு மத்தியிலும் அவன் தனது கலைத்திறனை வெளிப்படுத்துவது மிகவும் பெருமைப்படவேண்டியதாகும்.

மருத்துவ மாணவர்கள் தமது கலைத்திறனை வெளிப்படுத்தக் கூடிய சந்தர்ப்பங்கள் மிகமிகக் குறைவாகவே உள்ளன. அவர்கள் மருத்துவ பீடத்தை விட்டு வெளியேறிய பின்னரும் அப்படியான சந்தர்ப்பங்கள் கிடைப்பது மிகக்குறைவே.

மாணவர்கள் இப்படியான சந்தர்ப்பங்களில் தமது கலை ஆர்வத்தையும், திறனையும் வெளிப்படுத்த வேண்டும்.

கலை ஆர்வம் மிகுந்த மருத்துவ மாணவர்கள் நிறையவே இருக்கிறார்கள். அவர்கள் அப்படி இருப்பதனால் தான் அவர்களால் மக்களுக்குச் சிறந்த சேவையை வழங்கக் கூடியதாக இருக்கின்றது.

கலைஞர்களாக அவர்கள் இருப்பதனால் சமுதாயமும் பயனடைகின்றது. அவர்களுடைய அறிவும் வளர்ச்சியடைகின்றது. ஒருவன் முழுமையானவனாக இருக்க எல்லாவிதமான அறிவும் இருக்கவேண்டும். அந்த வகையில் மருத்துவ மாணவர்களுக்குக் கலை அறிவு அவசியமானதே.

மருத்துவ மாணவரின் பணியைச் சித்தரிக்கும் விதத்தில் கடந்த 2001ஆம் ஆண்டில் நான் 'புனிதப்பணி' என்னும் மேடை நாடகம் ஒன்றை எழுதியிருந்தேன். அவர்களின் பணி எத்தகைய சிறப்புவாய்ந்தது என்பதை நான் அதில் காட்டியிருந்தேன் - என்றார் அவர்.

## பல்கலைக்கழக நூலகம் முன்பாக 'வித்தி'யின் சிலை நிறுவவேண்டும்

### நினைவுப் பேருரையில் பேராசிரியர் சிவஞானசுந்தரம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,மே9

யாழ். பல்கலைக்கழகத்தின் வளர்ச்சியில், அபிவிருத்தியில் முக்கிய பங்கு வகித்த முன்னாள் துணை வேந்தர் பேராசிரியர் சு.வித்தியானந்தனின் முழு அளவிலான சிலை ஒன்று பல்கலைக்கழக நூலகம் முன்பாக அமையவேண்டும் என்று வாழ்நாள் பேராசிரியர் எஸ் சிவஞானசுந்தரம் (நந்தி) கோரிக்கை விடுத்துள்ளார்.

பேராசிரியர் சு.வித்தியானந்தனின் நினைவுப் பேருரை நேற்றுப் பிற்பகல் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்றது. அங்கு நினைவுப் பேருரை நிகழ்த்துகையில சிவஞானசுந்தரம் இந்தக் கோரிக்கையை விடுத்தார். கலாநிதி குழந்தை ம.சண்முகலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ். கல்வியியல் கல்லூரி பீடாதிபதி கலாநிதி தி.கமலநாதன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

"கலையின் அன்பன் கலைஞானின் நண்பன் வித்தி" என்னும் தலைப்பில உரையாற்றிய சிவஞானசுந்தரம் மேலும் தெரிவித்ததாவது:-

பேராசிரியர் சு.வித்தியானந்தன் நினைவாக ஓர் அறக்கட்டளை அறிவு மிக்க பெரியோர்களால அங்குரார்ப்பணம் செய்யப்படுகின்றது. அதன் செயற்பாடுகள் வித்தியின் பெயரை இளைய தலைமுறையினருக்கு ஞாபகம் செய்து கொண்டே இருக்கும். இதேவேளையில், சென்ற ஜனவரி மாதம் கா.சிவததம்பியின் தலைமையில் ஓர் அறக்கட்டளை பேராசிரியர் வி.செல்வநாயகம் நினைவாக கொழும்பில் ஆரம்பிக்கப்பட்டது. இரண்டும் மிகவும் பொருததமான நிகழ்வுகள்.

பேராசிரியன் வாழ்வு அன்பும் பண்பும், சால்பும் கல்வித் தொடர்பும், கலைத் தேடலும், தமிழியற் சிந்தனையும் கொண்ட சரித்திரம். அந்த வாழ்வு ஒரு தரமான சரிதமாக வெளிவரவேண்டும். வெறும் கட்டுரைத் தொகுப்புகளாக, சொன்னதை திரும்பிச் சொல்வதாக இராமல் பல தகவல்களையும் சேகரித்து ஒருவரால் எழுதப்படவேண்டும்.

வித்தியானந்தன் நூலகத்தின் முன்றிலில் அவரின் சிலை இருக்க வேண்டும். அல்லாவிடில் நூலகததிற்கு உள்ளே அவரது நெஞ்சளவு சிலை இருக்கவேண்டும். யாழ். பல்கலைக்கழகத்தைப் பொறுத்தவரை பொன்னம்பலம் இராமநாதனுக்கு அடுத்தபடியாக நினைவுகூரவேண்டிய பெருமகன் அவர் தான். இதனை இந்த அறக்கட்டளை நிர்வாகிகள் பல்கலைக்கழக நிர்வாகததுடன் சேர்ந்து நிறைவாக்கவேண்டும். ஈழத்தின் தமிழ் உலகையும் கலை அரங்கையும் பொறுத்தவரை இந்த அறக்கட்டளை ஒரு வரப்பிரசாதம்; ஒரு மைல் கல் - என்றார் அவர்.

நினைவுப் பேருரையின் முழு விவரமும் பின்னர் உதயனில் வெளியாகும். (ஜ-3 12)

### கணனிக் கருத்தரங்கு

இலங்கைக்கான தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மை என்ற நிறுவனத்தினால் (ICTA) தமிழ்க் கணனி விசைப்பலகை கருத்தரங்கு இன்று காலை 8.30 மணி முதல் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் பங்குபற்ற விரும்பும் ஆர்வமுள்ள அனைவரையும் ஒழுங்குபடுத்தும் வகையில் பதிவுகள் காலை 8 மணி முதல் மண்டப நுழைவாயிலில் இடம்பெறும் எனவும் இதுவரை பதிவுகளை மேற்கொள்ளாதவர்களும் இன்று பதிந்த பின் பங்குபற்றலாம் எனவும் கருத்தரங்கின் யாழ். மாவட்ட இணைப்பாளர் அறிவித்துள்ளார். (ஜ)

## நட்சத்திர வீரர்கள் கௌரவிப்பு



யாழ்ப்பாணம்,மே9

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தினால் அகில இலங்கை ரீதியாக இவ்வாண்டு நடத்தப்பட்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் - பகுதி - 2 இல் எட்டுப் போட்டிகளில் கலந்துகொண்டு சகல போட்டிகளிலும் மன்னார், பள்ளிமுனை சென். லூசியா விளையாட்டுக் கழகம் வெற்றியீட்டியுள்ளது.

வெற்றியீட்டிய அணியின் நட்சத்திர வீரர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் அந்த அணியுடன் குருநகர் பாடுமீன் விளையாட்டுக் கழகம் மோதும் கண்காட்சி ஆட்டம் இடம்பெறும்.

தமிழீழ விளையாட்டுத்துறையின் யாழ். மாவட்டப் பிரிவு இந்த நிகழ்ச்சியை ஏற்பாடுசெய்துள்ளது.

யாழ்ப்பாணம், வலிகாமம், பருத்தித்துறை உதைபந்தாட்டச் சங்கங்களும் இக்கௌரவிப்பு நிகழ்வில் பங்குபற்றவுள்ளன. (ஜ-3)

| | | | |
|---|---|---|---|
| | ▲ சூ.,புத., ரா. | | சனி, வெ., செவ். |
| | இராசிச் சக்கரம் | | |
| | | | வியா. |
| சந். | | கே. | |

# இந்த வார இராசி பலன்

## 09-05-2004 - 15-05-2004

### மாற்றம்:

பூராடம் - தனுசு இராசியில் சந்திரன் நிற்கும்.

அரசியல் பேச்சுந் தொடரும். ஸ்திரமற்ற ஆட்சி, மத்தியில் நிரந்தரத் தீர்வைத் தராது. அரசியல் தளம்பல் நிலை தொடர இடமுண்டு. இந்தியாவின் ஆலோசனை நாடப்படும். இந்தியத் தேர்தலில் பழைய ஆட்சிப்பீடத்தவரை அரசு அமைக்க மக்கள் சாதகமாக வாக்களிப்பார்கள். கருணாநிதிக்கு வாய்ப்பு அதிகம் கொடுக்கும். மத்திய கிழக்கில் அமெரிக்காவுக்கு எதிரான வன்முறை அதிகரிக்கும். அழிவுகள் தொடரும். அரபிக், இந்து சமுத்திரத்தில் தாழமுக்கத்தால் மழை அதிகரித்து வெள்ளப் பெருக்கு வந்தாலும், உஷ்ண நிலையும் அதிகரிக்கும் எனக் கிரக நிலைகள் காட்டுகின்றன.

### மேடம்

சூரியன் உச்சம். லக்கினாதிபன் செவ்வாய். முயற்சி ஸ்தானத்தில் - தொழில் ஸ்தானத்தில் புதிய முயற்சிகள். மேலதிகாரிகள் சினப்பார்கள். சகோதரர்கள், நண்பர்கள் உதவுவார்கள். அயலவர்களை நம்ப முடியாது. பொருள் வரவு கொடுக்கும். உஷ்ண வருத்தங்கள் கூடும். நாரிநோ, சளி, நெஞ்சுவலி இருக்கும். குருத்துறையினர் மற்றும் சந்தை, பத்திரிகைத்துறையினருக்கு நன்மைகள் அதிகரிக்கும்

*அதிர்ஷ்டநாள்கள் :- வெள்ளி, சனி.*

### இடபம்

பொருள் வரவு தாமதமாகும். புதிய திட்டம் போடுவீர்கள். இடமாற்றங்களால் நன்மைகள் அதிகரிக்கும். வரவுக்கு மீறிய செலவுகள் ஏற்படும். காலில் வருத்தம், கடும்யோசனை வரும். தாய்வழியினருடன் பகைமை ஏற்படும். தூரத்திலிருந்து ஆறுதல் செய்தி கிடைக்கும். இடமாற்றங்களால் நன்மைகள் ஏற்படும். குருத்துறையினர், ரீ.வி., டெக் தொழில் செய்பவர்களுக்கு வருமானம் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள் :- வெள்ளி, சனி.*

### மிதுனம்

தொழில் ஸ்தானத்தில் பதட்டநிலை ஏற்படும். குடும்பத்தின் பொருள் நிலையில் மாற்றம் வரும். பணவரவு ஏற்படும். எதிர்ப்பாலாரால் உதவிகள் கிடைக்கும். அரசியல்செல்வாக்குக் கிடைக்கும். இடமாற்றங்களால் நன்மைகள் ஏற்படும். பொருளில் - கொடுக்கல் வாங்கல்களில் நிதானமாக இருக்கவும். பத்திரிகைத்துறை, இசைத்துறை, குருத்துறையினர் நன்மைகள் அடைவர். காலில் காயம், தலைவலி, மலச்சிக்கல் கொடுக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள் :- வெள்ளி, சனி.*

### கடகம்

கைக்கு வந்தது வாய்க்கு எட்டாத நிலை தோன்றும். தொழில் ஸ்தானத்தில் புதிய நடைமுறைகள் ஏற்படும். மேலதிகாரிகள் உதவி செய்வார்கள். முழங்கால் பிடிப்பு, வயிற்று வருத்தம், உஷ்ண வருத்தங்கள் கொடுக்கும். தோல், சலம் பாதிப்பு ஏற்பட இடம் உண்டு. புதிய நண்பர்களால் பொருள் இழப்புக் கொடுக்கும். புதிய திட்டங்களுக்கு வரவேற்பு உண்டு. குருத்துறை, சட்டத்துறை, அரசியல்வாதிகளுக்கு நன்மைகள் ஏற்படும்.

*அதிர்ஷ்டநாள்கள் :- வெள்ளி, சனி.*

### சிங்கம்

ஏன் மனச்சஞ்சலம் ஏற்படுகின்றது? என ஆராய்ந்து செயற்படவும். தொழில் நிலையில் ஆதரவு இருக்கும். பண வரவு கொடுக்கும். புதிய பொருள்கள் வீட்டிற்கு வரும். வீட்டில் சில மாற்றங்களைச் செய்ய யோசிப்பீர்கள். உஷ்ண, குளிர்ப் பீடைகள் கொடுக்கும். நாரிநோ, காலில் காயம் ஏற்படலாம். குருத்துறை, அரசியல் துறை சார்ந்தோருக்கு நன்மைகள் கிடைக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள் :- வெள்ளி, சனி.*

### கன்னி

உறவினர்கள் ஆதரவு தருவார்கள். பொருள் வரவு கொடுக்கும். இடமாற்றங்களால் நன்மைகள் கொடுக்கும். அரச பயம் ஏற்படும். அடிக்கடி ஒரு படபடப்பு, பயம் தோன்றும். இரவு நேரத்தில் வெளியில் செல்வதைத் தவிர்க்கவும். கைகால் விறைப்புக் கொடுக்கும். சந்தை வியாபாரிகள், தோட்டத்துறைகளைச் சேர்ந்தவர்கள், ஆசிரியர்கள் பொருள்வளம் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்:- வெள்ளி, சனி.*

### துலாம்

பொருளுக்காக போராட்டம் தோன்றும் நிலை. குடும்பத்தில் முறுகல்நிலை தோன்றலாம். வீடு வாசலில் மாற்றங்கள் ஏற்பட இடம் உண்டு. பணத்தை நிதானமாகச் செலவுசெய்யவும். காலில் நோ, உளைவு, நாரி உளைவு, சளித்தொல்லை கொடுக்கும். இடமாற்றங்களால் நன்மைகள் ஏற்பட இடமுண்டு. தந்தைக்கு - தந்தைவழியினரொருவருக்கு உடல்நிலை பாதிப்பு கொடுக்க இடம் உண்டு. ஆசிரியத்துறை, சங்கீதத்துறை போன்ற துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்:- வெள்ளி, சனி.*

### விருச்சிகம்

இடமாற்றமொன்று கொடுக்கும். மனத்தாங்கல்கள் வரும். பணத் தட்டுப்பாடு, மேலதிகாரிகளின் கண்டிப்புக்கு ஆளாவீர்கள். நாரிப் பிடிப்பு, தொண்டை நோ, சளி வருத்தங்கள் கொடுக்கும். இரும்பு, எண்ணெய்த் துறை சார்ந்தோர் மற்றும் சந்தை வியாபாரிகள் போன்றவர்களுக்கு மாற்றங்களும், அதிக நன்மைகளும் கொடுக்கும்.

*அதிர்ஷ்டநாள் :- வெள்ளி.*

### தனுசு

அடிக்கடி திட்டங்கள் மாறும். தொழில் ஸ்தானத்தில் புதிய பொறுப்பு, வீட்டில் வைத்தியச்செலவுகள் அதிகரித்தல் என்பன கொடுக்கும். வியாழ பார்வையால் எதையும் சமாளித்து வெற்றி, நன்மை பெறுவீர்கள். பெரியவர்களின் ஆதரவு இருந்து கொண்டிருக்கும். வருமானம் அதிகரிக்கும். உறவினர்கள் உதவி செய்வார்கள். நாரிநோ, கால்உளைவு கொடுக்கும். இடமாற்றங்கள் சகஜமாகும். ஆசிரியத்துறை, வியாபாரிகள், மருந்துத் துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள் : ஞாயிறு, வெள்ளி.*

### மகரம்

தொழில்நிலை மாற்றம் கொடுக்கும். பெரியவர்கள் உதவி செய்வார்கள். இடமாற்றங்கள் நன்மைதரும். பொருள் களவு, இழப்புவர இடமுண்டு. இதனால் அலைச்சல் கொடுக்கும். தூரதேசம் செல்லும் திட்டத்தை விடவும். திரும்பநேரிடலாம். மனக்குழப்பம், தோல் வருத்தம், தலைவலி, உஷ்ணபீடைகள் என்பன கொடுக்க இடமுண்டு. குருத்துறை, வியாபாரத்துறை, தொழில்நுட்பத்துறை சார்ந்தோர் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள் :- ஞாயிறு, சனி.*

### கும்பம்

புதிய பொறுப்புக்களால் அலைச்சல்கள் ஏற்படும். பிடிவாதம் கொடுக்கும். தொழில் பீடத்தில் மேலதிகாரிகளிடம் இருந்து ஆதரவு கிடைக்கும். வருமானம் அதிகரிக்கும். புதிய நண்பர்கள் உதவுவார்கள். கால்வருத்தம், சலவருத்தம், சளித்தொல்லைகள் இருக்கும். குருத்துறை, சட்டத்துறை, வியாபாரத்துறை சார்ந்தோர் புதிய திட்டமிட்டு நன்மைகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்கள் : ஞாயிறு, சனி.*

### மீனம்

இதுவரையும் உங்களை ஏமாற்றியவர்கள், உங்களிடம் அகப்பட இடமுண்டு. இடமாற்றங்களால் நன்மைகள் ஏற்படும். வீடு, மனை சம்பந்தமான மாற்றம், திருத்தம் சிலருக்கு பொருள் செலவைக் கொடுக்கும். இடுப்புவருத்தம், சளித்தன்மை, குடல் வருத்தம், சல வருத்தம், வைத்தியம்செய்து சுகமாக இடமுண்டு. வியாபாரிகள், ஆசிரியர்கள், வைத்தியர்களுக்கு பலமாற்றங்களும் புதிய பொறுப்புக்களும் வர இடம் உண்டு.

*அதிர்ஷ்டநாள்கள் :- ஞாயிறு, சனி.*

**மகாதேவா ஜோதிடம்**

---

# ராஜீவ்காந்தி கொலை விவகாரம்: காங்கிரஸ் நிலையில் தலைகீழ் மாற்றம்!

சென்னை,மே9

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலையில் சம்பந்தப்பட்டுள்ள விடுதலைப் புலிகளுக்கும் தி.மு.கவுக்கும் உள்ள தொடர்பை விசாரிக்கவேண்டும் என்று மத்திய உள்துறை அமைச்சர் அத்வானியிடம் 1998ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 19 ஆம் திகதி கோரிக்கை மனு அளித்த காங்கிரஸ் கட்சி, தற்போதைய மக்களவைத் தேர்தலில் வெற்றி பெறவேண்டும் எனபதற்காகத் தனது நிலையை அடியோடு மாற்றிக்கொண்டுவிட்டது.

ராஜீவ்கொலை வழக்குத் தொடர்பாக விசாரித்த ஜெயின் ஆணைக் குழு அளித்த இடைக்கால அறிக்கையின் அடிப்படையில், தி.மு.க. மது நடவடிக்கைகோரி, தி.மு.க. இடம்பெற்றிருந்த ஐக்கியமுன்னணி அரசுக்கு அளித்த ஆதரவை விலக்கிக்கொண்டது காங்கிரஸ் கட்சி. அம முடிவை கட்சியின் அப்போதைய தலைவர் சீதாராம்கேசரி எடுத்திருந்தார்.

பிறகு சோனியாகாந்தி தலைவராகப் பதவியேற்ற பிறகு, தி.மு.கவுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான தொடர்பு குறித்து விசாரிக்கவேண்டும் என்று 1998 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 19இல் அப்போதைய உள்துறை அமைச்சர் அத்வானியிடம் கோரிக்கை மனு அளித்தனர் மூத்த காங்கிரஸ் தலைவர்கள்.

பிறகு ஒரு வாரம் கழித்துத் தங்களுடைய கோரிக்கை மீது மத்திய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கோரி நினைவூட்டல் கடிதம் கூட எழுதினர் காங்கிரஸார்.

ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் பத்மநாபா கொலைக்கும் ராஜீவ் கொலைக்கும் தொடர்பு இருப்பதாகவும் இரு வழக்குகளிலும் 6 பேர் பொது எதிரிகள் என்றும் கூட காங்கிரஸார் தங்களுடைய மனுவில் குறிப்பிட்டிருந்தனர்.

ஆனால், தி.மு.கவுடன் கூட்டணி என்று தீர்மானித்தபிறகு சென்னைக்கு வந்த சோனியா காந்தியிடம் இதுபற்றிக் கேட்டபோது, ஜெயின் ஆணைக் குழு இறுதி அறிக்கையில் தி.மு.க. தலைவர் கருணாநிதி மீது எந்தக் குற்றமும் இல்லையென்று கூறிவிட்டதாகத் தெரிவித்தார்.

காங்கிரஸின் கோரிக்கை அரசின் கோப்புகளில் இன்னமும் இருக்கும்போதே, கருணாநிதி குற்றமற்றவர் என்ற தீர்ப்பை வழங்கிவிட்டார் சோனியா காந்தி. (ஒ)

# ஈராக்கின் காபந்து அரசை அங்கீகரிக்கத் தீர்மானம்

## ஐ.நாவில் சமர்ப்பிக்கப்படும்

நியூயோர்க்,மே9

ஈராக்கில் காபந்து அரசு அமைப்பதை அங்கீகரிக்கக்கோரும் தீர்மானம் விரைவில் ஐ.நா.பாதுகாப்புச் சபையில் கொண்டுவரப்படவுள்ளது. இநதத் தீர்மானத்திற்கு ஆதரவு திரட்டும் பணியில் பிரிட்டன் ஈடுபடவுள்ளது. பாதுகாப்புச் சபை உறுப்பினர் நாடுகளுடன் பேச்சுநடத்தவும் அந்த நாடு திட்டமிட்டுள்ளது.

ஈராக்கின் ஆட்சி அதிகாரம் எதிர்வரும் ஜூன் மாதம் 30ஆம் திகதி அந்நாட்டவர்களிடம் ஒப்படைக்கப்படும் என அமெரிக்கா கூறிவருகிறது. அன்றையதினம் முதல் ஈராக்கில் அமெரிக்கப் படைகளின் ஆக்கிரமிப்பு முடிவிற்கு வரவுள்ளது.

இதற்காக ஈராக்கில் காபந்து அரசு அமைக்கும் பணியில் அமெரிக்காவும் அதன் கூட்டுநாடான பிரிட்டனும் தீவிரமாக ஈடுபட்டுள்ளன. ஈராக்கில் காபந்து அரசு அமைப்பதையும் அங்கு பன்னாட்டுப் படைகளைப் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்துவதையும் அங்கீகரிக்கும் வகையில் ஐ.நா. பாதுகாப்புச் சபையில் புதிய தீர்மானம் ஒன்றும் விரைவில் கொண்டு வரப்படவுள்ளது.

இந்தத் தீர்மானத்தை அமெரிக்காவும் பிரிட்டனும் தயாரித்து வருகின்றன. ஈராக்கில் இடைக்கால அரசு அமைக்கப்பட்டவுடன் இந்தத் தீர்மானம் பாதுகாப்புச் சபையில் கொண்டு வரப்படும். இந்தப் புதிய தீர்மானத்துக்கு ஒப்புதல் வழங்குவதற்காக ஐ.நா.பாதுகாப்புச் சபையில் இடம்பெற்றுள்ள நாடுகளின் தூதர்களுடன் விரைவில் பிரிட்டன் பேச்சுநடத்தவுள்ளது.

ஈராக் தொடர்பான தீர்மானத்தில் அங்கு காபந்து அரசு ஒப்புதல் வழங்கும்படி கோருவதோடு அமெரிக்கா தலைமையிலான பன்னாட்டுப் படைகள் அங்குதொடர்ந்து அமைதிகாக்கும் பணியில் ஈடுபடவும் அனுமதி கோரப்படும். அத்துடன், ஈராக் பாதுகாப்புப் படையினரும் அமெரிக்காவின் கட்டுப்பாட்டில் இருப்பர். பாதுகாப்பு விடயங்களில் ஈராக் படையினர் தங்களின் அதிகாரத்தை முழு அளவில் பயன்படுத்தும் நிலையில் இல்லாததால் முதல்கட்டமாக இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் கூறப்படுகிறது. (ஒ)

# சதாமை வீழ்த்த எடுத்த நடவடிக்கைகள் தேவையற்றவை என அமெரிக்கர் கருத்து

வாஷிங்ரன்,மே9

ஈராக்கின் முன்னாள் அதிபர் சதாம ஹுசைனை பதவியிலிருந்து வீழ்த்த அமெரிக்கா செலவிட்ட தொகை மற்றும் உயிரிழப்பைப் பார்க்கும்போது வீண் போலவே தெரிகிறது என்று அமெரிக்காவின் 47 சதவீதம் பேர் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

என்.பி.சி.வோல்ட் ஸ்ட்ரீட் ஜோர்னல் ஆகியவை இணைந்து இந்த கருத்துக் கணிப்பை அண்மையில் நடத்தின. அதன் முடிவு கடந்த புதன் கிழமை இரவுவெளியிடப்பட்டது.

42 சதவீத வாக்காளர் சதாமை வீழ்த்த ஆன பொருள்செலவு, உயிரிழப்பு என்பன நியாயமானவையே என்று தெரிவித்துள்ளனர்.

இதற்கு முன்பாக மார்ச் மாதத்திலும் என்.பி.சி.வோல்ட் ஸ்ட்ரீட் ஜோர்னல் இணைந்து கருத்துக்கணிப்பு நடததின. அப்போது சதாமை வீழ்தத மேற்கொண்ட நடவடிக்கை நியாயமானதே என்பதற்கு ஆதரவாக 50 சதவீதம் பேர் வாக்களித்திருந்தனர்.

ஒன்றரை ஆண்டுகளில் அமெரிக்கத்துருப்புக்களை ஈராக்கிலிருந்து வாபஸ் பெறவேண்டும் என்பதை 55 சதவீதம்பேர் ஆதரிக்கின்றனர்.

தேவைப்படும் வரையில் ஈராக்கிலேயே அமெரிக்கப் படைகள் இருக்க வேண்டும் என்பதை ஜனவரியில் நடந்த கருத்துக் கணிப்பின் போது 56 சதவீதம் பேர் ஆதரித்திருந்தனர். இப்போது அந்த விகிதம் 44 ஆகக் குறைந்துவிட்டது.

ஈராக் போர்க் கைதிகளை அமெரிக்கத் துருப்புகள் சித்திரவதை செய்துள்ளன என்ற குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளநிலையில் புதிய கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டது.

சனிக்கிழமைமுதல் திங்கட்கிழமை வரை நடந்த இந்தக் கருத்துக்கணிப்பில் ஆயிரத்து 12 பேர் பங்கேற்றனர்.

# இந்திய முன்னாள் படைவீரர்கள் ஈராக்கில் பாதுகாப்புப் பணியில்

புதுடில்லி,மே9

இந்தியாவிலிருந்து முன்னாள் படைவீரர்கள் பாதுகாப்புப் பணிக்காகச் சட்ட விரோதமாக ஈராக்குக்கு அனுப்பப்படுகிறார்கள் என்றும் -

இதில் ஈடுபடும் நிறுவனங்கள் மீது கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் -

இநதிய குடியுரிமைப் பாதுகாப்புத் துறை எச்சரித்துள்ளது.

இது தொடர்பாக இத்துறையின் தலைவர் டி.எஸ்.பூணியா புதுடில்லியில செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

குவைத், ஜோர்தான் போன்ற நாடுகளில் வர்த்தக நிறுவனங்களுக்கு பாதுகாப்பு ஊழியர்கள் தேவை என்று சில நிறுவனங்கள் விளம்பரப்படுத்துகின்றன. இந்தவகையில், முன்னாள் படைவீரர்கள் தெரிவுசெய்யப்படுகின்றனர். அவர்கள் சட்டவிரோதமாக ஈராக்குக்கு அனுப்பப்படுகிறார்கள். அங்கு அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படைகளின் முகாம்களில் அவர்கள் பணிக்கு அமர்த்தப்படுகிறார்கள். இதுதொடர்பாக பல முறைப்பாடுகள் எமக்குக் கிடைத்துள்ளன. நாம் இது குறித்து விசாரணை மேற்கொண்டு வருகிறோம். இத்தகைய நடவடிக்கையில் ஈடுபடும் நிறுவனங்கள்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார் அவர்.

ஈராக்கில் நிலவும் பாதுகாப்பற்ற சூழ்நிலை காரணமாக இந்தியாவிலிருந்து அங்கு பணிக்கு ஆள்களை அனுப்ப இந்திய அரசு தடை விதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ)

# KUPID FORT கியுபிட் போட்

## Capsules (இது ஓர் இந்தியன் தயாரிப்பு)



பிரசித்தி பெற்ற, ஆயுர்வேத மூலிகைகளைக் கொண்டு இந்தியாவில் தயாரிக்கப்பட்ட ஒரு மாத்திரை, சர்வதேச உலகில் எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்ட ஒரு சிறந்த ஔஷதம். கியுபிட் போட் கீழ்க்காணும் பிரச்சினைகளைச் சீர்செய்யும்.

- ஆண் வீரியமின்மை, மலட்டுத் தன்மையைப் போக்க
- வயது முதிர்ந்தோரின் பாலியல் பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வு
- சாதாரண பாலியல் குறைபாடுகளைச் சரிப்படுத்த ஒன்று. இரண்டு மாத்திரைகளைத் தொடர்ந்து ஒருமாதம் பாவித்து சிறந்த பயனைப் பெறுங்கள்

100% ஆயுர்வேத மூலிகைகளால் தயாரிக்கப்பட்டது.

எதுவித பக்க விளைவுகளும் கிடையாது.

கியுபிட் போட் வில்லைகள் தாம்பத்திய வாழ்வில் ஒரு மறுமலர்ச்சி.

கியுபிட் போட் என்று பெயர் சொல்லிக் கேட்டு வாங்குங்கள்.

**நாடெங்கிலும் உள்ள சகல பார்மஸிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்**

**வைத்திய ஆலோசனையைப் பெற்று சிறந்த பயனை அடையுங்கள்**

(30037)


## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்

# வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்

1 தொடக்கம் 4 வரையான வேலைகளுக்கு இக்ராட் (ICTAD) M9 ஒப்பந்தகாரர்களிடம் இருந்தும், 5ஆவது வேலைக்கு அலுமினியம் பிரிவிடுதல் வேலையில் தகுதியுள்ள தச்சுவேலை ஒப்பந்தகாரர்களிடமிருந்தும் மற்றும் பிரதேச சபையில் பதிவுசெய்த ஒப்பந்தகாரர்களிடமிருந்தும் பின்வரும் வேலைகளுக்கான கேள்விகள் கோரப்படுகின்றன. கீழ்க்குறித்த வேலைகளுக்கான கேள்வி வைப்புப் பணத்தையும், கேள்விப்பத்திரக் கட்டணத்தையும் செலுத்திப் படிவத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

1. கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி - 10.05.2004 - 17.05.2004 வரை
2. கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் திகதி - 18.05.2004 நண்பகல் 12 மணிவரை
3. கேள்வி திறக்கப்படும் திகதி - 18.05.2004 பி.ப. 2மணி வரை
   (திறக்கப்படும் சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்)
4. கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச்சபைக்கு அதிகாரமுண்டு.
5. மூல கேள்விப்பத்திரத்தை அரக்கு முத்திரையிட்டு *செயலாளர், வலி.தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்* என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அல்லது தலைமைக் காரியாலயத்திலுள்ள கேள்விப்பெட்டியில் 2ஆம் பந்தியில் குறிப்பிட்டதற்கமைவாகக் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும். பிரதி, *பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், செட்டித்தெரு, நல்லூர், யாழ்ப்பாணம்* என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.
6. மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

| வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் | vat வரி 20% |
|---|---|---|---|
| 1. நவாலி ACTM வீதி புனரமைப்பு | 3000 | 500 | 100 |
| 2. மானிப்பாய் செக்காலை வீதி புனரமைப்பு | 2500 | 500 | 100 |
| 3. பண்டத்தரிப்பு பட்டின சந்தை சுற்று மதில் மீள் புனரமைத்தல் | 3000 | 500 | 100 |
| 4. பிப்பிலி மயான மதில் மீள்புனரமைத்தல் | 3500 | 500 | 100 |
| 5. பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகத்தை அலுமினியம் பிரிவிடுதல் | 3500 | 500 | 100 |


பி.விக்டர்,
செயலாளர்,
வலி. தென்மேற்கு பிரதேச சபை,
மானிப்பாய்.

(சி-34753)
(21-19-14)

## 31ஆம் நாள் நினைவலைகள்

"வாழ்வு மாறுபடுகிறதேயன்றி அழிக்கப்படுவதில்லை"

அன்னையின் அணைப்பில் 10 - 03 - 1931



ஆண்டவன் அழைப்பில் 09 - 04 - 2004

### அமரர் பர்னாந்து அந்தோனிப்பிள்ளை


அன்பின் ஐயாச்சியே,
நீங்கள் எம்மைவிட்டுப் பிரிந்து மாதமொன்று சென்றாலும்
உங்கள் நினைவுமட்டும் எம்மை விட்டுப் பிரியவில்லையே!
மீண்டும் நாம் சேர்ந்து மகிழும் காலம்தான் எப்போதோ?

உங்கள் முகம் காண ஏங்கும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள் மற்றும் உறவினர்.

*பத்திமா கோயிலடி,*
*பண்டத்தரிப்பு.* (31716)(21-19-14)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

அன்னை மடியில் 21 - 12 - 1960



ஆண்டவன் அடியில் 21 - 04 - 2003

### அமரர் மகாலிங்கம் கமலதாஸ் (சிராசா)

(தாவடிச் சந்தி மரக்காலை உரிமையாளர்)

திதி: 09-05-2004

ஓராண்டு சென்றாலும் ஒரு யுகம் ஆனாலும் ஓயாது உம் நினைவு
எமது கண்ணீரை பூக்களாய் காணிக்கையாக்குகின்றோம்.
அன்புக்கும் பண்புக்கும் இலக்கணமாய் வாழ்ந்தீர்
மனிதருள் மாணிக்கமாய் மகத்துடனே திகழ்ந்தீர்
எங்கள் கடமையைச் செய்வீர் என நினைத்திருந்தோம்
உங்கள் கடமையைச் செய்ய ஆண்டவன்
அனுமதியால் ஆற்றுகின்றோம்.

எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஓராண்டுக் கிரியைகளில் கலந்துகொண்டு ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு, மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.


அன்னாரின் பிரிவால் துயருறும்:
*மனைவி: க. விஜயகுமாரி (மத்திய மருந்தக ஊழியர்)*
பிள்ளைகள்: *க. பிரபாகரச்செல்வன்,*
*க. தமிழரசி,*
*அம்மா.*

இணுவில்.

(31714)(21-14-19)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 25 - 06 - 1941



மறைவு 21 - 04 - 2003

### அமரர் சின்னத்துரை கிருஷ்ணசாமி

திதி: 09.05.2004

ஓராண்டு ஆனதையா ஆனால் உங்கள் நினைவுமட்டும்
எங்கள் நெஞ்சை விட்டு அகலவில்லை
பாசமுடன் எம்முடன் பழகி நேசமுடன் அரவணைத்த
அன்புத் தெய்வமே தேசத்தை விட்டேகி
ஆண்டொன்று சென்றாலும் ஆறாத நினைவோடு வாழ்கிறோம்
வாடிடும் எம் மனமறிந்து தேறுதல் சொன்னீர்களே
வாழ்வைத் தொலைத்த பாவி இங்கே
விழிநீராய் முகம் நனைந்து தேடி அலைகிறாள்
பாசமுடன் வளர்த்த மகனும்
தொலைபேசி மூலம் கதறி அழுகிறான்
நீங்கள் நடமாடின வீடு ஒளியிழந்து கிடக்குதையா
பேர்த்தி அம்மனை விட்டுப்போக எப்படி மனம் வந்தது?
காலன் கவர்ந்து சென்றானோ உங்கள் இன்னுயிரை
மரணம் என்பது எப்போது வருமென்று சொல்லமுடியாது
என நிருபித்து விட்டீர்கள்
உங்கள் நினைவுடனேயே - இப்
பூவுலகில் வாழ்கிறோம்.

*உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்.*
*ஓம் சாந்தி!*

அன்பு மனைவி.
மகன் செல்வராசா குடும்பம்
மற்றும் குடும்பத்தினர்.

கோண்டாவில் கிழக்கு,
ஞானவைரவர் வீதி,
கோண்டாவில். (31691)(30-21-14-19)

உதயன்

## பாரதத்தின் 'அளப்பு'!

இலங்கைத் தமிழ் ஊடகங்கள் மீது சீறிப்பாய்ந்திருக்கின்றார் இந்தியத்தூதுவர் நிருபம் சென்.

தமிழ் ஊடகங்கள் மீது - குறிப்பாகத் தமிழ்ப் பத்திரிகைகள் மீது - இந்தியத் தூதுவர் சென் சீறிப் பாய்வது இது முதல் தடவையல்ல.

கடந்த ஆண்டு பெப்ரவரி 15 ஆம் திகதி கண்டியில் நடைபெற்ற இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் 33 ஆவது தேசிய மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய சமயமும் தமிழ்ப்பத்திரிகைகள் மீது 'சூடு' போட எத்தனித்தவர் நிருபம் சென்.

"தமிழ்ப்பத்திரிகைகள் இந்தியாவுக்கு எதிராக விசமத்தனமானதும், நம்பகத்தன்மையற்றதுமான வகையில் செய்திகளை வெளியிடுகின்றன. இவை எவ்வளவு பிரயத்தனம் செய்தாலும் இலங்கை - இந்தியா ஆகிய இரு நாடுகளுக்கும் இடையில் உள்ள உறவைத் துண்டித்து விடமுடியாது. இந்தப் பத்திரிகைகளுக்கு எழுத்துமூலம் பதிலளித்து நேரத்தை வீணடிக்க விரும்பவில்லை. எமது செயற்பாட்டின் மூலம் பதிலடி கொடுப்போம்" - என்று அப்போது பாய்ந்திருந்தார் அவர்.

பதில் கூறித் தனது நேரத்தை வீணடிக்கத் தகுதியில்லாத பத்திரிகைகள் மீது - தாம் தமது செயற்பாட்டு நடவடிக்கை மூலம் பதிலடி கொடுக்கத் தீர்மானித்த ஊடகங்களுக்கு எதிராக - சுமார் பதினைந்து மாதங்கள் கழித்து இப்போது வார்த்தைகளைக் கொட்டியிருக்கிறார் தூதுவர் சென்.

தமிழ்ப் பத்திரிகைகள் நேர்மையற்ற முறையிலும், தேவையற்ற விதத்திலும் இந்தியாவை விமர்சிப்பதாக அவர் கடுமையாகச் சாடியிருக்கின்றார். இலங்கையில் நடைபெற்ற பல்வேறு சம்பவங்களுக்கு இந்தியா மீது இந்தப் பத்திரிகைகள் அபாண்டமாகக் குற்றஞ்சுமத்துவதாகவும் பொருமியிருக்கிறார் அவர்.

*"அதி உத்தம தூதுவர் அவர்களே!*

*நீங்கள் - அதாவது உங்கள் நாடு - அயல்நாடுகளின் விடயத்தில் - குறிப்பாக இலங்கை விடயத்தில் - நேர்மையாகவும், நீதியாகவும் நடந்துகொள்வது போலவும், தமிழ் ஊடகங்கள் வேறு வேலையின்றி இந்தியாவைத் தூற்றுவது போலவும் ஒரு படம் காட்ட முயல்கின்றீர்கள். அதன்மூலம் காந்தி தேசத்தைப் புனிதப் பூமியாக்கிவிடலாம் என்று கற்பனை பண்ணுகின்றீர்கள்.*

*"நீங்கள் குறிப்பிடுவது போல - நாங்கள் எல்லோரும், ஏன் முழு உலகமுமே வியந்து போற்றுகின்ற விவேகானந்தர், மகாத்மாகாந்தி போன்ற மகான்கள் - மாமனிதர்கள் - அவதரித்ததால் மட்டும் இந்தியா புண்ணிய பூமியாகி விடாது. அந்தப் பெரும் புருஷர்கள் காட்டிய வழியில் அந்த நாடு உண்மையாக நடக்கவும் வேண்டும்.*

*"காந்தி தேசத்துக்கு காந்தியத்தைப் போதித்த தியாகி திலீபன், அன்னை பூபதி போன்ற பெரும் ஈகையாளர்கள் அவதாரம் எடுத்த புண்ணிய பூமி நமது தேசம். தியாகி திலீபன் போதித்த காந்திய தத்துவத்தைப் புரிந்துகொள்ள முடியாத - உங்கள் நாடும் உங்கள் அரசும் - காந்தியத் தத்துவத்துக்குச் சொந்தம் கொண்டாடும் அருகதையே அற்றவை என்பதை முதலில் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.*

*"இலங்கை அரசியலில் மறைவில் இருந்து கொண்டு நீங்கள் புரியும் குசும்பு வேலைகள், திரைமறைவு சதிகள், பின்கதவு நடவடிக்கைகள், பணத்தைக் காட்டிப் பண்ணும் மாய்மாலங்கள் போன்றவை சாட்சியங்கள் வைத்து நிரூபிக்கப்படமுடியாதவை என்ற திராணியில், தமிழ் ஊடகங்களைப் பார்த்து நீங்கள் தத்துவம் பேசுகின்றீர்கள்*

*தூதுவர் அவர் களே!*

*"இதே தூதரகத்தில் நீங்கள் பிரதித் தூதுவராக இருந்த காலத்தில் நடந்தவற்றை சற்று மீள நினைவுபடுத்திக் கொள்ளுங்கள்.*

*"இன்று இந்த நாடு இப்படிச் சீரழிந்து கிடப்பதற்கு எந்தப் 'புண்ணிய பூமி' காரணம் என்ற உண்மை அப்போது உங்கள் மனதையே சுடும்.*

*"ஈழத் தமிழ்மக்கள் மத்தியிலே முகிழ்ந்த விடுதலை உணர்வை உங்கள் பூகோள, அரசியல் நன்மைக்குப் பயன்படுத்த முயன்றதும் -*

*"உண்மையான விடுதலை உணர்வு மிக்க அமைப்பை விடுத்து, அதற்குப் போட்டியாக - கொள்கை, இலட்சியம், உறுதிப்பாடு இல்லாத குழுக்களை போராளி வேடம் பூணுவித்து, ஆயுதப் பயிற்சி அளித்து, தமிழரின் விடுதலை வேட்கையைச் சின்னாபின்னமாக்கிப் பலவீனப்படுத்தியதும் -*

*"பயிற்சிகளைக் கொடுத்தும், ஆயுதங்களை வழங்கியும் தமிழ்ப் போராளிகளைத் தூண்டிவிட்டாலும், அவர்கள் தங்கள் விடுதலை இலக்கை அடையமுடியாத வகையில் மட்டுப்படுத்தும் கட்டுப்பாடுகளைக் கனகச்சிதமாகப் பேணியதும் -*

*"இவ்வளவும் செய்துகொண்டே - இப்போது நீங்கள் பூண முயலும் அதே நல்ல பிள்ளை வேடத்தை - அப்போதும் பூண்டுகொண்டு, ஈழத் தமிழ்ப் போராளிகளின் பயிற்சி முகாம்களே உங்கள் பூமியில் இல்லை என்று இப்போதும்போல அப்போதும் சர்வதேச சமூகத்துக்கே 'உண்மை' பேசியதும் -*

*"உங்கள் வல்லாதிக்க பலத்தை வைத்துக்கொண்டே இந்தச் சிறிய தீவு மீது உங்கள் தீர்மானத்தை இந்திய - இலங்கை ஒப்பந்தம் என்ற பெயரில் வலோற்காரமாகத் திணித்து, அதன் விளைவாக, மோசமாக அவமானப்படும் விதத்தில் வாங்கிக்கட்டிக்கொண்டு நாட்டுக்கு நடையைக் கட்டியதும் -*

*"அழையா விருந்தாளியாக ஈழத் தமிழர் தாயகத்துக்குள் அமைதிப்படை என்ற பெயரில் புகுந்து, ஆக்கிரமித்து, உங்கள் படைகள் புரிந்த - மறக்கவே முடியாத நிலையான வடுக்களை ஏற்படுத்திய - அட்டூழியங்கள் போன்றவையும் -*

*"உங்களுக்கு நினைவில் இருந்து மறந்திருக்காது என நம்புகிறோம்.*

*"பாரதத்தின் இவ்வளவு நற்சான்றுச் சாதனைகளையும் விவரித்தால் அதுவே ஒரு மகாபாரதமாகிவிடும்.*

*"இந்தச் சாதனைகளை உங்கள் காலத்திலும் நீங்கள் முழு அளவில் தொடரப் பல்வேறு குயுக்திகளைப் பண்ணுகின்றீர்கள். உங்கள் வாய்வீச்சு மூலம் அதனை மூடிமறைக்க நீங்கள் முயல்வது சூரியனைத் தடுக்குப் போட்டு மூடி மறைக்க முயல்வதற்கு ஒப்பானதாகும்."*

# மகஸின் சிறையின் வசதியீனம் குறித்து கிஷோர் எம்.பிக்கு கைதிகள் 'பக்ஸ்'

வவுனியா,மே9

மகஸின் சிறைச்சாலையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள், தாம் பல்வேறு சிரமங்களின் மத்தியில் அங்கு வசித்து வருவதாகத் தமிழ்க் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோருக்கு அனுப்பிவைத்துள்ள தொலைநகலில் தெரிவித்துள்ளனர்.

அந்தக் கடிதத்தில் 7 பேர் கையொப்பம் இட்டுள்ளனர்.

தங்களைக் களுத்துறைச் சிறைக்கு மாற்றுமாறு கோரியதாகவும் -

அதற்காகச் சிறைச்சாலை ஆணையாளரைச் சந்திக்க முயற்சி செய்தும் அம்முயற்சி கைகூடவில்லை என்றும் -

அத்துடன், சுமார் 23 மணித்தியாலங்கள் தாங்கள் பூட்டி வைக்கப்பட்டு இருப்பதால் உடல் மோசமாகப் பாதிப்புற்று உள்ளதுடன், கண் பார்வையும் பாதிப்புக்கு உள்ளாகி இருப்பதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

தங்களுடன் தடுத்துவைக்கப்பட்டுள்ள கைதிகள் மோசமானவர்களாக இருப்பதன் காரணமாகத் தமக்கு உயிர் ஆபத்து இருப்பதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மகஸின் சிறையில் நீண்டகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளுக்கு எந்தவிதமான அடிப்படை வசதிகளும் இல்லை. பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்படாத நிலையில் இவர்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். பொழுது போக்குச்சாதனங்கள், பேச்சுச்சுதந்திரம் எதுவும் அங்கு கிடையாது. தமிழ் மக்களுக்கு எதிராகக் காலத்திற்குக் காலம் எப்படிப் பிரச்சினைகள் கட்டவிழ்த்துவிடப்பட்டதோ அதேபோன்று இங்கும் எமக்கு எதிராக அவ்வப்போது பிரச்சினைகள் மேற்கொள்ளப்படுகின்றன. எம்மைக் கொலைசெய்வதற்கும் சில திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

நேரடியாகவும் மறைமுகமாகவும் எமக்கு எதிராகச் செயற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள், பாதாள உலகக் குழுவைச் சேர்ந்தவர்களும் இராணுவத்தில் இருந்து தப்பிவந்தவர்களும், கொலை-கொள்ளை - போதைப்பொருள் சம்பவங்களில் ஈடுபட்டவர்களும் ஆவர். இங்கு அடிப்படைத் தேவைகள்கூடப் பூர்த்தியாகாத நிலையிலேயே வாழ்கிறோம். நீதிபதிகள், நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் தொடர்புகொண்டபோதிலும் பிரயோசனம் எதுவும் கிடைக்கவில்லை - இப்படி அதில் உள்ளது.

இக்கடிதம் கிடைத்தவுடன் தாம் மகஸின் சிறைச்சாலைப் பொறுப்பதிகாரி குணரத்தின குரூப்பு மற்றும் சிறைச்சாலை ஆணையாளருடன் தொடர்புகொண்டதாகவும் -

இதனையடுத்து, சிறைச்சாலையில் சில அடிப்படைத் தேவைகளை உடனடியாகப் பூர்த்திசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் -

அடுத்த வாரமளவில் தாம் மகஸின் சிறைச்சாலைக்குச் செல்லவுள்ளதாகவும் சி.கிஷோர் எம்.பி. தெரிவித்தார்.(எ-9-164)

# வடக்கு - கிழக்கு கிராமிய வங்கிகளுக்கு 'நிகொட்' உதவியுடன் தளபாடங்கள்

## அண்மையில் ஒப்பந்தம் கைச்சாத்து

கொழும்புத்துறை,மே9

வடக்கு - கிழக்குச் சமூக அபிவிருத்தி நிறுவனமான 'நிகொட்' அமைப்பின் உதவியுடன் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள 9 கூட்டுறவு மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 97 கூட்டுறவுக் கிராமிய வங்கிகளுக்குத் தளபாடங்கள் வழங்கப்படவுள்ளன.

இதற்கான ஒப்பந்தம் ஒன்று அண்மையில் திருகோணமலையில் உள்ள 'நிகொட்' அலுவலகத்தில் வைத்துக் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை பல நோ.கூ. சங்கத் தலைவர் தி.சுந்தரலிங்கம், பொது முகாமையாளர் என்.ஜெயராசா, 'நிகொட்' பணிப்பாளர் ஆகியோர் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

இதேவேளை, இந்த ஒப்பந்தத்தின்கீழ் யாழ். மாவட்டத்தில் உள்ள 26 கூட்டுறவு நிறுவனங்களிலுள்ள 34 கூட்டுறவு கிராமிய வங்கிகளுக்கும் அலுவலக மேசைகள், இரும்புப் பெட்டிகள், அலுமாரி, கதிரை போன்ற தளபாடங்களை வழங்குவதற்கென சுமார் 21 லட்சத்து 11 ஆயிரம் ரூபாவை 'நிகொட்' வழங்கவுள்ளதாகவும் கூறப்பட்டது.

யாழ். மாவட்டத்தில் உள்ள 31 கிராமிய வங்கிகளுக்கும், 3 பனை தென்னை, வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களிலும் உள்ள கிராமிய வங்கிகளுக்கும் இந்த உதவிகள் பகிர்ந்தளிக்கப்படவுள்ளன.

இந்த உபகரணங்களை வழங்குவதற்கு யாழ்ப்பாணம் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் செ.கனகசபாபதியின் நேரப்படி கண்காணிப்பில் ஊர்காவற்றுறை பல நோ.கூ. சங்கம் முகவராகச் செயற்படும் - என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

(எ-30)

# நூறு விவசாயக் கிராமங்களை அபிவிருத்தி செய்வதற்கு ஏற்பாடு

## கமநலத் திணைக்களக் கூட்டத்தில் யாழ். அரச அதிபர் தகவல்

யாழ்ப்பாணம்,மே9

குடாநாட்டிலுள்ள நூறு விவசாயக் கிராமங்கள் 'நியாப்' திட்டத்தின்கீழ் அபிவிருத்தி செய்யப்படும். இதற்கான நடவடிக்கைகளை யாழ்.மாவட்ட செயலகம் மேற்கொண்டுள்ளது.

இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன்.

குடாநாட்டின் விவசாய நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்யும் வகையில் புதிய விவசாயத்திட்டம் தயாரிப்பது தொடர்பான கூட்டம் ஒன்று கடந்த வியாழக்கிழமை கமநல அபிவிருத்தித் திணைக்களத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய போதே அரச அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரச அதிபர் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ். மாவட்டத்தில் நவீன முறையில் விவசாய நடவடிக்கையை அபிவிருத்தி செய்வதற்குப் பல அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் முன்வந்துள்ளன. அவற்றின் மூலம் கிடைக்கும் உதவிகளைக்கொண்டு தமது விவசாய நடவடிக்கைகளை விருத்தி செய்ய விவசாயிகள் முன்வரவேண்டும். இது விவகாரத்தில் விவசாயிகளுக்கு வேண்டிய உதவிகளை யாழ். செயலகத்தினூடாக வழங்குவதற்கு நான் தயாராகவுள்ளேன்.

யாழ். மாவட்டத்தில் கடந்த பல வருடகாலமாக விவசாய ஆராய்ச்சி, விவசாயப்பயிற்சி, விவசாயத்தின் ஏனைய விரிவாக்கங்கள் தொடர்பாக ஆராயப்படுகின்றன. இவற்றின் மூலம் ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடும்போது எமது மாவட்டத்திலேயே பல வகையான விவசாய முன்னெடுப்புக்களை விவசாயிகள் மேற்கொண்டுவருவதை அவதானிக்கமுடிகிறது.

ஆனால், எமது மக்கள் தாம் தொடர்ந்தும் வறுமைக்கோட்டின்கீழ் வாழ்ந்து வருவதாகவே தெரிவிக்கின்றனர். விவசாய அபிவிருத்தி தொடர்பான பல கூட்டங்கள் நடத்தப்படுகின்றபோதும் விவசாயிகள் அதில் தமது பிரச்சினைகள் பற்றித் தெரிவிப்பதில்லை.

எனவே, விவசாயிகள் வறுமைக்கோட்டின்கீழ் வாழவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுமா என நாம் ஆராயவேண்டும். தற்போது பல நிறுவனங்கள் மூலம் விவசாயிகளுக்கு விவசாய உள்ளீடுகள், இயந்திர உபகரணங்கள் என்பன இலவசமாக வழங்கப்படுகின்றன. இவற்றின் மூலம் விவசாயிகள் சிறந்த முறையில் விவசாயச் செய்கையினை மேற்கொண்டு தமது வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும்.

எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் முதல் 'நியாப்' திட்டத்தின் கீழ் விவசாயக் கிராமங்களை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும்.

இவ்வாறான திட்டங்கள் மூலம் எமது வடபகுதியானது விவசாயச்செய்கையில் மேம்படுத்தப்படவேண்டும் - என்றார் அவர்.

இந்தக்கூட்டத்தில் சகல பிரதேச செயலாளர்கள், உதவி அரச அதிபர்கள், விவசாய, கமநல சேவைத்திணைக்கள அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர். (எ-6-5)

### நாளை

சித்திரை 28
திங்கட்கிழமை
(10.05.2004)
திதி : ஷஷ்டி
பகல் 12.41 வரை.
நட்சத்திரம்: உத்தராடம்
பகல் 4.03 வரை.
சுபநேரம்: 11.54 - 1.24
ராகுகாலம்: 7.24 - 8.54
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

சிரங்கு பிடித்த குரங்கின் கை சும்மா இருக்காது என்பது, அரசியலில் ஈடுபட்டவன் அதிலிருந்து வெளியேற முடியாமைக்கு ஒப்பானது.

# சுகாதார சேவைகள் சங்கம் அமைச்சர்களுடன் சந்திப்பு

## நாள் சம்பள ஊழியர் பற்றியும் ஆராய்வு

கொழும்பு,மே9

சுகாதார அமைச்சுடனான தொடர்புகளை உறுதியாக்கிக் கொள்ளவும் முரண்பாடான தீர்மானங்கள் எடுக்கப்படும்போது இணக்கப்பாட்டை ஏற்படுத்திக்கொள்ளும் வகையிலும் தொழிற்சங்க ஆலோசனைச் சபை ஒன்றை அமைக்கவேண்டுமென சுகாதார சேவைகள் தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு சுகாதார அமைச்சுக்கு ஆலோசனை கூறியுள்ளது.

இது தொடர்பாகக் கருத்து வெளியிட மேற்படி சங்கத்தின் அதிகாரி ஒருவர் இந்த யோசனையைச் சுகாதார அமைச்சர் நிமால் சிறிபாலடி சில்வா கொள்கையளவில் ஏற்றுக்கொண்டுள்ளதாகத் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் இப்படியான கருத்துப் பரிமாறும் அமைப்பு இருக்கவில்லையென்றும் - அடிக்கடி வேலைநிறுத்தங்கள் நடைபெற்றமைக்கு இதுவும் ஒரு காரணமாக இருக்கலாம் என்றும் - அவர் கூறினார்.

இப்படியான சந்திப்புக்கள் அடிக்கடி ஏற்பட்டிருந்தால் முன்னைய அரசின்போது வேலைநிறுத்தங்களும் தாமத வேலைகளும் இடம்பெற்றிருக்காது - என்றார் அவர்.

தொழிற்சங்கங்கள் தொடர்பான பிரதிப் பணிப்பாளர் ஒருவர் சுகாதார அமைச்சில் நியமிக்கபபடவேண்டும் என்று தாங்கள் ஆலோசனைகளைக் கூறியிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

நாள் சம்பள ஊழியர்களாகக் கடமையாற்றும் 4 ஆயிரத்து 500 ஊழியர்களுக்கு புதிய சம்பள உயர்வு வழங்கப்படாமை குறித்தும் தாங்கள் கலந்துரையாடியதாகக் கூறிய அவர், இது விடயத்தில் இணக்கம் எதுவும் ஏற்படவில்லையென்றும் சொன்னார்.

புதிய சம்பளவிகிதம் தொடர்பாகச் சில மாகாண சபைகள் இன்னமும் ஒப்புதல் வழங்கவில்லையென்றும் -

இந்நிலை தொடருமானால் தமது சங்கம் வேலைநிறுத்தம் ஒன்றை நடத்தும் என்றும் அவர் கூறினார். (ப)

உ
சிவமயம்

# இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் திருக்கோயில்



# மணிமண்டபத் திறப்புவிழாச் சிறப்பு மலர்

## இன்று (09.05.2004) ஞாயிற்றுக்கிழமை



## மூன்று மாடிகளைக் கொண்ட மணிமண்டபத்தின் அழகுத் தோற்றம்



### மூத்த பிரதம குருவின் ஆசியுரை



அருள் நிறைந்த ஆனைமுகன் குடி கொண்ட எங்கள் திருக்கோயிலின் சிறப்பினை அறியாதார் இல்லை. புதுமையும் பேரற்புதமும் நிறைந்த எங்கள் திருக்கோயில் மேற்கு வீதியில் சகல வசதிகளுடன் கூடிய ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் மணி மண்டபம் அமைக்கப்பெற்று இன்று திறப்பு விழா பொலிவு காண்பது நாம் பெற்ற பேறு எனலாம். மூன்று மாடிகளுடன் பிரமாண்டமாக அமைந்துள்ள மணிமண்டபத்தின் பிரதான நோக்கம் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கலாகும். இப்பணி எம்பெருமான் திருவருளால் என்றும் நிறைவாக நடைபெறப் பிரார்த்திக்கின்றோம். விநாயகப்பெருமான் எமது கிராமத்தின் சீர்நிறைவை என்றும் காத்து அருள்பாலித்தவண்ணமுள்ளார். அடியார்கள் தம் குலதெய்வம் தந்த நல் (11ஆம் பக்கம் பார்க்க)

### ஆதீனமுதல்வரின் அருளாசி

விநாயக அடியார்களே!

இணுவில் அருள்மிகு பரராஜசேகரப்பிள்ளையார் கோயில் வீதியில், அறப்பணிகளை நிறைவேற்றுவதற்காக



மூன்று மாடிகளைக் கொண்ட மணிமண்டபம் அமைக்கப்பெற்றமை அறிந்து ஆனந்தம் அடைகிறோம். சைவமும் தமிழும் தம் உயிரென உணர்வு பூர்வமாக மதிக்கும் மக்கள் வாழும் புண்ணிய பூமி இணுவில். கலைஞானச் செல்வர்கள், தர்ம உபகாரிகள், பண்டிதர்கள், பாவலர்கள் நிறைந்த இணுவைப்பதியின் ஞான முதல்வனாக அருள்மழை பொழிந்தவண்ணம் வாரி வழங்குபவர் பரராஜசேகர விநாயகர் ஆலயத்தில் நடைபெறும் நித்திய,- நைமித்திய விழாச்சிறப்பைக் கண்டு வியக்காதவர்கள் இல்லை. (11ஆம் பக்கம் பார்க்க)

### இளைய சிவாச்சாரியாரின் ஆசியுரை



ஓங்கார ஸ்வரூபியாக விளங்கும் விநாயகப் பெருமான் பேரருள் பாலிக்கும் திருக்கோயில் ஸ்ரீபரராஜசேகரப்பிள்ளையார் திருக்கோயிலாகும். பழம் பெரும் வரலாறு கொண்ட எம் திருக்கோயிலில் புதிய மணிமண்டபம் அமைக்கப்பெற்றிருப்பது மிகவும் மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். அவன் அருளாலே அவன் தாள் வணங்கி என்று மணிவாசகப் பெருமான் குறிப்பிட்டது போல் ஆனைமுகன் அருளாலே அரிய காரியம் இன்று நிறைவேறியுள்ளது. பல ஆன்மீகப்பணிகளை சீரியமுறையில் நிறைவேற்றக்கூடிய வகையில் மூன்று மாடிகளைக் கொண்ட பிரமாண்டமான மண்டபமாக இம்மண்டபம் இன்று அமைக்கப் பெற்றுள்ளது. தன்னை நாடிவரும் அடியவர்கள் வாழ்வை ஓங்கி மிளிரச்செய்பவர் எங்கள் பரராஜசேகர விநாயகர். அதனால் அவரது அடியவர்கள் தம் வாழ்வின் நன்றியை நாளுக்கு நாள் திருப்பணிகளால் நிறைவேற்றியவண்ணமுள்ளனர். தேசம் கடந்து வாழும் எங்கள் ஆலய அடியவர்கள் தம் குல தெய்வத்தை என்றும் மறப்பதில்லை. அவ்வகையில் மணிமண்டபத்திருப்பணியை (11ஆம் பக்கம் பார்க்க)

### நன்றியுரை





அன்புடையீர்! வணக்கம்

பரராஜசேகரப் பிள்ளையார் திரு வருளை முன்னிட்டு, எங்களை ஆளாக் கித் தோள்மீது சுமந்து கோயில் கும்பிட வைத்து நிறை வழிகாட்டிய எம்பெற் றோரை நினைந்து வணங்குகிறோம். சிறுபராயம் முதல் பிள்ளையாரின் திருத்தொண்டில் இணைந்து ஆலயச் சூழலே எம்வாழ்வென மலர அனைத்து நல்லருளையும் வழங்கிய எம் மூதாதை யர்கள், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் நீள நினைந்து வணங்குகிறோம். பிள்ளையாரின் பேரருளால் இங்கிலாந்தில் வாழும் நாம் உண்ணும் போதும் உறங்கும்போதும் விழிக்கும் போதும் அழைப்பது எங்கள் அப்பன் பரராஜசேகரனையே! அப்பனது அருளுக்கு என்றும் நாம் மீளா அடியவர்களே கருணைத் (11ஆம் பக்கம் பார்க்க)

### சிவத்தமிழ்ச்செல்வியின் ஆசியுரை



"கணபதி தாளைக் கருத்திடை வைப்போம் குணம் அதிற் பலவாம்; கூறக் கேளீர்; உட் செவி திறக்கும்; அகக்கண் ஒளிதரும். அக்கினி தோன்றும்; ஆண்மை வலியுறும்; திக்கெலாம் வென்று ஜெயக்கொடி நாட்டலாம்;' என்ற மகாகவி பாரதியாரின் பாவரிகள் மகத்துவ மானவை. பரராஜசேகரப் பிள்ளையார் அடியார்களின் அகக்கண்களைத் திறந்து அருள் ஒளி பாலிப்பவர். அற்புதம் நிறைந்த விநாயகர் உறைந்திருக்கும் இப் புனித திருக்கோயிலோடு மிக நீண்ட தொடர்பு எமது வாழ்வில் கிடைத்ததை பெரும் பேறாகக் கருதுகிறேன். அழகும், அருட்பொலிவும், புனிதமும் நிறைந்த இத் திருக்கோயில் சிறப்புப்பற்றி பலரும் வியந்து பாராட்டுவார்கள். இப் புண்ணிய தலத்தில் பல திருப்பணிகள் காலந்தோறும் அன்பர்களால் நேர்த்தியாக நிறைவேற்றப்பெற்று வருகிறது. ஆலயச் சூழலில் அறப்பணிகளை நிறைவேற்றுவதற்கு இங்கிலாந்தில் வாழும் இரு அன்பர்கள் இணைந்து பெருந்தொகைச் செலவில் புதிய மணிமண்டபத்தை உருவாக்கி இருப்பது பாராட்டுக்கு உரியதாகும். இப்பணியை நிறைவேற்றிய அன்பர்களை வணங்குகிறேன்; வாழ்த்துகிறேன். இவர்களின் தர்மஉபகாரத்தை முன்மாதிரியாகக் கொண்டு ஏனையவர்களும் நல்லறப்பணிகளில் ஈடுபடவேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன். எல்லாம் வல்ல ஞான முதல்வன் பரராஜசேகரப் பிள்ளையாரின் நல்லருளால் அனைவரும் சீரோடும் சிறப்போடும் வாழ வாழ்த்தி வணங்கி நல்லாசி கூறி அமைகிறேன்.

*தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின்*
*மதிப்பார்ந்த தலைவரும் ஆன்மீக அன்னையுமாகிய*
*சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி*
*தங்கம்மா அப்பாக்குட்டி* J.P.

### ஆறு.திருமுருகன் அவர்களின் பிரார்த்தனையுரை



சீருந் திருவும் பொலியுந் தெய்வீகத் திருப்பதி இணுவையம்பதி. இத்திருப்பதியின் முதல்வனாக விளங்குபவர் பரராஜசேகர விநாயகர். தமிழ்வேந்தர் காலத்து வரலாற்றுப் பெருமைமிக்க இத்திருக்கோயிலின் இன்றைய வளர்ச்சியைக் கண்டு வாழ்த்தாதவர்கள் இல்லை. அன்னியர் ஆட்சியில் சீழுற்றுப்போன இத்திருக்கோயிலை எம்முன்னோர்கள் பிடியரிசி எடுத்தும் மண் சுமந்தும் மீண்டும் பெருங்கோயில் உருவாக்கும் பணியை ஆரம்பித்தனர். எம்மூர் மூதாதையரின் அரிய பணியால் நாளும் பொழுதும் எம் திருக்கோயில் பெருவளர்ச்சி கண்டுள்ளது. கேட்பார் பிணி தீர்க்கும் பிள்ளையாரின் பேரருளால் சகல அடியவர்களின் குடும்பமும் நல்வாழ்வு பெற்றது. அல்லும் பகலும் மீளா அடியவர்களாகத் தொண்டு செய்தவர்களின் சந்ததி சகல வளமும் பெற்றதனை யான் நன்கு அறிவேன். சிறுவர்கள் முதல் முதியோர்வரை பக்திபூர்வமாக வழிபாடு செய்யும் உயர்பண்பாட்டை இக்கோயில் விழாக்களில் காணலாம். புராணப்படிப்பு, பிரசங்கமரபு, கலைமரபு, அடியவர் வாயிலான அன்னதானம் வழங்கும மரபு இவ்வாலயத்தின் நீண்ட காலமாக நிலவிவருகிறது. (11ஆம் பக்கம் பார்க்க)


## விழாச் சிறப்புற வாழ்த்துவோர்!

**அபான்ஸ்**
மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் 222 5766.

**மகாநதி புடைவை அகம்**
16, நவீன சந்தை, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம் 222-2552.

**சாந்தி புடைவை அகம்**
157, 158, நவீன சந்தை, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். 222 2045.

**சீமாட்டி புடைவைக் கடல்**
122, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம் T.P.:222 2196.

**செல்லமுத்தூஸ் புடைவை மாளிகை**
நெல்லியடி, கரவெட்டி, 226 3238.

**விஜித்தா துணிப் பூங்கா**
109, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்

**மல்ரி ஒயில்ஸ் இன்டஸ்ரீஸ்**
K.K.S. வீதி, இணுவில்.

**சாந்தி புடைவை அகம்**
K.K.S. றோட், இணுவில் T.P. 222 7787.

**கணேசன் சென்ரர்**
K.K.S. வீதி, இணுவில். 021- 222 5708.

**அண்ணா கோப்பி**
துரை வீதி, இணுவில்.

**ஜோகாள் ரெக்ரையில்**
**ஜோகாள் ரவல்ஸ்**
18A, நவீன சந்தை, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். T.P.021 222 3918.

**லிங்கம் கொமினிக்கேசன்**
**லிங்கம் பான்சி எலக்ரிக்கல்ஸ்**
பரராஜசேகரப் பிள்ளையார் கோயிலடி, இணுவில்.
T.P.: 021- 222 5942 021-222 7743.

**அபிராமி புடைவை அகம்**
**அபிராமி சூ பலஸ்**
155, 156, நவீன சந்தை, மின்சார நிலைய வீதி, யாழ்.
T.P.222 3525.

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

உண்டாக்கிப் பாலூட்டி வளர்த்த தாயை உமையவள் என்றறியீரோ?

# அகிலத்தின் அடக்கம் அன்னை!

‘அம்மா’ - அமுதத்தின் மறுவடிவம், அகிலத்திலுள்ள அனைத்து ஜீவராசிகளும் முதன்முதலில் கண்டு, உணர்ந்துகொள்ளும் உறவுமுறை, பிறந்த குழந்தை கூறும் முதல் வார்த்தை, ஆடு, மாடு போன்ற ஜீவராசிகள் கூறும் ஒரே வார்த்தை (ம்மா...(பா), அரவணைக்கும் ஆத்மா, ஆக்கசக்தி, உற்பத்தி ஸ்தானம்..... ஆம்! அம்மாவின் அர்த்தங்கள் அளப்பரியன. அகிலமே இச்சொல்லில் அடங்கி விடுகின்றது.

உலகிலுள்ள உயிரினங்கள் எல்லாவற்றையும் உருவாக்குகின்ற உயர்நத இடத்தை வகிக்கும் உறவு தாய். மாதா, தாய், அம்மா.... “அன்னை” என்ற உறவிற்கு அர்த்தம் கற்பிக்கவந்த மறுவார்த்தைகள். ஆனால்... அன்னைக்கு வெறும் வார்த்தைகளால் அர்த்தம் கற்பித்து விடமுடியுமா? இல்லை, இல்லை.

ஆனாலும், ஒரு சிறு முயற்சி.....

அண்டசராசரங்களனைத்தையும் படைத்து அருளியது விண்கண்ட தெய்வம் என்றால், அதனை நிலை நிறுத்திக் காத்தருளும் கண்கண்ட தெய்வம் அன்னையே. ஒரு குடும்பத்தின் தலைமுறையை மிளிரச்செய்யும் பொறுப்பும், பெருமையும் கொண்டு, மக்களைப் பெற்றெடுக்கும் மகராசியாக விளங்குபவள் அன்னையே. உயிருக்கு உருவம் தந்து அவ்வுருவிற்குப் பெருமை சேர்த்துக் குடும்பத்திலுள்ள அனைத்து அங்கத்தவர்களையும் ஒருங்கிணைக்கும் இழையாக - பாலமாக - இருப்பவள் தாயே. குடும்பத்தைத் தாங்கும் சீரிய பொறுப்பை வகுப்பவள் அம்மா.

குடும்பம் நன்றாக வருவதும், சீரற்றுப் போவதும் தாயின் கையிலேயே இருக்கின்றது. இதனாலன்றோ கவிஞரொருவர் -

“எந்தக்குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணிற் பிறக்கையிலே அது நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பதிலே..... என்று பாடியுள்ளார். ஆனால், தனது பிள்ளை தீயவராகும் வகையில் உருவாக எந்த ஒரு தாயும் விரும்பமாட்டாள் என்பது யதார்த்தம். சமூக சூழ்நிலையால் பிள்ளை மாறினால் தாய் யாது செய்யமுடியும்? இருப்பினும் ஒன்று, குடும்பத்தில் பிள்ளைக்குத் தாயாக, குருவாக, தாதியாக, நல்ல நண்பியாக, மந்திரியாக அனைத்துமாக இருக்கும் இயல்பு தாயிடம் மட்டுமே இருக்கமுடியும். சமயத்தில் பிள்ளைக்குத் தகுந்த விதத்தில் அதன தேவையை அறிந்து செய்வதற்குத் தாய்க்கு மட்டுமே முடியும். அதனாலதான், தாயின் பொறுப்பைக் கவிஞர் மேற்கண்ட பாடல்மூலம் மேலும் உணர்த்தியுள்ளார் போலும்.

ஒவ்வொரு குடும்பத்திலும் தாய் ஆதாரமாக நின்று நற்குடும்பத்தை உருவாக்கினால் நல்ல சமுதாயம் உருவாகும். அச்சமுதாயத்தால் உலகம் சீராக இயங்கும் என்பது உண்மை. ஆகவேதான், உலக இயக்கத்திற்கு “அன்னை” என்ற ஆக்கசக்தி எத்துணை பயன்பாடுடையது, முக்கியமானது என்பதை உணரக்கூடியதாக உள்ளது. நிலம் பண்புடையதாக இருந்தால் நல்ல விளைச்சலைப் பெறமுடியும். இதுபோன்றே ஒவ்வொரு தாயும் ஆரோக்கியமாக இருந்தால் நன்மக்களைப் பெற்று நாட்டுக்கு மட்டுமன்றி உலகத்துக்கே நற்பலனையளிக்க முடியும்.

“அன்னை” என்கின்ற இந்த உறவின் தன்மை உலகில் கலாசாரம், நாகரிகம், சமுதாயப் பாரம்பரியம் போன்றனவற்றைப் பொறுத்து மாறுபடுகின்றது. மேற்குலகநாடுகளில் ஒரு பிள்ளை பிறந்து, 18 வயதுவரை மட்டுமே தாயின் அரவணைப்பில் வளரும். அதன் பின் தாய்க்கும் குழந்தைக்குமிடையிலான உறவில் இடைவெளி அதிகரிக்கும். ஆனால், ஆசிய நாடுகளில், குறிப்பாகத் திராவிட கலாசாரத்தில் தாய் பிரிக்கமுடியாத, இரண்டறக்கலந்த உறவாகக் காணப்படுகின்றாள். குழந்தை ஒன்று பிறந்தவுடன் முதலில் தனது தாயையே அறியும். முதலில் ‘அம்மா’ என்ற வார்த்தையையே கூறும். இதனாலன்றோ,

*‘தாயிற் சிறந்த கோயிலுமில்லை......’, ‘அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.....’*

எனப்பல அறிஞர்கள் தாயை முன்னிலைப்படுத்திக் கூறியுள்ளனர். மாதா - பிதா, அம்மை - அப்பன், அன்னை - தந்தை, தாய் - தந்தை என அன்னையை முன்னிலைப்படுத்தும் சந்தர்ப்பங்கள் எத்தனை! இன்னும், இந்துதர்மம் ஒரு குழந்தை பெரியோர்களை வணங்கவேண்டிய ஒழுங்குமுறையில் மாதா, பிதா, குரு, தெய்வம் என மாதாவிற்கே முன்னுரிமை கொடுத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இதனாலேதான், அனைத்துக்கும் சக்திகொடுக்கும் அன்னையாகப் பெண்ணைச் சித்திரித்து ‘அம்பிகை’, ‘பராசக்தி’ என இந்துக்களும் ‘அன்னை வேளாங்கன்னி’, ‘மடுமாதா’, எனக் கிறிஸ்தவர்களும் வணங்கி நிற்கின்றனர் எனலாம்.

அம்மா என்றால் அன்பு, அன்பு என்றால் அம்மா என்று அன்பிலிருந்து அன்னையைப் பிரிக்கமுடியாதபடி பாசத்தின் ஒளிவிளக்காக அன்னை திகழ்வதாலேயே கடவுளை அன்னையுடன் ஒப்பிடுகின்றனர்.

“தாயினும் நல்ல தலைவரென்றடியார்.....”, “பால் நினைந்தூட்டும் தாயினும் சால.....”, “தாயேயாகி வளர்த்தென்னை போற்றி.....”, “தாயிலாகிய இன்னருள் புரிந்த என் தலைவனை.....”

என்ற பாடலடிகளில் அன்பின் இலக்கணமாகிய தாயுடன் இறைவன் ஒப்பிடப்படுகின்றான். இறைவன் கருணை பொழிந்த விதத்தைக் கவிஞர்கள் இக்கவிவரிகளில் கூறியுள்ளனர். இதிலிருந்து தன்னலமற்ற அன்பைச் செலுத்துவதற்கு ஒப்பிடக்கூடிய ஒரேயோர் உறவு அன்னையே என்பது புலப்படுகின்றது. இதனால்தான் அந்த இறைவனையே தாயுடன் கொண்டுவந்து ஒப்பிடுவதன் மூலம் தாய்க்கு முன்னுரிமை கொடுக்கப்படுகின்றது. இந்த இடத்தில் அன்னை ஆண்டவனையும் மிஞ்சி விடுகின்றாள்.

**- சாம்பவி -**

உலகிலுள்ள ஜீவராசிகளில் மட்டுமல்ல, உயிரற்ற சடப்பொருள்களிலும் தாய் வியாபித்து நிற்கின்றாள். நாட்டில் தாய் இருக்கின்றாள் - தாய் நாடு, மண்ணில் தாய் இருக்கிறாள் - தாய் மண், சொத்துக்களுக்கான ஆதனத்தில் தாய் இருக்கிறாள் - தாய் உறுதி, பூமித்தாய், கடலில் கடலில் தாய் - கடலன்னை மற்றும் அனைத்து இயற்கைகளிலும் தாய் - இயற்கை அன்னை, எல்லாவற்றுக்கும் மேலாக இன்று எம்மையெல்லாம் ஆட்கொண்டிருக்கின்ற கணனியில் தாய் - பிரதான கணனிக் கணியம் (Mother Board)..... இவ்வாறு சர்வமும் அன்னை என்கின்ற சக்திவடிவமாகக் கண்டு இந்த உலகம் தாய்க்குத் தனிச்சிறப்பை வழங்கிப் பெருமைப்படுத்திப் பார்க்கின்றது.

தாய்க்கு ஏன் இத்தகைய முக்கியத்துவம் வழங்கப்படுகிறது என்பதைச் சற்றுச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். குழந்தை ஒன்று பிறந்து, வளர்ந்து இறக்கும் வரை தாயின் அரவணைப்பும், ஆறுதலும் அதற்குத் தேவைப்படுகின்றது. பிறந்த குழந்தை பேசத்தொடங்க முன் அதன் உணர்வுகளைப் புரிந்துகொண்டு தாய் அதன் தேவைகளை நிறைவேற்றுகின்றாள். அதற்கு நோய் வரும்போது நல்ல தாதியாகக் கவனிக்கின்றாள். அறிவூட்டுவதில் ஆசானாகின்றாள். தனக்கு உணவு இல்லாவிட்டாலும் தன் பிள்ளைக்கு அதனைக் கொடுத்து மனநிறைவடைகின்றாள். பிள்ளைக்கு இளமைப்பருவம் வரும்போது நல்ல நண்பியாக நின்று நெறிப்படுத்தி, உரிய பருவத்தில் நல்வாழ்க்கைத் துணையையும் அமைத்துக் கொடுக்கின்றாள் (இந்த இடத்தில் தந்தைக்கும் பங்கிருந்தாலும் தாயின் பங்கு அளப்பரியதே. பின் தனது பேரப்பிள்ளைகளுக்கு அன்பும், பாசமும் ஊட்டி வளர்கின்றாள். இவ்வாறு தன்னலம் பாராது வாழ்க்கை பூராகவும் தானுருகித் தன் பரம்பரைக்கு ஒளி தரும் மெழுகுவர்த்தியாகத் தாய் அமைந்துவிடுகிறாள். ஆகா! அன்னைக்குள் எத்தனை அற்புதங்கள்? அன்னையின் அர்த்தங்களை வெறும் வார்த்தைகளில் வடித்துவிட முடியாதுவிட்டாலும், சில கவிஞர்கள்.

*“அம்மா என்றழைக்காத உயிரில்லையே.....”*

*“தாயில்லாமல் நானில்லை.....”*

*“அம்மா அம்மா எந்தன் ஆருயிரே.....”*

*“அன்னையைப் போல் ஒரு தெய்வமில்லை*
*அவர் அடிதொழ மறுப்பவர் மனிதரில்லை.....”*

*“சோறுபோடத் தாயிருக்கா பட்டினியப் பார்த்ததில்ல*
*தாயிருக்கும் காரணத்தால் கோயிலுக்குப் போனதில்லை*
*தாயடிச்சு வலிச்சதில்ல இருந்தும் நானலுவன்*
*நானலுதாத் தாங்கிடுமா உடனே தாயழுவா.....”*

எனத் தத்தம் அறிவுக்கெட்டியவரை வடித்துள்ளனர். இதனையே பொய்யாமொழியும்,

“பெற்ற தாயும் பிறந்தபொன்னாடும் நற்றவ வானினும்
நனி சிறந்தனவே” என ஈரடிகளுள் அடக்கிக் கூறுகின்றது.

உலகத்தின் அச்சாணியாம் விவசாயத்தின் மூலம் உயிர்களைக் காக்கும் விவசாயி, நல்லாசான், வைத்தியன், நீதிபதி, விஞ்ஞானி, மெய்ஞ்ஞானி, விமானி, அரசியல் தலைவர்கள் என அறிவியல் முதல் அனைத்துத்துறை வரையுள்ள மானிடர் அனைவரும் ஊற்றெடுத்த தலம் தாய் அதே மாந்தர் மரணித்து இவ்வுலகில் இரண்டறக் கலப்பது தாய்க்கு ஒப்பிடப்படும். இவ்வாறு பிறப்பில் மட்டுமன்றி, இறப்பிலும் எம்மைத் தாங்கி எம்வாழ்வின் சுகதுக்கங்களில் பங்கெடுக்கக்கூடிய ஆற்றல் தாய் குலத்திற்கே உரியதாகும்.

இருக்கும் பிடிசோறு தனக்கென்று எண்ணாமல் கொடுக்கின்ற கோயிலின், துடிக்கும் உயிர்கண்டு தோளில இடம் தந்து அணைக்கின்ற தெய்வமாகிய அன்னையின் பாசத்தைப் பெறமுடியாத பிள்ளைகளை நோக்கும் போதும் நமக்கு அன்னையின் முக்கியத்துவம் நன்கு புலப்படுகிறது. பிறந்ததிலிருந்து தாய்ப்பாலை அறியாத பிள்ளையை ‘சவலைபிள்ளை’ என்று அழைக்கின்றனர். இதேபோல் தாய் இல்லாத பிள்ளைகளின் நிலையை “தாயற்ற போதே சீரற்றுப் போகும்.....”

“தாயில்லாவிட்டால் தகப்பன் சித்தப்பன்.....” என்பன போன்ற அடிகள் எமக்கு உணர்த்தி நிற்கின்றன. ஆம். குழந்தைப்பருவத்திலிருந்து தாயின் அன்பைப் பெறமுடியாத குழந்தை பிற்காலத்தில் சமூகத்துடன் இணங்கி வாழ்வதில் பல்வேறு கஷ்டங்களை அனுபவிப்பது யதார்த்தமாகும். இதுவே அறிவியலுலகத்தின் கருத்துமாகும். ★

(இன்று அன்னையர் தினம்)


”பாடசாலையின் பின் எனது அண்ணா தனது வேலைவாய்ப்புக்காக ஏங்கிக்கொண்டிருக்கிறார். இதனால்...... நான் NIIT இல் என் பாடசாலைக் காலத்திலேயே தொழில் வாய்ப்புக்கான அடித்தளமிட்டேன்.”



“நான் NIIT இற்கு நன்றி சொல்கிறேன். நான் NIIT இல் கற்கையை பூர்த்திசெய்து B.Sc. (Hons) பட்டப் படிப்பை லண்டன் South bank பல்கலைக்கழகத்தில் படித்து முடித்துள்ளேன் என்பதைப் பெருமையுடன் கூறுகிறேன்” – Mubarak

சர்வதேச அங்கீகாரம் பெற்ற DNIIT கற்றதன் விளைவாக System Administrator ஆக ஒரு கட்டார் (Quatar) இன் முன்னணிக் கம்பனி ஒன்றில் வேலை கிடைத்ததையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்” – Rizkhan





“NIIT இன் DNIIT தகைமையின் மூலம் நான் இலங்கையின் Virtusa இல் Software Engineer ஆக தொழில்புரிய வாய்ப்புக்கிடைத்ததையிட்டு சந்தோஷப்படுகிறேன்” –Roshan

NIIT இல் இரு வருட கற்கை நெறியைப் பூர்த்திசெய்த மாணவர்கள் U.K, U.S.A, Canada, Australia, Ireland, Newzealand ஆகிய நாடுகளின் பல்கலைக்கழகங்களில் மிகக்குறுகிய காலத்தில் பட்டதாரியாகிட நேரடி அனுமதி!

Futurz Career Programs

O/L இற்குப் பின் உங்கள் எதிர்காலத்தை நீங்கள் திட்டமிடும் காலம். இதற்கு உதவும் வகையில் NIIT உங்களுக்கு DNIIT கற்கை நெறியைப் பயில்வதன் ஊடாக உங்களை ஒரு முழுமையான IT தொழில்தகைமை உடையவராக்கி வேலை வாய்ப்பை இலகுவாக்குகிறது. இதனூடாக உலகப் புகழ்பெற்ற பிரபலமான கம்பனிகளில் உங்களுக்கான Career Placement சேவையை NIIT தனது மாணவர்களுக்கு வழங்குகிறது.

☆ அனுமதிகளுக்கு முந்துங்கள்

☆ மட்டுப்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு மட்டுமே.

NIIT

GLOBAL LEADERS IN IT EDUCATION AND TRAINING

மேலதிக விவரங்களுக்கு 347, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P 021 222 7250

NIIT

37 நாடுகளில் 3800 இற்கும் மேற்பட்ட எமது கிளைகளிலுள்ள 2.5 மில்லியன் மாணவர்களுடன் நீங்களும் இணையுங்கள்

நீங்களும் உங்களது அம்மாவின் ஆசையை நிறைவேற்ற அன்னையர் நாளான இன்றே திடசங்கற்பம் செய்யுங்கள்.


நீண்டதோர் புகழ்வாழ்வும் – பிற நிகரற்ற பெருமையும் கொடுப்பாள் அன்னை!




www.jwt.lk

அன்னையர் தினத்திற்கு டிக்கிரி சிறார்களுடன் செலான் வங்கியின் வாழ்த்துக்கள்.


டிக்கிரி கணக்கு

செலான் வங்கி

அன்புடன் அரவணைக்கும் வங்கி

தலைமையகம்: செலிங்கோ செலான் டவர்ஸ், 90 காலி வீதி, கொழும்பு 3.
தொ.பே: 011 245 6789, 011 470 1000, ஃபெக்ஸ்: 011 245 6456. ஈ-மெயில்: info@seylan.lk
www.eseylan.com

வேண்டிய கொடுத்திடுவாள் – அவை விரும்புமுன் கொடுத்திட விரைந்திடுவாள் அன்னை!



# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

நல்ல அழகான Great Dane நாய்க்குட்டிகள் உடன் விற்பனைக் குண்டு. தொடர்பு: க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19,முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (31730)

கலர் மீன்கள், தொட்டிகள், கொக கொடைல், ஆபிரிக்கன் லவ்பேட்ஸ், யாவாபரட், லவ்பேட்ஸ் குருவிகள், கூடுகள், அடுக்குச் செவ்வரத்தம் பூங் கன்றுகள் மஞ்சள் மொசந்தாஸ் மற் றும் டல்மேசன், பொமேரியன் நாய்க் குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: 40/11, சீனியர் லேன், தட்டாதெருச் சந்தி, யாழ்ப்பாணம். (31648)

கொடிகாமம், குட்ஸ்செட் (Goods Shed) ஒழுங்கையில் (புகையிரத நிலையத்திற்கு 100 யார்) 7 பரப்புக் காணியும், வீடும், 3 பரப்புக் காணியும கிணறும் விற்பனைக்குண்டு. தொடர்பு- Mrs.S.பூபதி. தொ.பே.- 2512238. (சி-34893)

சுண்டுக்குளி, கொழும்புத்துறை வீதியில் பாடசாலைகளுக்கு அருகில் 5½ பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: 50/7 (38), விதானையார் வீதிக்கருகில், சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (31733)

83, றக்கா றோட், சுண்டுக்குளி யில் கச்சேரியை அண்டிய சூழலில் 3½ பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: 19/2, காட்டுக்கந்தோர் வீதி, சுண்டுக்குளி. (31784)

நல்ல நிலையிலுள்ள 5ஸ்ரீXXX தொடரிலக்கமுடைய, மொறிஸ் மைனா கார் விற்பனைக்குண்டு. விலை 175,000/= தொடர்பு: 40/7, வைமன் வீதி, யாழ்ப்பாணம். (31926)

கடைக்குரிய கதவுநிலை (8'8") விற்பனைக்குண்டு. தொடர்பு: இல. 303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.(31744)

பல வர்ண வளர்ப்பு மீன்கள், மீன்தொட்டிகள், அலங்காரப் பொருள் கள், லவ்பேர்ட்ஸ், பூங்கன்றுகள் விற் பனைக்குண்டு. தொடர்பு: துரைசிங் கம், K.R., 270, கனகரத்தினம் வீதி, நாயன்மார்கட்டு. தொலைபேசி 021 222 6911. (31777)

உரும்பிராய் கிழக்கு CHURCH LANE, பலாலி வீதிக்கு அண்மை யில் வீடு, வளவு 5பரப்பு 6.8 குழியுடன விற்பனைக்குண்டு. தொடர்பு: செல்வி புஸ்பா செல்வநாயகம், 347, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். தொலை பேசி இல. 222 3400. (சி-34737)

பிறிமா, நெல்பாம், பிக்கந்த பேட் டுக்குஞ்சுகள் முன்கூட்டியே பதிவு செய்து பெற்றுக்கொள்ளலாம். சேவல் குஞ்சு ஒவ்வொரு புதன்கிழமையும் பெற்றுக்கொள்ளலாம். (ரூபா 8/=) தொடர்பு: வி.குணபாகன், 343, கே.கே. எஸ்.வீதி (முட்டாஸ் கடைச்சந்திக்கு அருகில்), யாழ்ப்பாணம். T.P 222 3353 (31750)

புறொயிலர், கல்பேட் மொத்தமாக வும் சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்தல் இலவசம் தொடர்பு: 1.மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில் New R.S.K. Farm, 2. உடுவில் பிள்ளையார் கோயிலடி, மானிப்பாய் வீதி, உடுவில் மதவடி, New R.S.K Farm (31505)

தரமான Prima Broiler குஞ்சு கள், Prima பேட்டுக்குஞ்சுகள் 17.05.2004 பிற்பகல் விநியோகிக்கப் படும். முற்கூட்டியே பதிவுசெய்யவும். Suddi Farm, வட்டுக்கோட்டை, பருத தித்துறை கிளையிலும் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: க.தனபால சிங்கம் ( நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத திரைச் சந்தையடி, நல்லூர். (31729)

தரமான பகிரா இன புறொயிலர் குஞ்சுகளும் டிக்கந்தபாம் புறொயிலர் குஞ்சுகளும் (விலை 35/- ரூபாவுக்கு) ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் முன கூட்டியே பதிவுசெய்து பெற்றுக் கொள்ளலாம் தொடர்பு: வி.குணபாகன, 343, கே.கே.எஸ்.வீதி (முட்டாஸ் கடைச்சந்திக்கு அண்மையில்), யாழ்ப் பாணம். (T.P.: 222 3353. (31751)


**DISSERTATION BINDING**

*பல்கலைக்கழக மாணவர்களின் ஆய்வுக் கட்டுரைகள் பல்கலைக்கழக நடைமுறை களுக்கு அமைவாகக் கட்டிக்கொடுக்கப் படும். இரு பிரதிகள் கட்டுவதற்கான கட்டணம். 350/=*

**BHARATHI PATHIPPAKAM**
**OFF-SET PRINTERS**
430, K.K.S. Road, Jaffna.
TELEPHONE: 021-222-3081 (சி34748)(37)


## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத் தைச் சேர்ந்த, 1967இல் பிறந்த மகம் நட்சத்திரம், செவ்வாய்தோஷ மற்ற கொழும்பில் சொந்தமாக நிறு வனமொன்றை நடத்தும் மணமகனுக்கு அரசபணியாற்றும் மணப் பெண்ணை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். தொடர்பு: விள. இல:2248, மே/பா உதயன். (31563)

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, சித்திரை 1968இல், கார்த் திகை முதலாம் பாதத்தில் பிறந்த இங்கிலாந்தில் வசிக்கும் மணமக னுக்கு (M.Sc. Air TransPot Engi- neering) அழகிய M.B.B.S. டாக் டரை அல்லது இறுதி ஆண்டு படித் துக் கொண்டிருக்கும் மணமகளைப் பெற்றோர் தேடுகின்றார்கள். தொடர்பு: விளம்பர இல. 2256, மே/பா, உதயன். (31724)

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, லண்டனில் தொழில்புரியும், பூராடம் 3ஆம் பாதம், 1976இல் பிறந்த, 5'10" உயரமுடைய, உதயத தில் செவ்வாயுள்ள மணமகனுக்குப் பொருத்தமான ஸ்பொன்சர் பண்ணக் கூடிய மணமகள் தேவை. தொடர்பு: விள.இல. 2254, மே/பா, உதயன். (31689)

யாழ்.இந்து கௌரவமான, உயர்ந்த, பண்புள்ள, அழகிய, பிர பல்யமான துறையில் வைத்திய நிபு ணராக அரச சேவையிலிருப்பவருக் குப் பொருத்தமான அழகிய, 35வய துக் குட்பட்ட டாக்டர் அல்லது பட்ட தாரி மணமகளைப் பெற்றோர் எதிர் பார்க்கின்றனர். தொலைபேசி மற்றும் விவரங்களுடன் தொடர்பு: விளம்பர இல. 2253, மே/பா, உதயன்.(31684)

ஆஸ்திரேலியாவில் வைத்தியரா கப் பணிபுரியும் ஆறடி உயர, கம்பீ ரமான மணமகனுக்கு ஐந்தடிக்கு மேற்பட்ட சிவந்த, அழகிய வைத்திய ராகப் பணிபுரியும் இந்துமணமகள் தேவை. (வயது முப்பதுக்கும் முப்பந தைந்துக்கும் இடையில்) தொடர்பு களுக்கு: Fax - 011 2598934, T.P.: 0112 587332. (31771)

1974இல் பிறந்த கௌரவ குடும் பத்தைச் சேர்ந்த ஜேர்மனியில் தொழில் பார்க்கும் 5'6" உயரமுள்ள சதய நட்சத்திர அழகான மணமக னுக்கு நற்பண்புள்ள, படித்த, அழ கிய, பொருத்தமான மணமகள் தேவை (வெளிநாட்டில் வசிப்பவர் விரும்பத்தக்கது). விளம்பர இல. 2259, மே/பா, உதயன், யாழ்ப் பாணம். (31782)

## தவறிவிட்டது

133, செம்மணி வீதி, நாயன்மார் கட்டைச் சேர்ந்த, நா.இலக்ஸ்மண தாசன் என்பவருடைய உடுப்புகள், கமரா, ஒரு தொகைப் பணம் என்பன அடங்கிய இரண்டு பயணப்பைகள் புளியங்குளத்துக்கும் முறிகண்டிக்கும முகமாலைக்கும் இடைப்பட்ட பகுதியில மே முதலாம் திகதி தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேலுள்ள முக வரியில் அல்லது 07760420982 இலக கத்தில் தொடர்புகொள்ளவும். (31755)

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத் தைச் சேர்ந்த, 1966ஆம் ஆண்டில் பிறந்த, 7இல் சனி உடைய பட்ட தாரி ஆசிரியைக்கு நற்குணமுள்ள தகுந்த மணமகனைப் பெற்றோர் தேடுகின்றனர். தொடர்பு: விள.இல. 2257, மே/பா, உதயன். (31778)

## மணமகன்கள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத் தைச் சேர்ந்த, அரசாங்க உத்தியோ கம் பார்க்கும், 34 வயது, திருவாதிரை 3ஆம் பாதம் மணமகளுக்கும் 28 வயது, பூசம் மணமகளுக்கும் நற் குணமுள்ள மணமகன்களை (வெளி யூர்/உள்ளூர்) எதிா பார்க்கின்றனர். விளம்பர இல.2250 மே/பா உதயன். (31600)

## வீடு வாடகைக்குத் தேவை

இலங்கையில் முன்னணி வகிக் கும் நிறுவனமொன்றிற்கு நகரின் மத்தியில் அல்லது யாழ்.நகரை அண்டிய பகுதிகளில் வீடு உடன் வாடகைக்குத் தேவை. (கே.கே.எஸ். வீதி, கஸ்தூரியார் வீதி, நல்லூரை அண்டிய பகுதிகள் விரும்பத்தக் கவை). தொடர்பு: 077 6110807 (31632)

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மாண வர்களுக்கு ஏற்ற வசதியான வீடு அனெக்ஸாக வாடகைக்குத் தேவை. K.K.S.வீதி, பல்கலைக்கழகச் சூழ லில், பிறவுண் வீதி, கந்தர்மடம் விரும பத்தக்கவை) தொடர்பு: P.தர்மினி, 439, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப் பாணம். (31746)

## வாடகைக்கு

ஆனைக்கோட்டைச் சந்தியில் கடையொன்று வாடகைக்குண்டு. தொடர்புகளுக்கு: மொரீன் பேக் ஹவுஸ், ஆனைக்கோட்டைச் சந்தி, தொலைபேசி இல.021 - 222 - 7790, 077 - 6102743. (31780)

## சைக்கிள் கியர் விற்பனைக்கு

சைக்கிள் கியர் விற்பனைக்குண்டு

தொடர்பு.

**சேது களஞ்சியம்**

*230, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.*

T.P. 2529

(சி34718)(37)

## மணமகள் தேவை

**1972 இல் பிறந்த, இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, விசாகநட்சத் திரமுள்ள லண்டனில் பணிபுரியும் அழ கிய மணமகனுக்கு 5' உயரமுள்ள அழ கிய மணமகள் தேவை. சாதகக் குறிப் புடனும், புகைப்படத்துடனும் விண்ணப் பிக்கவும். சீதனம் பெரிதாக எதிர்பார்க் கப்படமாட்டாது.**

**ப.கிருஸ்ணமூர்த்தி**
*(தேவி அச்சக ஒழுங்கை)*
**114/19, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்**
T.P. 2789

## *அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் ஆலய*
### திருவிழா உபயகாரர் கூட்டம்
## பிற்போடப்பட்டது

**ஆலய தர்மகர்த்தாக்கள் சபைத்தலைவர் திரு.சோ. சிவப் பிரகாசம் அவர்களின் மறைவு காரணமாக இன்று (09.05.2004) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவிருந்த திருவிழா உபயகாரர் கூட்டம் 12.05.2004 புதன்கிழமை பிற்பகல் 2.00 மணிக்குப் பிற்போடப்பட்டுள்ள தென்பதை சம்பந்தப்பட்ட அனைவருக்கும் அறியத்தரு கின்றோம்.**

செயலாளர்,
**தர்மகர்த்தாக்கள் சபை**

(31772)(37-21-19)

# துயரில் இணைகின்றோம்

*யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி கணிதத்துறைக் கல்வியியலாளர்*

**திரு.கிருஷ்ணயோகன்**

அவர்களின் அன்புச் சகோதரியும் உள்ளகப் பயிற்சி மாணவி

**செல்வி சி.தர்மிளா** அவர்களின் பாசமிகு தாயாருமாகிய

**திருமதி சிவராசா கிருஷ்ணதேவி**

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினரின் பிரிவுத் துயரில் நாமும் இணைகின்றோம். அன்னாரின் ஆத்மசாந்திக்காய் இறைவனை இறைஞ்சுகின்றோம்.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிச் சமூகம்.

(31769)(34-21-19)

# மனோதத்துவ வைத்தியம்
## (GENERAL PSYCHO THERAPY)

இப்பொழுது யாழ்ப்பாணத்தில்
11.05.2004 - 17.05.2004 வரை

*முன்கூட்டியே பதிவுசெய்யவும்*

இளைஞர்களே!

- சக்தி குறைவு
- ஞாபக மறதி
- பயம்
- ஆளுமைக்குறைவு
- நடுக்கம்
- நித்திரை குறைவு

என்பவற்றால் தாழ்வு மனப்பான்மையா?

கவலையை விடுங்கள் ஆரம்ப மனநோய் பாதிப்பு உடனடியாக நீக்க என்னுடன் உடனடியாகத் தொடர்புகொள்ளுங்கள்! ஆண்மைச் சக்தி குறைவுதான் உங்கள் கவலையா? மனோதத்துவ வைத்தியத்தாலும் மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம். பலர் இங்கே சிகிச்சை பெற்று பூரண சுகமடைந்தமைக்கு ஆதாரம் உண்டு.

*குறிப்பு:* இறுதி நேரத்தில் வருவதைத் தவிர்க்கவும்.

தொடர்புகளுக்கு

பலரது பாராட்டைப் பெற்ற
**பிரபல மனோதத்துவ நிபுணர்**
**Dr.P.ஆறுமுகம் S.M.P.**
A.S.N. சுற்றுலா விடுதி,
392/A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
(பெருமாள் கோயிலுக்கும் வெலிங்டன் சந்திக்குமிடையில்).
Govt. Regd. No. 9492
Hot Line: 0777 569205 T.P.: 3181, 5399
(முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்)

(சி-34727) (21-19)

# காப்புறுதி முகவர்கள் தேவை

இலங்கையின் முன்னணிக் காப்புறுதி நிறுவனம் ஒன்று தனது யாழ்., வவுனியாக் கிளைகளுக்கு காப் புறுதி முகவர்களை இணைத்துக்கொள்ளவுள்ளது. ஆர்வமும், தகைமையும் (G.C.E. O/L Pass) உள்ள 49வயதிற்குட்பட்ட இருபாலாரிடமிருந்தும் விண் ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

**விண்ணப்ப முடிவுதிகதி: 18-05-2004**

## விளம்பர இலக்கம்: 2246,
**மே/பா உதயன்,**
**யாழ்ப்பாணம்.**

(31558)(34-26-18-16)

# கண்ணீர் அஞ்சலி

அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் ஆலய
தர்மகர்த்தாக்கள் சபைத்தலைவர்

## சோமசுந்தரம் சிவப்பிரகாசம்

*அவர்கள் (06.05.2004) வியாழக்கிழமை தேகவியோகமாகிவிட்டார்.*

*இவர் எமது ஆலயத் தர்மகர்த்தாக்கள் சபைத்தலைவராக இருந்து ஆலய புனருத்தாரண வேலைகளில் ஈடுபட்டதோடு ஆலயக் கும்பாபிஷேக நிகழ்வுகளிலும் முக்கிய பங்காற்றிச் சிறப்புற நடத்தியவர் என்பதும் ஆலய கிரியைகள் பற்றித் தெளிந்த அறிவுடையவர் என்பதும் குறிப்பிடத்தக்கவை.*

*இவரது மறைவினாற் கவலையுற்றிருக்கும் இவரது குடும்பத்தினர், உற்றார், உறவினர் அனைவரது துயரிலும் தர்மகர்த்தாக்கள் சபை உறுப்பினர்கள், தொண்டர் சபையினர், ஆலய உபயகாரர்கள் அனைவர் சார்பிலும் பங்கு பற்றி அமரருக்கு கண்ணீரைக் காணிக்கையாக்குகின்றோம்.*

*இவரின் இழப்பு ஆலயத்துக்கும், அளவையூர் மக்களுக்கும் சைவ உலகத்துக்கும் கவலை தருவதொன்று என்பதில் ஐயமில்லை.*

*அவரின் ஆத்மா விநாயகப் பெருமான் திருவடி நிழலில் ஆறுதல் பெற விநாயகன் அருளை வேண்டுகிறோம்.*

தர்மகர்த்தாக்கள் சபையினர்,
**கும்பழாவளைப் பிள்ளையார் கோயில்,**
**அளவெட்டி.**

(31773)(37)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

*தோற்றம்*
08 – 11 – 1920



*மறைவு*
09 – 04 – 2004

## திருமதி தம்பிப்பிள்ளை பரிமளம்

**அன்போடும் பண்போடும் வாழ்ந்த அன்னையே!**
**ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கிறோம்.**

*அன்னாரின் அந்தியேட்டி, சபிண்டீகரணக்கிரியைகள் இன்று (09.05.2004) ஞாயிற்றுக் கிழமை முற்பகலில் இல. 31, விதானையார் வீதி, கொழும்புத்துறையில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெறுகின்றன. இந்த நிகழ்வுகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.*

**த.இரத்தினராசா (மகன்),**
கட்டட ஒப்பந்தகாரர்.

*வராகி அம்மன் கோயில் வீதி,*
*கொக்குவில் மேற்கு, கொக்குவில்.*

(31768)(42-21-19)

(6ஆம் பக்கத் தொடர்ச்சி...)

# இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் திருக்கோயில்

# மணிமண்டபத் திறப்புவிழா சிறப்பு மலர்

## ஆறு.திருமுருகன் அவர்களின்...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆலய சிவாச்சாரியார்களின் பக்திபூர்வமான கடமைகள் திருக்கோயில் உன்னத நிலைபெற முதன்மைக் காரணங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. யான், எனது என்ற எவ்வித அகங்காரமும் இன்றி ஒவ்வொரு பணிகளையும் விநாயகப் பெருமானின் மீளா அடியவர்கள் நிறைவேற்றி வருகின்றனர்.

ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் மணி மண்டபம் என்ற பெரு மாடம் அமைக்கும் பணி ஓராண்டுக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்டது. ஆசிரியபிரான் அமரர் வை.கதிர்காமநாதன் உபாத்தியாரின் குடும்பத்தவர்கள் பெருமனதோடு மண்டபம் அமைவதற்கான நிலத்தை வழங்க முன்வந்தனர். மூன்று மாடிகளைக் கொண்ட சகல வசதிகளோடு கூடிய மண்டபத்தை நிறுவுவதற்கு முன்வந்தவர்கள் எங்களூர் இனிய மைந்தர்கள் திரு.இ.குகவரதன் அவர்களும் திரு.கு.கருணாமூர்த்தி அவர்களும். இப்பெருந்தகைகளின் பெரும் பணியால் இப்புனித கைங்கரியம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இத்திருப்பணியை நேரடியாக நின்று கவனித்து நிறைவேற்ற உதவியவர் அன்பர் திரு.து.சிவராசா அவர்கள். கொழும்பில் இருந்து இப்பணி சிறக்க துணை நின்றவர்கள் திரு.இ.மயூரநாதன், திரு.இ.சற்குருநாதன் சகோதரர்கள் அனைவரையும் வாழ்த்துகிறேன். இப்புண்ணிய கைங்கரியம் இறையருளாலும் பெரியோர்களின் ஆசியாலும் ஓராண்டில் நிறைவேற்றப்பட்டுள்ளது. இப்புனிதமான திருத்தொண்டை நிறைவேற்றிய பரோபகாரிகளான குகனும், கருணாவும் என்றும் எம்சமூகத்தால் நன்றியோடு போற்றப்படுகின்ற தகுதியைப் பெற்றுள்ளனர். அவர்களின் மனவளத்தை மீண்டும் நன்றியோடு வாழ்த்துகின்றேன். இங்கிலாந்தில் நடைபெறும் சமய விழாக்கள், தமிழ் விழாக்கள், கருணைத்தொண்டுகள் அனைத்திற்கும் பெரும்பங்கு வழங்கும் இவர்களின் பெருந்தன்மையை யான் நன்கு அறிவேன். எல்லாம்வல்ல எங்கள் குல தெய்வம் பரராஜசேகரப் பிள்ளையாரைப் பணிந்து வணங்கி அனைவரும் நலம் பெற்று வாழப் பிரார்த்திக்கின்றேன். எங்கள் நாட்டில் நிரந்தர நிம்மதியும் அமைதியும் நிலவ பார்போற்ற பரராஜசேகரன் பாதம் பணிந்து எனது பிரார்த்தனையுரையை நிறைவு செய்கிறேன்.

"யாவர்க்குமாம் இன்னுரைதானே"

*செஞ்சொற்செல்வர் நல்லாசிரியர் திரு. ஆறு. திருமுருகன்.*
*உப அதிபர் – ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம்.*

## இளைய சிவாச்சாரியாரின்...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிறைவேற்றிய அன்பர்களை வாழ்த்துகின்றேன். எல்லாம் வல்ல பரராஜசேகரப் பிள்ளையார் சகலருக்கும் சௌபாக்கியமும் அனைத்து நலமும் வழங்க வேண்டி நல்லாசி கூறி அமைகிறேன்.

*இணுவில் அருள்மிகு ஸ்ரீபரராஜசேகரப்பிள்ளையார்*
*திருக்கோயில் இளைய சிவாச்சாரியார்*
*சிவஸ்ரீ சோ. அரவிந்தக்குருக்கள்.*

## நன்றியுரை...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

தெய்வத்துக்குக் காணிக்கை செய்ய வேண்டியது எமது கடமை. அக்கடமையை நிறைவேற்றக்கிடைத்த வாய்ப்புக்குப் பிள்ளையாருக்கு முதற்கண் நன்றி கூறிப் பிரார்த்திக்கின்றோம். பரராஜசேகரன் மணி மண்டபம் நிறைவேற உழைத்த அன்புக்குரிய பெரியவர்கள் திரு.து.சிவராசா, திரு.இ.மயூரநாதன், திரு.இ.சற்குருநாதன் ஆகியோருக்கும் நன்றி கூறக்கடமைப்பட்டுள்ளோம். கட்டட நிர்மாணப்பணிகளைப் பொறுப்பேற்று, சிறப்பாக நிறைவேற்றிய திரு.கெங்காதரன் அவர்களுக்கு மிகுந்த நன்றி கூறுகிறோம். இப்பணிக்கு நல்ஆலோசனை வழங்கிய சகோதரன் ஆறு.திருமுருகன் அவர்களுக்கும் மலர் வெளியிடத் துணைபுரிந்த திரு.வை. அநவரதவிநாயகமூர்த்தி, திரு.பாலசுப்பிரமணியம் ஆகியோருக்கும் நன்றி கூறுகிறோம். எம்பணி சிறக்கப் பல வழிகளிலும் உதவியவர்கள், ஆலயத்தொண்டர்கள் அனைவருக்கும் நன்றி கூறுகிறோம். எல்லாவற்றுக்கும் மேலாக எங்கள் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ வை.சோமாஸ்கந்தக் குருக்கள் ஐயாவுக்கு எமது மனப்பூர்வமான நன்றிகளைச் சமர்ப்பித்து நன்றியுரையினை நிறைவுசெய்கிறோம். நன்றி!

*இ. குகவரதன் குடும்பம்,*
*கு. கருணாமூர்த்தி குடும்பம்.*

## மூத்த பிரதம...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

வாழ்வுக்கு நன்றியாகப் பல்வேறு திருப்பணிகளை காலத்துக்குக் காலம் நிறைவேற்றி வருகின்றனர். எங்கள் ஆலயத்தில் சின்னவயது முதல் தொண்டு செய்து நாளும் தொழுதுபோற்றி பேறுபெற்ற அன்பர்கள் திரு.இ.குகவரதன், திரு.கு. கருணாமூர்த்தி ஆகியோரின் அரும்பணியால் இப்புதிய மணிமண்டபம் அழகாக அமைக்கப்பெற்றிருப்பது மெச்சத்தக்க விடயமாகும். இவ்விரு அடியார்களின் நற்பணியை வாழ்த்துகின்றேன். இப்பணியில் மேலும் பங்குகொண்ட அன்பர்கள், கட்டட நிர்மாணக் கலைஞர்கள் அனைவரையும் வாழ்த்துவதோடு, எல்லாம் வல்ல பரராஜசேகரன் திருவருளால் அன்பர்கள் அனைவரும் எல்லா நலன்களும் பெற்று வாழ நல்லாசி கூறி அமைகிறேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*இணுவில் அருள்மிகு பரராஜசேகரப் பிள்ளையார்*
*திருக்கோயில் மூத்த பிரதமகுரு*
*சிவஸ்ரீ. வை. சோமாஸ்கந்தக் குருக்கள்.*

## ஆதீன முதல்வரின்...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆலயத்தின் உட்சுற்றுப்பிரகாரம் முதல்ஆலயச் சூழல் என்றும் தெய்வீக ஒளி வீசிய வண்ணம் காட்சி தருகிறது. இத்தனைக்கும் காரணம் பக்தர்களின் தூய வழிபாடும் திருத்தொண்டும் எனலாம். ஆலயங்கள் தம் வழிபாட்டுப் பணியோடு நல்லறப் பணிகளை நிறைவேற்ற வேண்டியது பெருங்கடனாகும். அவ்வகையில் அறப்பணிகளைக் குறிப்பாக அன்னதானம், அறிவுத்தானம் போன்ற கைங்கரியங்களை நிறைவேற்ற புதிய மணிமண்டபம் அமைக்கப்பெற்றமை பெரும் வரப்பிரசாதமாகும். இப்பணியை நிறைவேற்றிய அன்பர்களை வாழ்த்துகிறோம். மணிமண்டபத்திறப்பு விழாவை முன்னிட்டு "ஐங்கரன் அமிர்தம்" என்ற நூல் வெளியிடுவது குறித்து மகிழ்ச்சியடைகிறோம். மேலும் பல அருட்பணிகள் தொடர வாழ்த்தி நல்லாசி கூறி பிரார்த்திக்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

*நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர்*
*ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக*
*ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்.*

# நடைபாதைக் கடைகள் பலவும் அகற்றப்பட்டன

யாழ்ப்பாணம்,மே9

யாழ். நகரின் மையத்தில் - பஸ் நிலையத்தின் பின்புறமாக மாநகர சபையின் அனுமதியின்றி அமைக்கப்பட்டிருந்த நடைபாதை வியாபார நிலையங்கள் பொலீஸாரின் உதவியுடன் அகற்றப்பட்டன.

நேற்றுமுன்தினம் காலை இந்தச் செயற்பாடு இடம்பெற்றது.

இது விடயமாக மேலும் தெரிவிக்கப்படுவதாவது:-

நடைபாதை வியாபார நிலையங்களால் தமக்குப் பல்வேறு இடர்கள் ஏற்படுவதாக யாழ். நகர வர்த்தகர்கள் பலர் வணிகர் கழகத்தில் முறைப்பாடு செய்திருந்தனர்.

வர்த்தகர்களின் இந்த முறைப்பாடுகள் தொடர்பாக யாழ். வணிகர் கழகமும் யாழ். மாநகரசபையிடம் அவ்வப்போது முறைப்பாடு செய்திருந்தது.

இந்த முறைப்பாடுகளின் அடிப்படையில் நேற்று முன்தினம் பொலீஸாரின் உதவியுடன் யாழ். மாநகர சபை உத்தியோகத்தர்கள் அடங்கிய குழுவினர் நகரப்பகுதிக்குச் சென்று நடைபாதைக் கடைகளை அங்கிருந்து அகற்றினர். (எ-ரி-12)

### சாயி சமித்தியின் ஆண்டுவிழா

கோப்பாய்,மே9

கோப்பாய் சாயி சமித்தியின் ஆண்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதனை முன்னிட்டு விசேட கூட்டுப பிரார்த்தனை வழிபாடுகள் இடம் பெறவுள்ளன.

(எ-72)


### 31 ஆவது நாள் நினைவு அஞ்சலி

*தோற்றம்* 30 11 1929



*மறைவு* 09 04 2004

*நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், மல்லாவியை வாழ்விடமாகவும், இறுதிக் காலத்தில் சென்னையில் வசித்தவருமாகிய*

அமரர்

திருமதி தங்கம்மா சுப்பிரமணியம்

அவர்களின் வீட்டுக்கிருத்தியம் சென்னையில் (இந்தியா) 09.05.2004 அன்று நடைபெறுகிறது.

என்றும் எம் இதயத்தில் குடியிருக்கும் தெய்வமே!
காலமெல்லாம் உம்மை எம் இதயத்தில் குடியமர்த்தி வணங்குகிறோம்
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

T.P.0091-44-26543855

பிள்ளைகள்,பேரப்பிள்ளைகள்,
மருமக்கள், பெறாமகன்,
உற்றார், உறவினர்.

(31795)(37)


### முன்பள்ளி ஆசிரியர் கலந்துரையாடல்

தென்மராட்சி,மே9

தென்மராட்சிக் கல்வி வலய முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தில் நடைபெறுமென தென்மராட்சி கலவி வலய முன்பள்ளி பாட உதவிக்கல்விப்பணிப்பாளர் சு.பாக்கியராசா அறிவித்துள்ளார்.(எ-10)

### சாவகச்சேரிப் பாடசாலைக்கு படையினர் உதவி

வெசாக் தினத்தையொட்டி 533 ஆவது படையணியினர் சாவகச்சேரி, கச்சாய் வீதி சக்தி அம்மன் தமிழ் வித்தியாலயத்தில் நேற்றுமுன்தினம் பல்வேறு நலத்திட்டங்களை மேற்கொண்டனர்.

காலை பாடசாலைக் கட்டடம் மற்றும் பாடசாலை வளவினை சிரமதானம் மூலம் துப்புரவு செய்த படையினர், அங்கு பல பூமரக் கன்றுகளை நடுகை செய்தனர்.

பாடசாலை மாணவர்களுக்கு சிற்றுண்டிகளையும் கற்றல் உபகரணங்களையும் வழங்கியதுடன், பாடசாலைத் தேவைக்கென முதலுதவிப் பெட்டியினையும் படையினர் வழங்கியதாக அதிபர் திருமதி ச.தர்மகுலசிங்கம் தெரிவித்தார். (எ-117)

### டி.எக்ஸ்.என் நிறுவனத்தின் கிளை நிறுவனம் திறப்பு

யாழ்ப்பாணம்,மே9

டி.எக்ஸ்.என். நிறுவனத்தின் கிளையொன்று இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இல.473, தட்டா தெருச் சந்தி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் திறந்துவைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி எஸ்.கதிரவேற்பிள்ளையும் சிறப்பு அதிதிகளாக ஓய்வுபெற்ற நீதிபதி மு. திருநாவுக்கரசு, யாழ். பல்கலைக்கழக வணிகத்துறைத் தலைவர் க.தேவராஜா, இலங்கை வங்கியின் வடமாகாண உதவிப் பொதுமுகாமையாளர் கே.பாலசுப்ரமணியம், முன்னாள் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.விகிருஷ்ணசாமி, சித்த ஆயுர் வேத வைத்தியர் டாக்டர் பிலிப்பு டாக்டர் ஈஸ்வரி கந்தையா ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.(எ-10)

### பெருமாள் ஆலயத்தில் சக்கர வழிபாடு

யாழ்ப்பாணம்,மே9

யாழ். வண்ணை ஸ்ரீ வேங்கடேசப் வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 7 மணி தொடக்கம் முற்பகல் ஒரு மணி வரையான சுப நேரத்தில் நவகலச ஆராதனையும் ஸ்ரீ சுதர்ஷன சக்கரவழிபாடும் நடைபெறவுள்ளன.

(எ-10)


**தபால்மூலக் கல்வி**

கணனியின் உதவியுடன் கடைக்கணக்கு எழுதும் பயிற்சி Method of Computerized book - Keeping & Accountancy பாடநெறி ஆறு மாத காலத்தில் தபால்மூலம் ஆங்கிலம்/தமிழ் மொழிகளில் கற்றுத்தரப்படும். விவரங்களுக்கு சுயவிலாசமிடப்பட்ட தபாலுறையுடன் தொடர்பு கொள்க. Bright Training Centre, P.O.Box-162, Colombo.(C-34763)

**தபால்மூலக் கல்வி**

பாலர் முன்பள்ளி ஆசிரியர் பயிற்சிநெறி Nursery Teacher Training Course ஆறு மாத காலத்தில் தபால்மூலம் ஆங்கிலம்/தமிழ் மொழிகளில் கற்றுத்தரப்படும். விவரங்களுக்கு சுயவிலாசமிடப்பட்ட தபாலுறையுடன் தொடர்பு கொள்க. Bright Training Centre, P.O.Box-162, Colombo.(C-34764)

**விண்ணப்பப் படிவம்**

அரசாங்கத்துறையில் பதவி நிலைகளுக்கு தொழிலற்ற பட்டதாரிகளைச் சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பப்படிவம் பெறவிரும்புவோர் சுயவிலாசமிடப்பட்ட முத்திரையொட்டிய தபாலுறையுடன் 10/= பெறுமதியான முத்திரையை இணைத்து அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

Bright Training Centre
P.O.Box 162, Colombo (34765)

**தேவை**

பாலர் பாடசாலை ஆசிரியைகள் தேவை. கணிதம், தமிழ் உட்பட ஆறு பாடங்களில் க.பொ.த. சாதாரணதர சித்தியும் முன் அனுபவமும் இருத்தல் வேண்டும். நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

15.05.2004ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும்.

தொடர்பு:
பாலர் கல்விக்கழகம்
49/5, யாழ். வீதி, யாழ்ப்பாணம்.

**கல்வி**

ஆண்டு 5 புலமைப்பரிசில் மாணவர்களுக்கான கடந்த கால வினா–விடை, வெற்றிக்கனி மாதிரி வினா–விடை வெளிவந்துவிட்டது V.P.P. யில் பெற 25/= முத்திரையுடன் தொடர்பு கொள்ள.

Bright Training Centre
P.O.Box 162, Colombo. (34767)(37)

**வினா-விடைகள் விற்பனைக்கு**

க.பொ.த உயர்தர மாணவருக்கான இந்து நாகரிகம், தமிழ், அரசியல் மூலதத்துவம், கணக்கியல், பொருளியல் மாதிரி வினா–விடை நூல்களும் தமிழ், வர்த்தகமும் நிதியும், பொருளியல், இந்துநாகரிகம் கடந்த கால வினா–விடைகளும் விற்பனைக்கு உண்டு V.P.P. மூலம் பெறவிரும்புவர் 25/= முத்திரை அனுப்பிபெற்றுக்கொள்ளலாம்.

Bright Book Centre
5-27, First Floor, Colombo
Central Super Market
Complex Colombo. (34767)(37)

**வெளிவந்துள்ளது**

G.C. E.A/L 2004
பரீட்சைக்குரிய
பொது அறிவுப் புத்தகம்
வெளிவந்துள்ளது.
ரூபா 125/= மட்டுமே!
கிடைக்கும் இடம்
யாழ்.சயன்ஸ் கல்லூரி
கன்னாதிட்டி,
பொருளியற்கல்லூரி (31766)(37)

**மணமகள் தேவை**

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1976இல் ஆயிலிய நட்சத்திரத்தில் பிறந்த U.K. பொருளியல் சிறப்புப்பட்டதாரியும், CIMA இறுதியாண்டு மாணவரும், ஸ்பொன்சர் செய்யக்கூடியவருமான மணமகனுக்கு நற்குணமும், அழகும், சீதனமும், உயர்கல்வி பயின்றவருமான மணமகள் உடனடியாகத் தேவை. ஆவணிக்கு வந்து திருமணம் செய்து மணமகளை அழைத்துச் செல்வார். ஜாதகம், சீதனம், புகைப்படம்மற்றும் விவரங்களுடன் உடனடியாகத் தொடர்புகொள்ளவும். சகல விவரங்களும் இரகசியமாகப்பரிசீலிக்கப்பட்டு திருப்பி அனுப்புவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு:-
விளம்பர இல. 2258
மே/பா உதயன். (31785)

## நல்லைக் குமரன் மலருக்கான ஆக்கங்கள் - 2004 (12)

நல்லைக் கந்தனின் வருடாந்த உற்சவ காலத்தில் வழமை போன்று எமது குழுவினால் இவ்வருடமும் வெளியிடப்படவுள்ள மேற்படி மலருக்குகந்ததும் காலத்தின் தேவைக்கேற்றதுமான தலைப்பில் தரம்மிக்க ஆக்கங்களை *எதிர்வரும் 30.06.2004ஆம் திகதிக்கு* முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி உதவும்படி துறைசார்ந்த அறிஞர்கள், சைவப்பெரியார்கள் மற்றும் கல்விமான்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

சைவசமய விவகாரக் குழு,
(சி-34761) (14-26) யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்.

## தபால் மூலக்கல்வி

ஆங்கிலம், சிங்களம் பேச, எழுத, வாசிக்க மூன்றுமாத காலத்தில் தபால் மூலம் கற்றுத்தரப்படும். மேலதிக விவரங்களுக்கு சுயவிலாசமிடப்பட்ட தபாலுறையுடன் தொடர்புகொள்க. (சி-34762)

**Bright Training Centre,**
Po.Box - 162, Colombo.

## COMPUTER TYPE SETTING

(பயிற்சிக்காலம் 3மாதம்)

1. அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்
2. உடனடி வேலை வாய்ப்பு

ஆரம்பம்: 10.05.04
திங்கள் காலை 8மணி

**THIGAAL K.K.S. வீதி,**
(21788) இணுவில்.

## O/L DAY CLASS
### பிரிவு II

கணிதம் 8மணித்தியால வகுப்பு
ஆரம்பம்: 10.05.04
திங்கள் காலை 8மணி

**THIGAAL K.K.S. வீதி,**
(21788)(26) இணுவில்.

## உங்களுக்கோர் அரிய வாய்ப்பு!

A Hand Book To All Computer Users 120/=
A Hand Book On Administration & Communication 150/=
By: **A.S.Uthayashankar** M.B.A.

கணனிபற்றி அறிந்துகொள்ளவும் ஆங்கில அறிவை விருத்திசெய்யவும் நிர்வாகக் குறைபாடுகளை நிவர்த்திசெய்து நன்மைபெறவும் இவ்விரு நூல்களும் வழிகோலுகின்றன. (Report Writing, Job Descriptions, Presentation, Inter Office Communication, Designs etc.)

இந்நூல்கள் மாணவர்கள், ஆசிரியர்கள், தொழிலதிபர்கள், அதிகாரிகள் வேலைவாய்ப்பை எதிர்பார்த்திருப்பவர்கள் மற்றும் சகல தரப்பினருக்கும் ஏற்றவை.

நீங்கள் தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:
May 9-14 ஆம் திகதிகளில்
**Sai Ram Trading Company,** 101, Palaly Road, Jaffna.
Between Kantharmadam & Illupiadi Junction
Or Write to
NO:18(1/A), Dr.E.A.Cooray Mawatha, Colombo 06.
(31765)(34-14-26)

## மிகக் குறைந்த விலையில்
## பெறுமதிமிக்க கொள்வனவு

- ★ (OSAKI) ஒசாக்கி சி.டி.பிளேயர்
- ★ (TIGAR) ரைகர் ஜெனரேட்டர் - 950W

இவற்றை எதிர்பாராத அதிரடிக் கழிவில் பெற்றுக்கொள்ளலாம்.

மற்றும்.........
- ★ ஓடியோ பாடல் சி.டிக்கள்,
- ★ வீடியோ பாடல் சி.டிக்கள்
- ★ எம்.பி.3 பாடல் சி.டிக்கள்
- ★ திரைப்பட சி.டி.வகைகளையும்

குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள....

**கவிதாஸ் எலக்ரோனிக்ஸ்**
181, நவீன சந்தை உட்புறம், யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு:
**T.P.NO.: 021-4590579.**
(C/34763) (34-14-26)

## வீட்டில் இருக்கும் முதியோரை, நோயாளரைப் பராமரிக்கும் சேவை

உங்கள் உற்றார், உறவினரைப் பராமரிக்க வீட்டில் ஒருவர் இல்லையே என்று கவலையா? கவலையை விடுங்கள்!



இதோ! தேசமானிய லலித் கொத்தலாவலையின் சேவைகளில் ஒன்றான பயிற்றுவிக்கப்பட்ட உதவித் தாதியர் நிறுவனம் உங்களுக்கு ஆதரவுக் கரம் நீட்டிக் காத்திருக்கின்றது. உடனே தொடர்புகொள்ளுங்கள்.

முதலாவது மாடி,
173, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.
T.P.: 222 6256.

சிலிங்கோ கூட்டுநிறுவனம்,
சிலிங்கோ வீட்டுத் தாதிய பராமரிப்புச் சேவை.
(31762) (2[illegible]14)

## ANKARAN COMPANY
## CHETTINAD CEMENT




இந்தியாவிலும், இலங்கையிலும் தரச்சிறப்புமிக்க சிமெந்தை மொத்தமாகவும் சில்லறையாகவும் மலிவாகவும் பெற்றுக்கொள்ளுங்கள்.

ஏக விநியோகத்தர்:
**முருகன் களஞ்சியம்,**
*167, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.* தொ.பே. 021 222 6968
(31789)(42-14-26)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 12 - 10 - 1943 | 21 - 04 - 2003 |

### திருமதி மகேஸ்வரி நல்லையா

(கனடா மொன்றியலில் வசித்தவர்)
திதி: பஞ்சமி 09.05.2004

அன்பின் திருவுருவே! பாசத்தின் ஒளிவிளக்கே!!
நாள் ஒவ்வொன்றும் மறைந்தாலும் மாறிடுமோ
பெரியம்மா! உம் பாசத்தின் நினைவுகள் தான்!
எம் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

கெருடாவில் தெற்கு,
தொண்டமனாறு.
(31792)(34-14-26-16)

- து.தர்சினி
(பெறாமகள்).

## உள்ளத்தை உருக்கும் நினைவலைகள்

6 ஆம் ஆண்டு 8 ஆம் ஆண்டு



| அமரர் தம்பிஐயா பாலகிருஷ்ணன் | | திருமதி யோகேஸ்வரி பாலகிருஷ்ணன் |
|---|---|---|
| 23.10.1930 | ← தோற்றம் → | 05.05.1940 |
| 12.06.1998 | ← மறைவு → | 09.05.1996 |

அன்பாய் அரவணைத்து ஆதரவு மொழிபேசி
பண்பாய் எமை வளர்த்து ஆளாக்கிய தெய்வங்களே!
உம்பால் நாம் கொண்ட பாசமும் நேசமும்
உங்களையே நிதம் எண்ணிக் கலங்க வைக்கிறதே!
எங்கள் வாழ்வில் ஒளியேற்றி வைத்த பாசதீபங்களே!
என்றும் உம்நினைவு நெஞ்சில் நிலைக்கின்றதே!
மங்காத மணிவிளக்காய் சுடர்விட்டுப் பிரகாசிக்கும்
உங்கள் ஒளி முகங்களை மறக்கவே முடியாது!
ஆண்டுகள் பல கடந்தாலும் ஈண்டு உம் நினைவுடனேயே
மீண்டு வரமாட்டீரோ என ஏங்கியே தவிக்கின்றோம்
மாண்டு நீர் போனாலும் மாண்புடனே எம் மனங்களில்
நீண்டு நிலைபெற்றே நிம்மதியைத் தந்திடுவீர்!

பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

*பாலகிருஷ்ண ஆபரணமாளிகை,*
*616, பருத்தித்துறை வீதி,*
*நல்லூர்.*

*65/1, நாயன்மார் வீதி, நல்லூர்,*
*யாழ்ப்பாணம்.*
*0777-733034*

(31776)

# ஜே.வி.பியின் இரட்டை வேடம் அம்பலம் என்கின்றார் ராஜித!

## நிலைமையை விளக்கி அறிக்கை

கொழும்பு,மே9

ஜே.வி.பியின் இரட்டை வேடம் இப்போது அம்பலமாகிவிட்டது என்று கூறுகின்றார் ஐ.தே.கட்சியின் முன்னாள் அமைச்சரும், தற்போதைய களுத்துறை மாவட்ட எம்.பியுமான ராஜித சேனாரத்ன.

அவர் இவ்விடயம் தொடர்பாக விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சமாதானப் பேச்சுக்கு அனுசரணையாளர்களாக நோர்வே அரசிற்கு அழைப்புவிடுத்து, தமிழ்மக்களின் ஏகப்பிரதிநிதிகளாக விடுதலைப் புலிகளை ஏற்றுக்கொண்டு, ஐக்கிய தேசியக் கட்சிக்கும், புலிகள் அமைப்பிற்கும் இடையிலான பேச்சு இடைநிறுதப்பட்ட இடத்திலிருந்து மீண்டும் பேச்சை ஆரம்பிப்பதற்குத் தாங்கள் நடவடிக்கை எடுக்கிறார்கள் என ஜனாதிபதியும் வெளிவிவகார அமைச்சர் கதிர்காமரும் குறிப்பிட்டுள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சிக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையேயான சமாதானப் பேச்சின் இலக்கு தமிழ் ஈழத்தைப் பெற்றுக்கொடுப்பதாகும் எனக்கூறி, நாடு முழுவதும் போராட்டம் நடத்தி, நோர்வேப் பிரதிநிதிகளை 'வெள்ளைப் புலிகள்' என்று விமர்சித்து நோர்வேத் தூதரகத்திற்கு முன்பாக நோர்வேப் பிரதிநிதிகளின் கொடும்பாவிகளையும், நோர்வே நாட்டுக்கொடியையும் எரித்து, தமிழ்மக்களின் ஏகப் பிரதிநிதிகளாக விடுதலைப் புலிகளை ஏற்றுக்கொள்ள முடியாது எனக் கூறிய ஜே.வி.பியின் அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் தற்போது எதுவித பேச்சுமின்றி கண், வாய் மூடிக் கொண்டிருக்கின்றனர்.

புலி உறுப்பினர்களுக்கு இலங்கை விமானப்படையின் வானூர்தியைக் கொடுத்தது தேசத்துரோகச் செயல் எனக் கூச்சலிட்டவர்கள், அன்ரன் பாலசிங்கம் அரச வானூர்தியில் பயணிக்கும்போது மேல்நோக்கிப் பார்த்துக்கொண்டிருக்கின்றனர்.

பெண் போராளிகள் இடுப்புப் பட்டியணிந்து அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு வருவதையும், மணிராசகுளம் படைமுகாமை அகற்றாமல் இருப்பதும் போர்நிறுத்த உடன்படிக்கையை மீறி யுத்தத்திற்குச் செல்வதற்கான தூண்டுதல்கள் எனக் குறை கூறிய ஜே.வி.பி. அமைச்சர்கள் தற்போது எதுவிதமான பேச்சுமின்றி மௌனித்துக் கொண்டிருக்கின்றனர்.

விடுதலைப் புலிகளுக்கு இடைக்கால நிர்வாகத்தைப் பெற்றுக்கொடுப்பதற்குத் தமது உயிர் உள்ளவரை இடம்கொடுக்கப் போவதில்லை என்று நெற்றியில் கைவைத்து சத்தியம் செய்த ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இன்று மங்கள விளக்கேற்றி அமைச்சுப் பதவிகளில் சத்தியப்பிரமாணம் செய்கின்றனர்.

இனப்பிரச்சினை சம்பந்தமாக ஜே.வி.பியின் கொள்கையும், மனப்பான்மையும் மாறியிருப்பின் அது சந்தோசப்பட வேண்டிய விடயம். ஆயினும், அவ்வாறில்லாது தனிப்பட்ட அரசியல் சக்தியைப் பாதுகாத்துக்கொள்ளும் யுக்தியாகத் தேசியத் திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் உரிமையைத் தேசியப் பிரச்சினையாக எடுத்துக்கொண்டு மக்களை மேலும் ஏமாற்றும் இரு கொள்கைகளைக் கடைப்பிடிப்பதாயின் அது கவலைக்குரிய விடயமாகும்.

சமாதான நடவடிக்கைகள் சம்பந்தமாக ஜே.வி.பியினரின் நிலைப்பாட்டைத் தெளிவாக மக்கள்முன் வெளிப்படுத்தாது தங்கள் அமைப்பைத் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் என்று கூறிக்கொண்டு தமது அமைச்சுப் பதவிகளைப் பாதுகாத்துக்கொள்ளும் ஜே.வி.பி., மிகவும் கீழ்மட்டத்திற்குத் தள்ளப்பட்டுள்ளதை இதன்மூலம் காணக்கூடியதாக உள்ளது - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-க)

### கல்வி மேம்பாட்டுப் பேரவையின் ஆதரவில்

# தீவகக் கல்விநிலை குறித்து கல்வியாளர்கள் ஆராய்வு

மண்டைதீவு,மே9

தீவகக்கல்வி அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் ஒன்று யாழ். மாவட்டக் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் அண்மையில் தீவகக் கல்விவலயத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இக்கூட்டத்தில், தீவகத்தின் சமகாலக் கல்விநிலை, கல்வித்தர அபிவிருத்தி, கல்விமேம்பாடு,கல்வி முன்னேற்றத்தில் எதிர்நோக்கப்படும் சவாலகள் மற்றும் ஆசிரியர் பற்றாக்குறை பற்றிக் கலந்துரையாடப்பட்டது.

தீவகக் கல்வி வலயத்தில் இயங்கிவரும் 53 பாடசாலை அதிபர்கள், கோட்டக்கல்வி அதிகாரிகள், வலயக கல்வித் திணைக்கள அதிகாரிகள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் முன்னாள் வடக்கு - கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளரும், மேம்பாட்டுப் பேரவை உறுப்பினருமான செல்வி தி.பெரியதம்பி, தமிழீழக் கல்விக் கழகத்தைச் சேர்ந்த அருள் மாஸ்டர், கை.கவியன்பன், தீவக அரசியல் துறைப்பொறுப்பாளர் அருந்தவம் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ப)

## பவளவிழா ஏற்பாடுகள்

பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியின் பவளவிழா எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் கொண்டாடப்படவுள்ளது. பவளவிழாவையொட்டி பவளவிழா மலர் ஒன்றும் வெளியிடப்படவுள்ளது.

பவளவிழா ஏற்பாடுகளைச் செய்வதற்கெனக் கல்லூரியின் அபிவிருத்திச் சபை, அதிபர் செல்வி அ.கனகரத்தினம் தலைமையில் கூடி முடிவுகளை எடுத்துள்ளது. (எ-173)

# சாவகச்சேரிப் பகுதியில் பொதுமண்டபம் இல்லை

## ரவிராஜ் எம்.பி. கவலை

வரணி,மே9

சாவகச்சேரிப் பிரதேசத்தில் பொது மண்டபம் ஒன்று இல்லாமையால் பொது நிகழ்வுகள், விவாகவைபவங்கள் என்பவற்றை நடத்த மக்கள் மிகவும் சிரமப்படுகின்றனர்.

- இவ்வாறு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் அவரது பணிமனையில் நடந்த ஆதரவாளர்களுக்கான மாதாந்தக் கருத்தரங்கிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவித்ததாவது:-

கடந்த யுத்த காலகட்டத்தில் பல கட்டடங்கள் அழிக்கப்பட்டதன் காரணமாக நகரில் பொதுமண்டபம் இல்லாமல் மக்கள் சிரமப்படுகின்றனர். சாவகச்சேரி நகரை மையமாகக் கொண்டு பொதுமக்கள் பொருத்தமான காணி ஒன்றைப் பெற்றுதர முயற்சி செய்தால் மண்டபத்துக்குரிய நிதியை ஒதுக்கி மண்டபத்தைக் கட்ட நடவடிக்கை எடுப்பேன் - என்றார் அவர். மேலும், மாதாந்தம் இப்படியான கலந்துரையாடல் நடத்த உத்தேசித்திருப்பதாகவும் -அதில் மக்கள் பொதுப்பிரச்சினைகளை முன்வைக்கலாம் என்றும் -

தம்மால் இயன்ற உதவிகளைச் செய்யத் தயாராய் உள்ளேன் என்றும் - அவர் தெரிவித்தார். (ப-170)

## தென்மராட்சிக்கு அ.அட்டைகள் கிடைத்தன

தென்மராட்சி, மே9

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தினூடாக தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தவர்களில் 175 பேரின் அடையாள அட்டைகள் பிரதேச செயலகத்திற்கு வந்துள்ளன.

இந்த அடையாள அட்டைகள் அந்தந்தக் கிராம அலுவலர்கள் மூலம் உரியவர்களுக்கு வழங்கப்படவுள்ளன என்று பிரதேச செயலக அடையாள அட்டைப் பிரிவினர் தெரிவித்தனர். (ஐ-117)

# புதிய கணனி வைரஸ் பற்றி உலகெங்கும் எச்சரிக்கை

வின்டோஸ் இயக்கியைப் பாவிக்கும் கணனியை உபயோகிக்கும் அனைவருக்கும், குறிப்பாக ஒன்றிற்கு மேற்பட்ட கணனிகளை, நெடவேர்க் அமைப்பில் இயக்கும் நிறுவனங்களுக்கு, மைக்ரோசொவ்ட் நிறுவனம் விடுத்துள்ள அவசர அறிவித்தலில், புதிதாகப் பரவிவரும் மிக மோசமான வைரஸ் குறித்து எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

W32.Sasser.A என்றழைக்கப்படும் இந்த வைரஸ் மற்றும் இதே பெயரைக்கொண்ட இதர பைல்களையும், உடனடியாகக் கணனியிலிருந்து அகற்றுவதன் மூலம் மட்டுமே, இந்த வைரஸ் பாதிப்பிலிருந்து கணனியைப் பாதுகாக்கமுடியும்.

'Firewall' என்றழைக்கப்படும், கணனிகளைப் பாதிப்பிலிருந்து பாதுகாக்கும் இயக்கிகள் கொண்ட கணனிகளில், இந்தப் 'Firewall' களை தொழிற்பட வைத்து, அது தொழிற்படும் சமயத்தில், மைக்ரோசொவ்ட் நிறுவனம், தனது இணையத் தளத்தில் அறிமுகம் செய்துள்ள தானியங்கி வைரஸ் நீக்கியை (அன்ரி-வைரஸ்) தரவிறக்கம் செய்வதன் மூலம், இந்த வைரஸின் பாதிப்பைத தவிர்க்கமுடியும்.

இதுவரை குறைந்தது ஒரு மில்லியனுக்கும் அதிகமான கணனிகளைச் செயலற்றதாக்கி, பல சர்வதேச நாடுகளிலும் பாரிய நிறுவனங்கள் சிலவற்றைச் செயலிழக்க வைத்துள்ள இந்தவகை வைரஸ், வின்டோஸ் எக்ஸ்.பி., வின்டோஸ் 2000 இவற்றுடன் வெளியான 'சேவிஸ பாக்' என்றழைக்கப்படும் மேலதிக அம்சங்கள் அடங்கிய வழங்கிகளைப பாவிக்கும் கணனிகளைக் குறிப்பாகத் தாக்கிவருகின்றன.

இவ்வார இறுதியில் வெளியானதாகக் கருதப்படும் 'சாசர்' என்றழைக்கப்படும் இந்த வைரஸை, மைக்ரோ சொப்ற் நிறுவனம் உடனடியாகவே கண்டுபிடித்துவிட்டதால், விரைவாக இதைத் தடை செய்யமுடிந்தாலும், இந்த வகையைச் சேர்ந்த A, B, C, D என நான்கு வெவ்வேறு வைரஸ்கள் இதே பெயரில் பரவியதால், ஐரோப்பாவிலும், ஆசியா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளிலும் இந்த வைரஸ் தன் கைவரிசையைக் காட்டியிருக்கிறது. வட அமெரிக்காவிலும் பல நிறுவனங்கள் இந்தவகை வைரஸால் பாதிப்பிற்குள்ளாகியுள்ளன.

இதனோடு ஒத்த இன்னும் பல வைரஸ்களும் பரவலாம் என்று எதிர்பார்க்கப்படுவதால், வீடுகளிலும் வியாபார நிறுவனங்களிலும் தொழில் இடங்களிலும் கணனிகளை வைத்திருப்பவர்கள், மைக்ரோசொப்ற் நிறுவனம் அறிமுகம் செய்துள்ள 'தானியங்கி வைரஸ் நீக்கி'யை உடனடியாக அவர்களது இணையத் தளத்திலிருந்து தரவிறக்கம் செய்து, கணனிகளைப் பாதுகாப்பது அவசியம் என்று பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

மேலதிக தகவல்களையும், உதவிகளையும் பெற, இந்த இணையத் தளத்திற்கு விஜயம் செய்யுங்கள்: http:/www.microsoft.com/security/incident/sasser.asp. (ஐ)



மானிப்பாய் கிறீன் மெமோறியல் வைத்தியசாலைக்குக் கிடைத்துள்ள இரத்தப் பகுப்பாய்வுப் பரிசோதனை இயந்திரத்தை தென்னிந்திய திருச்சபையின் பேராயர் கலாநிதி அதிவண. எஸ்.ஜெபநேசன் அடிகளார் இயக்கிவைத்து ஆசீர்வதிப்பதைப் படத்தில் காணலாம். *(படம்: வலி. தெற்குச் செய்தியாளர்)*

### நீதிமன்றை அவமதித்த குற்றச்சாட்டு:

# உயர்நீதிமன்றின்முன் ஆஜரானார் முன்னாள் அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க

உயர்நீதிமன்றத்தை அவமதித்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்காவுக்கு எதிரான வழக்கு நேற்று முன்தினம் உயர்நீதிமன்றத்தினால் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா, நீதியரசர் அசோக டி.சில்வா, ராஜா பெர்னாண்டோ ஆகியோர் முன்னிலையில், இந்த வழக்குக்காக நேற்று முன்தினம் ஆஜரான எஸ்.பி.திஸாநாயக்க தனக்கு எதிராகச் சாட்டப்பட்டுள்ள குற்றங்களில் தாம் நிரபராதி என்று தெரிவித்தார்.

இதனையடுத்து, வழக்கு எதிர்வரும் ஜூலை முதலாம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

மீண்டும் இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும்போது சாட்சிகளை ஆஜர்செய்யுமாறு நீதிமன்றப் பதிவாளருக்கு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க ஒன்பது பேர் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளார்கள். உயர்நீதிமன்றத்தை அவமதிக்கும்வகையில் எஸ்.பி.திஸாநாயக்க ஆற்றியதாகக் கூறப்படும் உரை அடங்கிய ஒளிப்பதிவு நாடாவைச் சமர்ப்பித்த ஹபராதுவ பிரதேச ரூபவாஹினிக் கூட்டுத்தாபன செய்தியாளர், 'லங்கா தீப' சிங்களப் பத்திரிகையின் பிரதம ஆசிரியர், இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் தலைவர், சம்பந்தப்பட்ட உரை நிகழ்த்தப்பட்டதாகக் கூறப்படும் உனவட்டுன பிரதேசத்தைச் சேர்ந்த மூன்று பேர் ஆகியோர் சாட்சிகளுக்குள் அடங்குவர்.

நீதிமன்றத்தில் இக்குற்றச்சாட்டுக்கள் வாசிக்கப்பட்ட சமயம் எஸ்.பி.திஸாநாயக்க சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி ருமேஷ் டி சில்வா பூர்வாங்க ஆட்சேபனை தெரிவித்து, இந்தக் குற்றப்பத்திரத்தை விசாரணை செய்யும் அதிகாரம் உயர்நீதிமன்றத்திற்கு இல்லை என்றார்.

ஆயினும், பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா, அந்த ஆட்சேபனையை நிராகரித்து விசாரணைகளைத் தொடருமாறு உத்தரவிட்டார்.

ஜூலை முதலாம் திகதி ஐந்து நீதியரசர்கள் கொண்ட உயர்நீதிமன்றத்தின் முன்னிலையில் மீண்டும் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும். (எ-க)

## தொண்டர்ஆசிரியருக்கு நிரந்தர நியமனம்

தென்மராட்சி,மே9

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றியோருக்கு மாகாண கல்வித் திணைக்களத்தினால் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இந்த ஆசிரியர்களுக்கான நியமனக் கடிதங்கள் அவர்களின் சொந்த முகவரிக்கு அனுப்பப்பட்டு ஆசிரியர்கள் பாடசாலைகளில் தமது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளதாகவும் கூறப்பட்டது.

இது தொடர்பாகத் தென்மராட்சிக் கல்வி வலயத்துடன் தொடர்புகொண்ட போது இந்த நியமனம் தொடர்பாக தமக்கு எந்தவொரு கடிதமும் கிடைககவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-117)

# சாவகச்சேரிக் கல்விக் கோட்டத்தில் 11,855 மாணவர்களுக்கு இலவச உணவு

தென்மராட்சி,மே9

சாவகச்சேரிக் கல்விக்கோட்டத்தில் 55பாடசாலைகளைச் சேர்ந்த 11ஆயிரத்து 855 மாணவர்களுக்கு காலை உணவு இலவசமாக வழங்கப்படவுள்ளது.

உலக உணவுத் திட்டத்தின் கல்விக்கான உணவுச்செயற்றிட்டத்தின்கீழ் இந்த இலவச காலை உணவு எதிர்வரும் ஜூன் முதலாம் திகதி முதல் வழங்கப்படவுள்ளதாகக் கோட்டக்கல்வி அலுவலர் நா.சத்தியநாதன் தெரிவித்தார்.

இக்கோட்டத்தில் உள்ள 55 பாடசாலைகளில் தரம் ஒன்று தொடக்கம் தரம் 9 வரையான வகுப்புகளில் கல்விபயிலும் மாணவர்களுக்கு சத்துணவாகக் காலை வேளைகளில உணவு வழங்கப்படவுள்ளது.

திங்கள், புதன், வெள்ளி ஆகிய நாள்களில் இலைக்கஞ்சியும் செவ்வாய், வியாழன் ஆகிய நாள்களில் சத்துமாவும் மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ளன. உலக உணவுத்திட்ட நிறுவனத்தினரால் கடந்த வருடம் வாகரை, பூநகரி, நெடுங்கேணி, ஓமந்தை ஆகிய கல்விக்கோட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட இந்த இலவச காலை உணவு வழங்கும் திட்டம் வெற்றியளித்துள்ளது.

இதனையடுத்தே, வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள 21 கல்விக்கோட்டங்களில் இவ்வருடம் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

இதன் பிரகாரம் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த சாவகச்சேரி, தெல்லிப்பழை, ஊர்காவற்றுறை, மருதங்கேணி மற்றும் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த கண்டாவளை, பளை ஆகிய கல்விக்கோட்டங்களில் உள்ள 25 ஆயிரம் மாணவர்களுக்கு இந்த உணவுத்திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது. இம்மாவட்டங்களில் மேற்கொள்ளப்படவுள்ள திட்டத்திற்குப் பொறுப்பாளராக ரேயன்அண்டர்சன் என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான உணவுப்பொருள்கள் அந்தந்தப்பாடசாலைகளுக்கு வழங்கப்படவுள்ளதாகவும் -

களஞ்சிய வசதியில்லாத பாடசாலைகளுக்கான உணவுப்பொருள்கள் அந்தந்தப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வாராந்தம் வழங்கவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் -

கோட்டக்கல்வி அலுவலர் மேலும் தெரிவித்தார்.

சத்துணவுக்குப் பயன்படுத்தும் மரக்கறி மற்றும் தேங்காய் ஆகியவற்றைக் கொள்வனவு செய்ய மாணவர் தொகைக்கேற்ப நிதி வழங்கப்படும் எனவும் அவர் கூறினார்.

இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவது தொடர்பான கூட்டம் அதிபர்களுக்கு நடத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-117)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி, வீட்டுக்கிருத்திய அழைப்பும்

பிறப்பு 16 - 05 - 1954



இறப்பு 09 - 04 - 2004

அரியாலையூர்

அமரர் **கனகரத்தினம் தவராஜா**

**எங்கள் அன்புக் குல தெய்வமே! நீங்கள் மறைந்தாலும் உங்கள் நினைவு எம் நெஞ்சில் மறையவே மறையாது!**

எங்கள் அன்புத் தெய்வம் அரியாலையூர் கனகரத்தினம் தவராஜா அவர்களின் 31 ஆம் நாள் அஞ்சலி நிகழ்வும் அந்தியேட்டி, வீட்டுக்கிருத்திய நிகழ்வும் இன்று (09.05.2004) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறுகின்றது.

இந்நிகழ்வுகளில் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- குடும்பத்தினர்.

*163 /2, சின்னக்கிணற்றடி லேன் ,*
*அரியாலை,*
*யாழ்ப்பாணம்.* (31728)(21-16-19)

## ஓடி மறைந்ததுவோ ஏழு ஆண்டுகள்

தோற்றம் 1948 - 05 - 18



மறைவு 1997 - 04 - 28

எங்கள் குடும்பத் தலைவி

**சிவபுண்ணியம் வள்ளியம்மா** (பவளம்)

திதி: 09-05-2004


*ஆண்டுகள் ஏழு ஓடி மறைந்தாலும் அம்மாவே!*
*நீங்கள் எங்கள் நெஞ்சினில் வாழ்கின்றீர்கள்! வேண்டுதல்*
*உனக்காக நாளும் புரிகின்றோம்! விழி அழுது*
*புலம்பியிங்கே வாழ்கின்றோம்! நீண்ட காலங்கள்*
*கடந்து சென்றாலும் நீங்கள் எங்களுடன் என்றும்*
*வாழ்வீர்கள்! ஆண்டவன் அடியினில் சேர்ந்து*
*வாழும் அம்மாவே! ஆத்ம சாந்திக்காக எங்களின் பிரார்த்தனைகள்.*

*உங்களின் பிரிவால் துயருறும்:*
- குடும்பத்தினர்.

*"பவளவனம்",*
*நவிண்டில்.* (31727) (26-19-16)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 14 - 12 - 1929



மறைவு 09 - 04 - 2004

அமரர் **அம்பலவாணர் சுப்பிரமணியம்**

(முகாமையாளர், கலா ரேடிங் கொம்பனி, கொழும்பு-11)

09.04.2004இல் சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவரின் மரணச்செய்தி கேட்டு நேரில் கலந்துகொண்டவர்களுக்கும் தொலைபேசி, தந்தி மூலம் அனுதாபந்தெரிவித்தவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டவர்களுக்கும் மலர் வளையங்கள் வைத்து அஞ்சலி செய்தோருக்கும் உற்றநேரத்தில் உதவிசெய்த உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர் அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (09.05.2004) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் வேண்டிக்கொள்கின்றோம்.

குடும்பத்தினர்.

*கைதடி.* (31475)(34-21-19-16)

## புதிய நிர்வாகிகள்

யாழ்ப்பாணம்,மே9

புத்தூர் எவரெஸ்ற் விளையாட்டுக்கழகத்தின் இந்த வருடத்திற்கான நிர்வாகசபைத் தெரிவு அண்மையில் இடம்பெற்றுள்ளது.

கழகத்தின் தலைவராக கி.இராசையாவும், செயலாளராக க.பகீரதனும் பொருளாளராக கு.தசரதனும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.(10-சி)

## ஆன்மீகச் சொற்பொழிவு

வடமராட்சி, மே9

வடமராட்சி ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் கோயில் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் நடைபெற்றுவரும் வாராந்த ஆன்மீகச் சொற்பொழிவுத் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11மணிக்கு "சுடர் ஆழியும் பல்லாண்டு" என்னும் தலைப்பில் சைவப்புலவர், சைவசித்தாந்த பண்டிதர் வரணியூர் சி.கா.கமலநாதன் சொற்பொழிவாற்றுவார். (எ-173)

## கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர்களுக்கு மோ. சைக்கிள்கள்

அச்சுவேலி,மே9

யாழ்.மாவட்டத்தில் கடமை புரியும் கால்நடை அபிவிருத்திப் போதனாசிரியர்களுக்கு மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளன.

கால்நடைகளை செயற்கைமுறை சினைப்படுத்தலின் மூலம் அபிவிருத்தி அடையச் செய்யும் வேலைத்திட்டத்தை மேற்கொள்வதற்கு வசதியாக போதனாசிரியர்களுக்கு மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளன என கூறப்பட்டது.

முதற்கட்டமாக 6 போதனாசிரியர்களுக்கு கடந்தவாரம் மாவட்ட கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்கள பணிமனையில் வைத்து உதவிப் பணிப்பாளர் பொ.இராமநாதன் இந்த மோட்டார் சைக்கிள்களை வழங்கினார். (எ-11)


### விற்பனைக்கு

திருநெல்வேலி Farm School இற்கு அருகில் வீடுகட்டத்தக்க 4 பரப்புத் தோட்டக்காணி விற்பனைக்குண்டு .

தொடர்புகளுக்கு:-

**சி.பிரணவன்,**
C/O ஜெயசீலன்,
தபாற்பெட்டி ஒழுங்கை
(காளிகோயில முன்பாக).
உரும்பிராய். (077-6072560). 222-6428

(31601)(38)

மீண்டும்

**மண்டலேஸ்வரன் இசைக் குழுவினர்**

விவரங்கட்கு:

**நியூ ராஜா கிறீம் ஹவுஸ்**
நல்லூர், யாழ்ப்பாணம்.
(31633)


## 31 ஆம் நாள் அந்தியேட்டியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு 03 - 04 - 1940



உதிர்வு 11 - 04 - 2004

நிகழும் சுபானு வருடம் 11-04-2004 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி


**திருமதி நடராசா பத்தினி**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் எதிர்வரும் (11.05.2004) செவ்வாய்க் கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்துகொள்வதோடு, வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் மதியபோசனத்திலும் பங்குகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**செ.நடராசா**
*(கணவர் அலியா),*
**பிள்ளைகள், மருமக்கள்.**

*யாக்கரை வீதி,*
*தெடுத்தனை கரவெட்டி கிழக்கு,*
*கரவெட்டி.* (சி-34749)(26)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் நடராசா கந்தையாபிள்ளை**

தோற்றம்: 26-03-1934 மறைவு: 21-04-2003

திதி: 09-05-2004

*அன்பின் இருப்பிடமாய் அறிவின் பொக்கிஷமாய்*
*சிரிப்போடு சிந்திக்கவைத்து சிறப்பாக வாழ்ந்த நீங்கள்!*
*சிந்தை கலங்கவைத்து சிவன் அடிசேர்ந்தீர்களே*
*ஆண்டுகள் சென்றாலும் மாறுமோ உம்நினைவு?*

- குடும்பத்தினர்.

*சந்நிதி வீதி,*
*அச்சுவேலி.* (சி-34757) (26-21-19-16)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 23 - 05 - 1921



மறைவு 09 - 05 - 2002

**திருமதி கமலாம்பிகை ஆறுமுகம்தம்பி**

*(இளைப்பாறிய ஆங்கில ஆசிரியை)*

ஆண்டுகள் இரண்டு சென்றதம்மா
ஆனால் உங்கள் நிழலில் வாழ்ந்த
வாழ்வுபோல் இனி வருமோ!
நிதம் உங்கள் நினைவில் வாழ நாம்....
**உங்கள் ஆத்மசாந்திக்கு இறைவனைத் தொழுவோம்.**

உங்கள் நினைவுடன்:
**கங்காதரன் ராகினி குடும்பம்,**
**ராகுலன் (அம்பி -Swiss).**

**274, நாவலர் வீதி,**
**யாழ்ப்பாணம்.** (31258)(34-21-19-16)

## சாதனை வீரனே தடைகளைத் தாண்டிச்செல்



சாதனை நாயகனாய் தரணியிலே தலை நிமிர்ந்து
சரித்திரம் படைத்திட்ட முரளி அண்ணாவே!
களம் பல கண்ட காவிய நாயகனாய்
களத்திலே நிமிர்ந்து வெற்றி நடை போடுக.

வோல்சின் சாதனை முறியடிக்கப்பட்டது
முரளியின் சாதனை பதியப்பட்டது
வோர்னின் சாதனை தாமதிக்கப்பட்டது
வேந்நார் சாதனை பகல் கனவானது.

ஒவ்வொரு வீரரும் ஒவ்வொன்றாக வீழ்த்த – நீயோ
ஐந்து ஐந்தாக வீழ்த்துகிறாய்
நாற்பத்து நான்கு தடவை ஐந்து இலக்குப் பெற்றாய்
பதினான்கு தடவை பத்து இலக்குப் பெற்றாய்.



தலைமையை எண்ணாத தன்னிகர் தலைவனே!
தலை தாழ்த்தி வேண்டுகின்றேன் முரளியுனை
தாண்டிச் செல் தடைகளை
வீழ்த்திச் செல் இலக்குகளை.

வாழிய முரளி பல்லாண்டு கிரிக்கெட்டில்
வீசுக முரளி துல்லிய 'துஸ்ரா' பந்துகளை
வீழ்த்துக முரளி பல நூறு இலக்குகளை
வாழ்த்தட்டும் முரளி உனை தமிழ்பேசும் மக்களெல்லாம்.

(C/34771)(38-12-17)

நாயகனை வாழ்த்தும்:
சி.சிறீரகுபதி,
ஸ்பேஸ் வி.க., கரவெட்டி.


## கணனி இயக்குநர் தேவை

எமது ஸ்தாபனத்திற்கு
கணனி ஆண் இயக்குநர் ஒருவர் தேவை

தகைமைகள்:
★ G.C.E (A.L) மூன்று பாடங்களில் சித்தி.
★ G.C.E (O.L) ஆங்கில, கணித பாடங்களில் திறமைச்சித்தி பெற்றிருத்தல்.
★ Micro Soft, Word அறிவு.

விரும்புவோர் 10.05.2004 திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு கீழ்க்காணும் முகவரிக்கு ஆவணங்களுடன் நேரில் வரவும்.

மனிதவள முகாமையாளர்,
லக்ஷ்மி குறூப்,
46/1, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
(பிறவுண் வீதியில் இருக்கும் மின்சாரசபைகாரியாலயத்திற்கும் கலட்டிச் சந்திக்குமிடையில் முகவரி அமைந்துள்ளது.)
(C/34776)(38-12-17)


## 3ஆம் ஆண்டு நினைவுகளில்...

மலர்வு
07 - 04 - 1964



உதிர்வு
13 - 05 - 2001

### திருமதி அருளம்மா நடராசா

திதி: 09-05-2004 அபரபக்ச சஷ்டி

பாசமுடன் எமை வளர்த்தீர் உம் நலன் பாராது
பாங்காக எமைக் காத்தீர் எம் வாழ்க்கைக்காக எந்நாளும்
ஆண்டுகள் மூன்று ஆனாலும் ஆறவில்லை எம் துயரம்
ஆத்ம சாந்திக்காய் வேண்டுகின்றோம் ஆண்டவனை எந்நாளும்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

"அம்பாள் அகம்"
சித்தம்பாதி, கரணவாய்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்:
கணவர், பிள்ளைகள்

(31802)(40-12-17)

## இரண்டாம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில்
07 – 01 – 1982



விண்ணில்
01 – 05 – 2002

### செல்வன் கந்தசாமி தினேஷ் (தீபன்)

அன்னிய நாடு செல்ல நினைத்தாயோ?
அரைவழியில் யமன் வந்தானோ?
தீபமாக எமது குடும்பத்தில் ஒளி கொடுத்தாயோ?
தீபனே தீபம் அணைந்ததோ?
எண்ணியும் பார்க்கவில்லை இதயத்தில்
இடிபோல ஏங்க வைத்தாயோ?
ஆண்டுகள் இரண்டாகி விட்டதே - ஆனாலும்
நெஞ்சம் அணையவில்லையே!

அரசடி லேன்,
திருநெல்வேலி கிழக்கு.
(31800)(40-12-17)
- குடும்பத்தினர்.

## அரசியல் கருத்தரங்கு

கொழும்புத்துறை,மே9

சர்வதேச மாணவர் பேரவை யால்' நடத்தப்படும் சமகால அரசியல் கருத்தரங்கு இன்று பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். நாவலர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் 'இலங்கையின் இன்றைய அரசியல் நிலைமைகள்' என்னும் தலைப்பில் கு.திருநாவுக்கரசு (திருமாஸ்ரர்) கருத்துரை வழங்குவார். (எ-30)

## பாராட்டு விழா

மானிப்பாய், பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியும் அதன் அங்கத்துவ சங்கங்களும் இணைந்து தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவநேசனுக்கு பாராட்டு விழாவை ஏற்பாடுசெய்துள்ளனர்.

இந்தவிழா நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் தலைவர் க.மெய்யழகன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஐ.ரி)


## தேர்தல்களம் - 2004 No.3

தமிழகத்தில் தி.மு.க., காங்கிரஸ் கூட்டணி வெற்றி வாகைசூடும் புது வருஷ பலாபலன்கள் விற்பனையாகின்றன. (ஜோர்ஜ்புஷ், ரணில், சந்திரிகா, வாஜ்பாய், ஜெயலலிதா, கருணாநிதி, சோனியாகாந்தியின் ஜெனனகால ஜாதகங்களும் அடங்கியுள்ளன.) 15/=.

PROF.த.சத்தியதாஸன்
ஆனைக்கோட்டை.
(31801) 021-222 2753

## விடுமுறை வகுப்புகள்

Direct Start
Dip. in MS Office
Internet and e.mail
Children Programming
Dip. in Desktop Publishing
Dip. in Hardware Technology
காலம் 2 வாரம்
மேலதிக தொடர்புகளுக்கு
STP Your Partner in IT solution
73, Palaly Road, Kantharmadam,
T.P:021-222-2674

## லக்சுமி இணுவில்

சூரியா (2 வேடங்கள்), ஜோதிகா நடித்த
மிகப் பிரமாண்டமான தயாரிப்பில



பேரழகன் (ரீலீஸ்)
தினசரி :10.30, 2.30, 6.30, இரவு 10.00
ஆசனப் பதிவுகளுக்கு: இணுவிலில் - லக்சுமி சினிமா
யாழில் - செல்வா மினி.
(31645)(22)

## ராஜா யாழ்ப்பாணம்

நான்காவது வெற்றி வாரமாக இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
விஜய், த்ரிஷா, பிரகாஷ்ராஜ் நடித்த



கில்லி (ரிலீஸ்)
10.30.,2.30, 6.30, 9.30 (பு.நே.)
ரிக்கெற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.
(C/34517)(22)

## சங்கானை

கமல், அபிராமி, நெப்போலியன் நடித்த



விருமாண்டி
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 இரத்து (பு.நே)
HELL BOUND
HELL RAISER PART 2 [பயங்கரப் படம்]
(C/34420)(22)

## நாகம்ஸ் சுன்னாகம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதினத்தில் டொல்பி ஒலி அமைப்புடன்
விக்ரம், ஜோதிகா, கபாலி, வடிவேல் நடித்த



அருள்
காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00, 10.00 (பு.நே.)

மே 7 முதல் அருள் திரைப்படம் திரையிடப்படும் இறுதித் திகதி வரை நுழைவுச்சீட்டுக்களை பாதுகாத்துக் கொள்ளுங்கள்! குலுக்கல் மூலம் தெரிவுசெய்யப்படும் 3 அதிர்ஷ்டசாலிகளுக்கு பெறுமதிமிக்க பரிசுகள்
1) துவிச்சக்கரவண்டி
2) C.D பிளேயர்
3) மேசை மின்விசிறி
(C34180)(22)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி புனிதவதி துரைச்சாமி

கலிகைச் சந்தி, துன்னாலை மேற்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட புனிதவதி துரைச்சாமி அவர்கள் 06.05.2004 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் ஓய்வுபெற்ற தபால் அதிபர் துரைச்சாமியின் அன்பு மனைவியும் கிருஷ்ணகுமாரி, சாந்தகுமாரி, நந்தினி, பாஸ்கரன், சசிதரன் , பிரபாகரன் ஆகியோரின் தாயாரும் உதயகுமார், இந்திரகுமார், நவஜீவகுமார், கிருபாகினி ஆகியோரின் மாமியாரும் சபிதா, குமணன், கார்த்திகா, தர்சிகா, ஜானிகா, தர்சினி, பிரியங்கா, சுரேக்கா, கௌதமன், நவீன், தாட்ஷாயினி, திலக்ஷன், ஷாயித்தியா ஆகியோரின் அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.05.2004) ஞாயிற்றுக்கிழமை மதியம் 12.00 மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கலிகைச் சந்தி,*
*துன்னாலை மேற்கு,*
*கரவெட்டி.*
T.P.-0776180661

(C-34779) (36-12-17)

தகவல்:
சி.துரைச்சாமி
(கணவர்).

## சோமநாதன் தினகரன்



வண்ணார்பண்ணை, சிவன்கோவிலடியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சோமநாதன் தினகரன் அவர்கள் கடந்த 06.05.2004 வியாழன் இரவு காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சோமநாதன் - இராசமணி தம்பதிகளின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - நாகரத்தினம் தம்பதிகளின் மருமகனும் இராஜேஸ்வரியின் பாசமிகு கணவரும் குமுதினி (பிரான்ஸ்), றஜனி (ஜேர்மனி), துஷிகரன் (பிரான்ஸ்), மயூரன் (ஜேர்மனி) ஆகியோரின் அருமைத் தந்தையும் முருகதாஸ் (பிரான்ஸ்), றாஜ்குமார் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும் டினேஜ், நிவேதா ஆகியோரின அன்புப் பேரனும் திலகவதி ரவீந்திரன் (S.K.), ரூபாவதி (யா.இ.ஆ. பாடசாலை), கருணாவதி, கலாவதி (யா.இ.ம.கல்லூரி), நந்தாவதி (ஜேர்மனி), சுவேந்திரன் (ஸ்ரீ சைக்கிள் வேக்ஸ்), தயாவதி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் பூமலரின் உடன்பிறவாச் சகோதரனும் காலஞ்சென்ற அமரசிங்கம் (P.M.), நகுலேஸ்வரி கிருஷ்ணபாலா (முன்னாள் ஆசிரியர்), குலநாயகம் (தபால் ஊழியர்), பூலோகசிங்கம், பஞ்சலிங்கம் (ஜேர்மனி), இராஜஸ்ரீ, சத்தியநாதன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற மங்கயர்க்கரசி, பரமேஸ்வரி, சண்முகநாதன், சர்வேஸ்வரி, சற்குணநாதன் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.05.2004) திங்கட்கிழமை காலை 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*94, சிவன்கோயில் வடக்கு வீதி,*
*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்.*

(31797)(36-12-17)

தகவல்:
தி.இராஜேஸ்வரி (மனைவி).

## கந்தையா தர்மலிங்கம்

(ஓய்வுபெற்ற உடுப்பிட்டி ப.நோ.கூ.ச.கிளை முகாமையாளர்)

உடுப்பிட்டி தெற்கைப் பிறப்பிடமாகவும் உடுப்பிட்டி புவனேஸ்வரி அம்மன் கோவிலடியை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா தர்மலிங்கம் அவர்கள் நேற்று (08.05.2004) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா சின்னப்பிள்ளையின் அன்பு மகனும் காலஞ்சென்ற சின்னாச்சிப்பிள்ளை, பொன்னையா, பாக்கியம் மற்றும் நல்லையா, நல்லம்மா, தங்கம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் றஞ்சித் (சுவிஸ்), உஷாந்தினி, கிருஷாந்தினி, கஜேந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் கருணைநாதன், வீரசிங்கம் ஆகியோரின் அன்பு மாமனாரும் நிவேதிகாவின் பாசமிகு பேரனும் காலஞ்சென்ற செல்லத்தம்பி, சிவபாக்கியம், சுப்பிரமணியம் கந்தசாமி மற்றும் சின்னத்துரை ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.05.2004) திங்கள் அன்று காலை 10 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் இல்லத்திலிருந்து தகனக் கிரியைக்காக வல்லை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கருணைநாதன், வீரசிங்கம்
(மருமகன்மார்).

*உடுப்பிட்டி.*

(C/34779)(38-12-17)

## துரைச்சாமி தேவநாதன்

(ஓய்வுபெற்ற மலேரியா தடுப்பு அலுவலர்
வாழைச்சேனை, நெடுங்கேணி)



மட்டக்களப்பு, கிரானைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம், அரசடி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட தேவநாதன் அவர்கள் 07.05.2004 (வெள்ளிக்கிழமை) இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் அமரர்களான துரைச்சாமி - அமராவதி தம்பதிகளின் ஏக புதல்வனும் அமரர்களான ஆறுமுகம் - நாகம்மா தம்பதிகளின் மருமகனும் ஓய்வுபெற்ற நெசவு ஆசிரியை (வாழைச்சேனை, யாழ்ப்பாணம்) செல்லம்மாவின் அன்புக் கணவரும் யோகாம்பிகை, வியாளாம்பிகை, அம்புஜம், அபூர்வம் ஆகியோரின் சகோதரனும் கிரானைச் சேர்ந்த மகேசன், பாலசுப்பிரமணியம், அமரர் சுந்தரலிங்கம் மற்றும் கோவிந்தசாமி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஓய்வுபெற்ற ஆசிரியர் கனகரெத்தினம், அமரர் ஆயுர்வேத வைத்தியர் இராசரெத்தினம் மற்றும் பரிமளம், நாகரெத்தினம் ஆகியோரின் மைத்துனரும் கிரானைச் சேர்ந்தவர்களான சுமதி, சுதேசன், அமரர்களான சாந்தினி, நிறஞ்சனி மற்றும் சியாமளா, ராதாகிருஷ்ணன், கிரிஜா, கங்காதரன், பிரபாகரன், சுகந்தினி, தர்சினி, ராதிகா, சுபராஜ், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இராசேந்திரன், இராசேஸ்வரி, வானதி, ஜெயதேவன், சிவகுமாரன், அரவிந்தன் ஆகியோரின் மாமனாரும் உருத்திரானந்தன், அமரர் கருணானந்தன் மற்றும் குகானந்தன், சந்திரவதனி, சிறிகாந்தன், சூரியவதனி, ரவிகாந்தன், சிவராஜி, ஜெயராஜி, விக்னேஸ்வரன் சுந்தரலிங்கம் (கிரான்) ஆகியோரின் சிறியதகப்பனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.05.2004) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பி.ப. 4 மணிக்கு தகனத்திற்காக பூதவுடல் கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

*65/3, அரசடி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(31798)(40-12-17)

தகவல்:
மனைவி.

# மலையகத் தாக்குதலை கண்டித்து கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டம்

கொழும்பு,மே9

நுவரெலியா மாவட்டத்தில் கந்தப்பொலவில் தமிழ்மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களைக் கண்டித்து நேற்றுக் கொழும்பு ரயில் நிலையம் முன்பாக ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

மேல்மாகாண மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் நேற்றுப் பிற்பகல் 3.30 மணிமுதல் 4.30 மணிவரை இந்த ஆர்ப்பாட்டம் நடந்தது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் முன்னணியின் தலைவர் மனோ கணேசன், தமிழ்க் கூட்டமைப்பு தேசியப் பட்டியல் எம்.பியான ம.க.ஈழவேந்தன், ரெலோ முதல்வர் என்.சிறீகாந்தா உட்பட நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டோர் சுலோக அட்டைகளைகளைத் தாங்கியபடி, அரசுக்கு எதிராகக் கோஷங்களை எழுப்பினர்.

சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க முயற்சிகள் நடைபெற்றுவரும் நேரத்தில் தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் தாக்குதலை அரசு உடன் நிறுத்தவேண்டும் என்றும் -

கந்தப்பொலவில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களுக்கு ஜனாதிபதியே பதில் அளிக்கவேண்டும் என்றும் -

ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷம் எழுப்பினர். (ஐ-3)

# உரிய சந்தைவாய்ப்பு இன்மையால் கோவா, பீற்றூட் செய்கையாளர் பாதிப்பு

தெல்லிப்பழை,மே9

உரிய சந்தை வாய்ப்புகள் கிடைக்காமையால் இம்முறை கோவா, பீற்றூட் பயிர்செய்கையிலீடுபட்ட விவசாயிகள் பெரும் பாதிப்புக்குள்ளாகியிருப்பதாக விவசாயிகள் பலர் கவலை தெரிவித்துள்ளனர்.

மிகுந்த எதிர்பார்ப்புடன் இம்முறை கோவா, பீற்றூட் பயிர்ச்செய்கையில் ஈடுபட்ட தாம், அதிகளவிலான விளைச்சலாலும், சந்தைப்படுத்தும் வாய்ப்புகள் அற்றுப்போனதாலும் பெரும் நஷ்டத்தை எதிர்நோக்கியிருப்பதாகவும் -

தற்போது ஒரு கிலோ கோவா 5 ரூபா தொடக்கம் 7 ரூபா வரையும், பீற்றூட் 7 ரூபா தொடக்கம் 9 ரூபா வரையுமே சந்தையில் விற்பனை செய்யப்படுவதாகவும் கூறினர்.

இதற்கிடையில் - தென்பகுதியிலும இவற்றின் விளைச்சல் அதிகரித்துள்ளதால் இங்கிருந்து இவற்றைக் கொள்வனவு செய்து கொண்டுசெல்ல எவரும முன்வரவில்லை.

இந்நிலையில், மேற்படி பயிர்களை அறுவடைசெய்யப் பணத்தைச் செலவழிப்பதில் பயன்இல்லை எனக் கருதிய வலிகாமம் பகுதி விவசாயிகள் பலர் பயிர்களை அறுவடை செய்யாது தோட்டங்களிலேயே கைவிட்டுள்ளனர் - என்று விவசாயி ஒருவர் கவலையுடன் தெரிவித்தார்.

இந்நிலையில், கடந்த சில தினங்களாகப் பெய்துவரும் மழை வெங்காயச் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளை பெரும் நஷ்டத்தில் ஆழ்த்தியுள்ளதாகக் கூறப்படுகின்றது. (எ-150)

## ஜனாதிபதி பணிப்பு!

நுவரெலியா,மே9

தோட்டத் தொழிலாளர்களுக்கு ஏற்படும் சிரமங்களைக் கருத்திற்கொண்டு அவர்களுக்குக் காணி உறுதிகளை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு, ஜனாதிபதி நுவரெலியா மாவட்ட அரச அதிபருக்கும் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் பணிப்புரை விடுத்துள்ளாரெனத் தெரியவருகிறது. (10-ரி)

## கட்டாக்காலி நாய்கள் நஞ்சூட்டி அழிப்பு

யாழ்ப்பாணம்,மே9

வலி. கிழக்கு பிரதேச சபையின் உரும்பிராய் உப அலுவலக எல்லைக்குட்பட்ட ஊரெழுப்பகுதியில் எதிர்வரும் 12ஆம் திகதி காலை 9 மணிக்கு கட்டாக்காலி நாய்கள் நஞ்சூட்டி அழிக்கப்படவுள்ளன.

எனவே, மேற்படி பகுதி மக்கள் தமது வளர்ப்பு நாய்களை அன்றைய தினம்கட்டி வைக்கவேண்டும் என வலி. கிழக்கு பிரதேச சபைப் பொறுப்பதிகாரி கேட்டுள்ளார். (10-ரி)

## கந்தரோடையில் வீடு புகுந்து கத்திவெட்டு!

யாழ்ப்பாணம்,மே9

இனந்தெரியாத குழு ஒன்று வீடொன்றினுள் புகுந்து கத்தியால் வெட்டியதில் தந்தையும், மகளும் படுகாயமடைந்தனர். இவர்கள் யாழ் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருக்கின்றனர்.

இச்சம்பவம் நேற்று இரவு 9.30 மணியளவில் கந்தரோடை ஆலடிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது. அதே இடத்தில் வசித்துவரும் பூலோகநாதன (வயது-55), அவரது மகள் பூ.காயத்திரி (வயது-20) என்ற இருவருமே படுகாயம் அடைந்தவர்களாவர்.

காணித் தகராறு காரணமாகவே இவர்கள் தாக்கப்பட்டனர் என்று கூறப்படுகின்றது. மோட்டார் சைக்கிளில் வந்த ஒரு குழுவினரே இவர்களைத் தாக்கியுள்ளனர். அவர்களில் ஒருவரை அப்பகுதி மக்கள் சேர்ந்து பிடித்துள்ளனர் என்றும் கூறப்பட்டது. (ஐ-6)

# சத்திர சிகிச்சைப்பிரிவு குளிரூட்டி மீண்டும் பழுது!

யாழ். போதனா வைத்தியசாலை சத்திர சிகிச்சைக் கூடத்திற்குப் பொருதப்பட்ட பாரிய குளிரூட்டி மீண்டும் பழுதடைந்துவிட்டது.

இதனால் சத்திர சிகிச்சைகளை மிகவும் சிரமத்தின் மத்தியில் மேற்கொள்ளவேண்டிய நிலை உருவாகியிருக்கின்றது.

சத்திர சிகிச்சைக் கூடத்தின் உட்பகுதியை தொற்று நீக்குகின்ற நவீன வசதி கொண்ட இந்தக் குளிரூட்டி பொருத்தப்பட்ட சில மாதங்களின் பின பழுதடைந்தது. பின்னர் அதனைப் பொருத்தியவர்களால் அது திருத்தியமைக்கப்பட்டது.

திருத்தியமைக்கப்பட்ட ஒரு சில மாதங்களின் பின் நேற்றுமுன்தினமிரவு இது மீண்டும் பழுதடைந்துவிட்டது.

தற்போது அதே பொறியியலாளர் குழு திருத்த வேலைகளை ஆரம்பிதுள்ளது. (ஐ-15)

# மட்டக்களப்புக்கு லக்ஸபானா மின் விநியோகம் ஆரம்பம்

மட்டக்களப்பு மாவட்டத்திற்கு நேற்று சனிக்கிழமை முதல் லக்ஸபானாவில இருந்து 132 கே.வி. வலுவுடைய மின்சாரம் விநியோகிக்கப்பட்டுவருகிறது.

பதினெட்டு வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட இந்தத் திட்டம் போர்ச் சூழல் காரணமாக இடைநிறுத்தப்பட்டிருந்தது தற்போது மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு இங்கினியாகல மின் நிலையத்தில் இருந்து 33 கே.வி. சக்தியுடைய மின்சாரமே விநியோகிக்கப்பட்டுவந்தது.

இதனால், அடிக்கடி மின் தடைப்பட்டதுடன் பாவனையாளர்கள் குறைந்தளவிலான மின்சாரத்தினையே பெற்றுவந்தனர் மின்தொழில் இயந்திரங்களும் காலை 9 மணிக்கு முன்பும் மாலை 6 மணிக்குப் பின்பும் இயங்க முடியாத நிலையும் காணப்பட்டது. (ஐ-6)

# விமான ஊழியர்களின் போராட்டம் முடிவு

கொழும்பு,மே.9

ஸ்ரீலங்கா ஏயர்லைன்ஸ் ஊழியர்கள் மேற்கொண்டிருந்த வேலை நிறுத்தம் கைவிடப்பட்டதையடுத்து, சர்வதேச விமான சேவைகள் நேற்று வழமை நிலைக்குத் திரும்பின.

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் பணியாற்றும் ஊழியர்கள் நேற்று முன்தினம் தமது வேலைநிறுத்தப் போராட்டத்தை ஆரம்பித்திருந்தனர். இதனால், சர்வதேச விமான சேவைகள பாதிக்கப்பட்டன.

ஏயர்லைன்ஸ் முகாமைத்துவத்துக்கும் ஊழியர்களுக்கும் இடையே நேற்று நடந்த பேச்சுக்களில் இணக்கம் ஏற்பட்டதையடுத்து போராட்டம் கைவிடப்பட்டது. (ஐ-3-6)

## எய்ட்ஸ் விழிப்புணர்வு கருத்தரங்கு

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் நடத்தும் எய்ட்ஸ் விழிப்புணர்வுக் கருதரங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு புனர்வாழ்வு நிறுவன மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

'அடிப்படை உரிமைகளும் சர்வதேச மனித உரிமைகளும்' என்ற தலைப்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் விசாரணை அதிகாரி எஸ். சுரேந்திரனும் 'சிறுவர்கள் உரிமைகள்' என்ற தலைப்பில் விசாரணை அதிகாரி எஸ். பெரோசும் கருத்துரை வழங்குவர்.(ஐ-5)

# டெங்குக் காய்ச்சல் கொழும்பில் பரவுகிறது

கொழும்பு,மே9

கொழும்பிலும் சுற்றுப் பிரதேசங்களிலும் டெங்கு நோய் தீவிரமாகப் பரவி வருகின்றது

கொழும்பில் கடந்த மாதம் 79 பேரும், கண்டி மாவட்டத்தில் 67 பேரும், கம்பஹா மாவட்டத்தில் 50 பேரும டெங்குக் காய்ச்சலால் பீடிக்கபட்டனர் என்று சுகாதாரத் திணைக்களம் அறிவித்துள்ளது.

திருகோணமலை, குருநாகல் மாவட்டங்களிலும் டெங்கு நோய்பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

தற்போது நிலவும் காலநிலை காரணமாக டெங்கு நோய் பரவும் சாத்தியக் கூறுகள் அதிகரித்துள்ளன என்று சுகாதாரத் திணைக்களத்தின் டெங்கு நோய்த் தடுப்புப் பிரிவைச் சேர்ந்த நிபுணத்துவ மருத்துவர் நிமால் அபயசிங்க தெரிவித்துள்ளார்.

பிராந்திய மருத்துவ அதிகாரிகளும், மாகாண சுகாதார அதிகாரிகளும் தற்போது டெங்கு ஒழிப்புத் திட்டங்களை அமுல் செய்து வருகின்றார்கள். (ஐ-ரி)

## கிரனேட்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விக்கப்பட்டது.

அந்தப் பகுதியில் பாதுகாப்பு நிலைகளைப் பலப்படுத்துவதற்காக நேற்று முற்பகல் 9 மணிவரை கோவிந்தன் வீதியை படையினர் மூடியிருந்தனர். (ஐ-3-6)

**CHEMISTRY**
GROUP CLASSES
BY:
**VAKEESAN**
★ SUTHUMALAI ★
2006 - பொது இரசாயனம்
Mon., Fri. 6 - 7 a.m.
ஆரம்பம் : 10/05/2004
நடைபெறுகிறது -
அடிப்படை இரசாயனம்
Wed. / Sat. / Sun. } 7-9 p.m.
Note: யாவும் புதிய நேரப்படி
(31754) (40)

**தேவை**
ஸ்ருடியோ - வீடியோ நிலையங்களில் கடமை புரிவதற்குப் பணியாளர்கள் தேவை.
தகுதியானவர்கள் 11.05.2004 செவ்வாய்க்கிழமை நேரில் சமுகம்தரவும்.
வீடியோ கலாமினி,
அச்சுவேலி.
T.P.: 0777111018,
(31763) 060 221 2431

**SKY Computer Systems**
109, Kandy Road, Chundikuli, Jaffna.
Tel/ Fax.No. 021- 4590325
(கச்சேரிக்கு அருகில்)
**Diploma Courses**
MS Office, Computerised Accounting, Hardware, DTP, Visual Basic.
**Certificate Courses**
Photoshop, PageMaker, Corel DRAW, Word, Excel, Access, Power Point, Quick books, Internet & E-Mail.
பாடசாலை மாணவர்களுக்கான விஷேட கணனி கற்கைநெறி.
13,000/= இலிருந்து கணனிகளைப் பெற்றுக்கொள்ளலாம். மொனிட்டர் 15"-6000/=
E-mail: skycom@wow.lk
Today you learn
Tomorrow you Lead.
(C/34721)

சொற்பபிரதிகளே
A/L 2004 மாணவர்களுக்கான பல்கலைக்கழக அனுமதியை தீர்மானிக்கும்
பொதுச்சாதாரண பரீட்சை வழிகாட்டி நூல்
P.கமல்தாசன்
P.உமாசங்கர்
யாழ். பூபாலசிங்கம். ஸ்ரீலங்கா. துர்க்கா. சிதம்பரபிள்ளை.
வன்னி - அறிவமுது.
வவுனியா - கவிதா. விலை140 /
(31771)(40)

**LOGIC**
A/L 2006
Sat. / Sun. } 8 a.m. பிரிவு I
இன்று Sun. 9 a.m. பிரிவு II எடுப்புக்கள்.
P.கமல்
BRIGHTMAN (31774)(40)

**பல் வைத்திய சேவை**
சகல விதமான பல் வைத்திய தேவைகளுக்கும்
காலை 9 மணி - 12 மணிவரை
மாலை 4 மணி - 6 மணிவரை
பல் வைத்தியப் பிரிவு, யாழ்.வைத்திய நிலையம்.
பிலிப் நேர்சிங் ஹோம் கட்டடம்.
228, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
(31793)(40)

## மரண அறிவித்தல்

### விஸ்வலிங்கம் திலகராயர் (J.P.)

(Rtd Executive, Brown & Co. Ltd, Colombo)



உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் பாக்கிய இல்லம் 51 சந்தனமாதா வீதி, சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட விஸ்வலிங்கம் திலகராயர் 08.05.2004 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற விஸ்வலிங்கம் - செல்லம்மா தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும் சுந்தரம் - தங்கம்மா தம்பதிகளின் அருமை மருமகனும காலஞ்சென்ற சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் தில்லைநாதன் (Australia), சிவநாதன் (Australia), கைலைநாதன் (CHF International), ஜெகஜோதி (Australia), கேதீசநாதன் (France), ஞானஜோதி, மங்கள ஜோதி (Australia) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜீனி, அனுஷா (Australia), ரஞ்ஜினி, செல்வநாயகம் (Australia), Lion முத்துக்குமாரசாமி (ஓய்வுபெற்ற உதவி முகாமையாளர், இலங்கை வங்கி), துரைரட்ணம் (Australia), அனுசியா (France) ஆகியோரின் அன்பு மாமனாரும் ரமேஸகுமார், சாரதா, டினேஸ்குமார், ரமணன், லிஷான், நிரோஷன் (தேசிய சேமிப்பு வங்கி, திருநெல்வேலி), தனுஷன் (சென்ஜோன்ஸ் கல்லூரி, தரம்-9), பிரவீண (France), கிஷானி, தர்ஷினி (Australia) ஆகியோரின் பாசமிகு பேரனும் பரமலிங்கம் (Canada) அவர்களின் அன்பு மைத்துனருமாவர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.05.2004) திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக துண்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*"பாக்கிய இல்லம்"*
*51, சந்தனமாதா வீதி,*
*சுண்டுக்குழி, யாழ்ப்பாணம்.*
*தொ.பே. 222 5466*

தகவல்:
தி.கைலைநாதன் (மகன்)
(CHF INTERNATIONAL)
(31803)(40-12-17)

**இணைப்புக்களுடனான மேசைத் தொலைபேசி விசேட கழிவில் விற்பனைக்கு!**
24 மணி நேரத்தில் பக்கேஜ் இணைப்புக்களுடனான மேசைத் தொலைபேசி எப்பிரதேசத்திற்கும் பொருத்தித் தரப்படும்.

உள்வரும் அழைப்பு முற்றிலும் இலவசம்
மொபிடெல் ஸ்ரீலங்கா ரெலிகொம்முடன் முற்றுமுழுதான துணை நிறுவனம்
I.D.D இணைப்புக்கள் ஸ்ரீலங்கா ரெலிகொம் கட்டணமே - 25/=
Hand Phone Unlock செய்து தரப்படும்.
Hand Phone பழுது பார்க்கப்படும்.
எமது சேவை கேபிள் இணைப்புக்கள் இல்லாமல் எப்பிரதேசத்திற்கும் இயங்கக் கூடிய சேவை என அறியத் தருகின்றோம். அத்துடன் அன்ரனா மூலம் இயங்குகின்றது. மொபிடெல் ஸ்ரீலங்கா ரெலிகொம்முடன் முற்றுமுழுதான துணை நிறுவனம்.
*மேலதிக விவரங்களுக்கு:*
**பவர் செல்லுலர் ட்ரேடிங் கம்பனி**
இல. 185, முதலாம் மாடி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
வின்சர் தியேட்டர் முன்பாக நியூ லலிதா கட்டடம் (கடை முதலாம் மாடியில் உள்ளது.)
T.P.: 021 222 7070 - 0712399220 0777281521

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நறுவனதத்னரால யாழபபாணம் கஸதூரயார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09.05.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

சூரியகாந்தி
உதயன் ஞாயிறு சிறப்பம்சம்
09-05-2004

# என் 'பாதையை மாற்றிய அம்மாவின் சினம்...'



"**என்று** என் அன்னை தொலைக்காட்சிப் பெட்டியை சினத்தோடு சடாரென அணைத்துவிட்டு.... அன்றுதான் என் வாழ்வுப் பயணம் ஆரம்பமானது"

பிரபல சிறுவர் நரம்பியல் சத்திரசிகிச்சை நிபுணர் டாக்டர் பென்ஜமின் காசன் ஐக்கிய அமெரிக்காவில். மேரிலாண்டிலுள்ள பால்டிமோரில் அமைந்துள்ள யோண் கொப்கின்ஸ் சிறுவர் நிலையத்தில் நரம்பியல் சத்திரசிகிச்சைப் பகுதியின் தலைவராக இன்று கடமையாற்றுகின்றார். இவர் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த கறுப்பு இனத்தவர். சிறுவனாக இருந்த பொழுது கல்வியில் எவ்வித நாட்டமும் இல்லாது வகுப்பில் மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்தார். தனது அன்னை எடுத்த ஒரு தீர்மானம் தனது வாழ்க்கைப் பயணத்தின் திருப்புமுனையாக அமைந்தது என்றும் அன்னையின் அன்பும் ஊக்கமுமே தன்னை இன்றைய நிலைக்கு உயர்த்தியது என்றும் டாக்டர் காசன் கூறுகின்றார். 2001 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் Readers Digest சஞ்சிகைக்கு அவர் எழுதிய கட்டுரை வருமாறு.

**- ஆனந்தி -**

1961 ஆம் ஆண்டு. ஆரம்பப் பாடசாலை ஒன்றில் தரம் ஐந்தில் படித்துக்கொண்டிருந்தேன். வகுப்பில். வாய்பேசாத ஊமை போல் நான் இருந்தேன். மற்றவர்கள் என்னை பார்த்து கேலி பண்ணிச் சிரிப்பார்கள். பரீட்சைகளிலும் மிகக் குறைந்த புள்ளிகளையே நான் பெற்றேன். அதைப் பற்றி எனக்கு எந்தவித மனவருத்தமும் இருக்கவில்லை. பாடசாலை என்றாலே எனக்கு வெறுப்பாக இருந்தது. என்னுடைய தந்தை இறந்து பல வருடங்களாயிற்று. நானும் என்னுடைய அண்ணன் கேட்டிசும். எங்கள் அம்மாவுடன். பல குடும்பங்கள் வாழும் ஒரு வீட்டின் ஒரு பகுதியில் வசித்து வந்தோம். காற்றோட்டமில்லாத. இருண்ட வீடாக எம் வீடு காணப்பட்டது. இடவசதி குறைந்த எம் வீட்டில் அதிக தளபாடங்கள் இருக்கவில்லை. ஆனால். எந்நேரமும் சுத்தமாக இருக்கும் மேசையில் எந்நேரமும் சாப்பாடும் இருக்கும். எங்கள் அன்னை மூன்று வெவ்வேறு வீடுகளில் பணிப்பெண்ணாக வேலை பார்த்து வந்தாள். எங்களை வளர்ப்பதற்கு அவள்பட்ட கஷ்டங்களையும் சிரமங்களையும் அப்பொழுது நாங்கள் உணரவில்லை.

அந்நாள்களில் எங்கள் வாழ்க்கை பின்வருமாறு கழிந்தது.

பாடசாலை முடிந்தபின் கூடைப்பந்து. கால்பந்து விளையாடுவோம். அயல் வீடுகளில் அவர்களின் அனுமதியின்றி அப்பிள் பழங்கள் பிடுங்குவோம். விளையாட்டுத் துப்பாக்கி கொண்டு. எலிகளைக் குறி பார்த்தும் சுடுவோம். இருண்ட பின் வீடு திரும்பி தொலைக்காட்சிக்கு முன் அமர்வோம். எனக்கும் என் அண்ணனுக்கும் எந்தநேரம் எந்தஅலைவரிசையில் என்ன நிகழ்ச்சி ஒளிபரப்பாகும் என்பது தண்ணீர் பட்டபாடு. எங்கள் வாழ்க்கையின் அடிநாதமாக தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் நாங்கள் கேட்ட துப்பாக்கி வேட்டுச் சத்தமும் குதிரைகளின் குளம்பொலிச் சத்தமும் அமைந்திருந்தன. அந்த அளவிற்கு தொலைக்காட்சிக்கு முன் பலமணி நேரங்களைச் செலவிட்டோம். எம் அன்னை சோனியா காசன் மூன்றாம் தரம் வரை மட்டுமே படித்திருந்தாள். ஆனால். எங்களை விட மதிநுட்பமுடையவளாகவும். சுறுசுறுப்பானவளாகவும் காணப்பட்டாள். தான் பணிபுரிந்த செல்வந்த வீடுகளிலுள்ள பிள்ளைகள்குறிப்பிட்ட ஒரு பொருளோடு மிகவும் அன்னியோன்யமாக இருப்பதை. எம் அன்னை அவதானித்தாள். அப்பொருள் வேறு ஒன்றுமில்லை - புத்தகக். கல்வி மூலமே தன் பிள்ளைகளை வறுமையின் பிடியிலிருந்தும். மற்றவர்களின் பரிகாசத்திலிருந்தும் விடுவிக்க முடியும் என்று எம் அன்னை உணர்ந்திருந்தாள்.

ஒரு நாள் வேலை முடிந்து வீடு திரும்பிய எம் அன்னை தொலைக்காட்சிப் பெட்டிக்கு முன்னாலிருந்த எங்களைக் கடந்து சென்று. சினத்துடன். சடாரென அதனை அணைத்தாள். திகைத்துப்போய் நின்ற எங்களைப் பார்த்து "பையன்களே உங்கள் வாழ்க்கையில் ஒரு மாற்றம் அவசியம் தேவைப்படுகின்றது. வாழ்க்கையைப் பயனுள்ளதாகக் கழிக்க நீங்கள் முயற்சிக்கவேண்டும். இனிமேல் நீங்கள் வாரம் இரண்டு புத்தகங்களை வாசித்து அதைப் பற்றி அறிக்கை ஒன்று எனக்கு தரப்போகின்றீர்கள்" என்றாள் எம் அன்னை. இனிமேல் எங்களை தொலைக்காட்சி பார்க்க அனுமதிக்க மாட்டாள் என்பதை உணர்ந்த நாங்கள் அழுதோம். முணுமுணுத்தோம். பிகுபண்ணினோம். மற்றப் பிள்ளைகள் தொலைக்காட்சி பார்த்து மகிழ்ச்சியாய் இருக்கும் பொழுது எங்களுக்கு மட்டும் இப்படி ஒரு தண்டனையா என்று எதிர்த்து வாதாடினோம். ஆனால். எம் அன்னை தான் எடுத்த முடிவை சற்றும் தளர்த்தவில்லை. அன்னை ஓரிரு தினங்களில் இதைப்பற்றி மறந்துவிடுவாளென்று நாம் எண்ணினோம். மேலும் எங்கள் வீட்டில் வாசிப்பதற்கு பரிசுத்த வேதாகமத்தை தவிர வேறு புத்தகம் எதுவும் இருக்கவில்லை. எங்களின் எண்ணங்களை உணர்ந்த அன்னை "நாங்கள் புத்தகம் இருக்கும் இடத்தைத் தேடிப்போவோம். நான் உங்களை நூலகம் ஒன்றிற்கு அழைத்துச் செல்வேன்" என்றாள். சிறிது நேரத்தின் பின். சினமும் கவலையும் மேலிட நானும் என் அண்ணனும் அன்னையினுடைய பழைய காரின் பின் இருக்கையில் அமர்ந்திருக்க. டெற்ரோயிற் பொது நூலகம் (Detroit Public Library) நோக்கி தன் காரைச் செலுத்தினாள் எம் அன்னை.

ஆரம்பத்தில் எந்தவித ஆர்வமுமின்றிப் புத்தகங்களின் பக்கங்களைப் புரட்டிப் பார்த்துக்கொண்டிருந்தேன். மிருகங்கள் என்றால் எனக்கு அலாதிப் பிரியம். மிருகங்களின் படங்களுடன் காணப்பட்ட புத்தகங்களை எடுத்து மெல்ல மெல்ல வாசிக்கத் தொடங்கினேன். நான் முழுமையாக வாசித்த முதல் புத்தகம் Chip the Dam Builder. இது பீவர் (Beaver) என்ற மிருகங்களின் வாழ்க்கை பற்றியும் அவை எவ்வாறு அணைகட்டி தங்கள் வீடுகளை அமைத்தன என்பது பற்றியும் கூறும் ஒரு கதை. (இம்மிருகம் நீர்நாய் என அழைக்கப்படும். நீரில்தான் அதிகமாக வசிக்கும்; நிலத்திலும் வசிக்கும்) என் வாழ்க்கையில் முதன் முதலாக வித்தியாசமான ஒரு உலகில் என்னை மறந்து லயித்திருந்தேன். இதுவரை காலமும் நான் பார்த்து இரசித்த தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் என் சூழலிலிருந்து என்னை இவ்வளவு தூர இடங்களுக்கு அழைத்துச் செல்லவில்லை. காடுகளிலும். நீரோடைகளிலும் இம்மிருகங்கள் வீடு அமைக்கும் பொழுது. அவ்விடங்களுக்கெல்லாம் என்னையும் அழைத்துச் சென்றன. தொலைக்காட்சி பார்த்தபொழுது உருவங்களும். காட்சிகளும் என் கண்முன்னே தோன்றின. இப்புத்தகங்களை வாசிக்கத் தொடங்கிய பின் உருவங்கள் காட்சிகள் என் மூளையில் உருவாகத் தொடங்கின. டைனோசரைக் கண்டுபிடித்தேன். பாலூட்டிகளுக்கும் ஊர்வனவிற்கும் இடையேயுள்ள வேறுபாடுகளை அறிந்துகொண்டேன். தொலைக்காட்சியில் பார்த்த ஒளியும். உருவங்களும் வழங்கிய தகவல்கள் அறிவினை விடப் புத்தகங்களின் அச்சுப் பதித்த சொற்கள் அதிக தகவல்களின் அறிவினையும் வழங்கின.

> "**நான்** நரம்பியல் சத்திரசிகிச்சை நிபுணனாக இருப்பதால் மூளையின் திறமை குறித்து எனக்கு மிகுந்த நம்பிக்கை உண்டு. ஒரு நொடியில் 2மில்லியன் தகவல் துணுக்குகளை கையாளும் ஆற்றல் மூளைக்கு உண்டு. நீங்கள் பார்ப்பவற்றை, கேட்பவற்றை எல்லாம் நினைவில் வைத்திருக்கக்கூடிய ஆற்றல் உள்ள மூளையையுடைய நாம் எங்களால் செய்ய முடியாதவை பற்றிக் கதைத்துக் காலத்தை வீணாக்கக்கூடாது. இளைஞர்களும் யுவதிகளும் தாம் கற்பனையில் காண்பவற்றை வாழ்க்கையில் சாதிக்க முடியும். விடா முயற்சியால் என்பதை உணரக் கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்க நாம் முயல வேண்டும்."
>
> *- டாக்டர் பென்ஜமின் காசன்.*

## இன்று அன்னையர் தினம்

மிருகங்களிலிருந்து தாவரங்களுக்கும் தாவரங்களிலிருந்து பாறைகளுக்கும் நகர்ந்தேன். இரும்புப் பாதை வழியே அலைந்து திரிந்து. வெவ்வேறு கற்களை ஒரு பெட்டியில் எடுத்து வீட்டிற்கு கொண்டுவந்து. புவிசரிதவியல் புத்தகங்களின் துணையோடு அவற்றிற்கிடையேயுள்ள வேறுபாட்டை அறிய முயற்சித்தேன். நான் வாசித்த புத்தகங்களின் இரு அட்டைகளுக்குள் மிகப்பெரிய உலகம் இருப்பதை அறிந்து கொண்டேன். மேலும் நான் விரும்பிய நேரத்தில் இவ்வுலகத்தின் எப்பகுதிக்கும் சென்றுவர என்னால் முடிந்தது. எல்லாவற்றையும் விட மிகப்பெரிய ஆச்சரியம் என்னவென்றால் வகுப்பில் கற்பித்த பாடங்களை சிறிது சிறிதாக நான் கிரகித்துக் கொள்ளத் தொடங்கினேன். கல்வியில் நான் முன்னேறுவதை என்னுடைய ஆசிரியர்களும் அவதானித்தார்கள். பாடசாலை முடிந்ததும் எம் அன்னைக்காக காத்திராமல் நானும் என்னுடைய அண்ணனும் குறுக்குப் பாதை ஒன்றின் வழியாக கிளை நூலகம் ஒன்றிற்குச் செல்லப் பழகிக்கொண்டோம். தொலைக்காட்சி பார்ப்பதற்கு விதித்திருந்த தடையைச் சற்று தளர்த்தினாள் எம் அன்னை. வாரத்தில் சில மணிநேரம் தொலைக்காட்சி பார்ப்பதற்கு அனுமதி கிடைத்தது. ஆனால். தொலைக்காட்சிதான் எங்கள் உலகம் என்ற நிலை இப்பொழுது மாறிவிட்டது.

இப்படியாக எங்கள் வாழ்க்கையின் போக்கை திசை திருப்பிய எம் அன்னை மூன்றாம் தரம் வரை மட்டும் படித்திருந்தாள். வாரந்தோறும் இரண்டு புத்தகங்களை வாசித்து நாங்கள் கிறுக்கிக் கொடுத்த அறிக்கையை. வாசித்துக்கொள்ள அவளால் முடிந்ததோ தெரியவில்லை. ஆனால் தன் முயற்சியால் பின்பு பொதுக்கல்வியில் டிப்ளோமா பட்டத்தை பெற்றுக்கொண்டாள். அவளின் அன்பும் ஊக்கமும் விடாமுயற்சியும் என் அண்ணனை ஒரு பொறியியலாளராகவும் என்னை சிறுவர் நரம்பியல் சத்திர சிகிச்சை நிபுணராகவும் ஆக்கியுள்ளது. யோன் கொப்கின்ஸ் சிறுவர் நிலையத்தில் நரம்பியல் சத்திரசிகிச்சைப் பகுதியின் தலைவராக நான் பணிபுரிகின்றேன். கல்வியில் பின்தங்கிய நிலையிலிருந்த ஒரு மாணவன் 'Yale' பல்கலைக்கழக புலமைப்பரிசில் பெற்றதும். மிச்சிக்கன் மருத்துவக் கல்லூரியில் கற்று.' இன்றைய நிலைக்கு உயர்ந்ததும். அதனால் உலகெங்கும் சென்று. மிகவும் சிக்கலான சத்திரசிகிச்சைகளை செய்யமுடிவதும் அதைப்பற்றி கற்பிக்க முடிவதையும் நினைத்துப் பார்க்கையில் என் வாழ்க்கைப் பயணத்தில் ஏற்பட்ட திருப்பத்தை என்னால் நம்ப முடியவில்லை என்று எம் அன்னை. நாங்கள் பார்த்துக்கொண்டிருந்த தொலைக்காட்சிப் பெட்டியை. கோபத்தோடு சடாரென அணைத்து விட்டு எங்கள் இருவரையும் பழைய மோட்டார் காரில் ஏற்றிக்கொண்டு டெற்ரோயிற் பொது நூலகம் நோக்கித் தன் வண்டியைச் செலுத்தினாளோ அன்றுதான் என் வாழ்க்கைப் பயணம் ஆரம்பமாயிற்று என்பதை நான் அறிவேன்.

*(நன்றி - Reader`s Digest)*



# கல்லில் நாருரிக்கும் நிலையில்

இந்தியத் தலையீட்டை இலங்கை அரசாங்கம் திரும்பத்திரும்ப வலியுறுத்தி வருகிறது. இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தனது இந்திய விஜயத்தின் போது இவ்வேண்டுகோளைவிடுத்ததாக இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந் சின்ஹா தெரியப்படுத்தினார். தலையிட்டேயாக வேண்டும் என்று 'ஒற்றைக்காலில்' நிற்கும் கதிர்காமர், இந்திய ஊடகமொன்றுக்கு பேட்டியளித்த போது விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தைகளின் போதுதான் இந்தியத் தலையீட்டின் தன்மைகளையும் வரையறைகளையும் தீர்மானிக்க வேண்டும் என்றும் கூறினார். எவ்வகையான தலையீடு தேவை என்பதை இலங்கை அரசாங்கம் தன்னிடம் இன்னமும் தெளிவாகக் கூறவில்லை என்றார் சின்கா.

ரணில் அரசாங்கம் ஆட்சியில் இருந்தபோது ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, தற்போதைய பிரதமராகவிருக்கும் மஹிந்த ராஜபக்ஷ, இன்றைய வெளிவிவகார அமைச்சராவிருக்கும் லக்ஷ்மன் கதிர்காமர் ஆகியோர் எதிர்க்கட்சியில் இருந்த வண்ணம் இலங்கை இனப்பிரச்சினை தொடர்பான அரசியல், இராணுவ விவகாரங்களில் இந்தியத் தலையீடு இன்றியமையாதது என்ற வகையில் கருத்துக்களை வெளியிட்டனர். அன்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியுடன் அரசியல் கூட்டாளித்தனத்துக்காக ஜே.வி.பி. பேச்சுக்களை நடத்திக்கொண்டிருந்தது. ஜே.வி.பியும் இந்தியத் தலையீட்டைவிரும்பி கருத்துக்களை வெளியிட ஆரம்பித்திருந்தது. தேர்தலின் பின் புதிய அரசாங்கத்தில் அங்கத்தவர்களான இவர்கள் அனைவரும் இந்தியத் தலையீடு என்ற 'வாய்ப்பாடை' அமளியாகப்பாடமாக்கினர். தீவிரஆழமும், இரகசியமும் நிறைந்த ஓர் 'உச்ச அன்புப் பரிமாற்றத்தை' இருநாட்டு வெளிவிவகார அமைச்சர்களும் மேற்கொண்டதை தூரதர்சன் ஒளிபரப்பியது.

## ரணில்-பிரபா உடன்படிக்கை ஒரு சமூக ஒப்பந்தமா?

விடுதலைப் புலிகளுக்கும் ரணில் அரசாங்கத்துக்குமிடையில் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படுவதற்கு ஏதுவாக போர்நிறுத்தம் அமுல்படுத்தப்பட வேண்டியிருந்ததால், இலங்கை அரசாங்கப் படைகளும் விடுதலைப் புலிகளின் படைகளும் தமக்கென இராணுவ ரீதியாகத் தக்கவைத்துள்ள கட்டுப்பாட்டுப் பிரதேசங்களை ஒருவருக்கொருவர் ஏற்றுக்கொள்ளவேண்டிய தார்மீகச் சூழ்நிலை எழுந்தது. போர்நிறுத்த அமுலாக்கம் மற்றும் சகஜநிலையை உருவாக்குதல் என்பன தொடர்பாக ரணில் விக்கிரமசிங்க அவர்களுக்கும் விடுதலைப் புலிகளின் தலைமைக்கும் 2002 பெப்ரவரி 22ஆம் திகதி புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப்பிரதேசம் என்பது அவர்கள் தமது போராளிகளுக்கான பயிற்சி முகாம்கள், ஆயுதக்களஞ்சியங்கள், இரகசியத்திட்டமிடல்கள் ஆகியவற்றை மேற்கொள்வதற்கான கரந்துறைக்கின்ற காட்டுப் பிரதேசங்கள் மட்டும்தான் என்று யாரும் தீர்மானித்து விடமுடியாது. வன்னிப்பிராந்தியமும் கிழக்கு மாகாணத்தின் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களும் பல்லாயிரக்கணக்கான மக்கள் வாழும் பிரதேசங்கள். விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவினர் தமது அரசியல் வேலைத் திட்டங்களை அங்கு முன்னெடுக்கின்றனர். அவர்களின் பொருண்மிய மேம்பாட்டுப்பிரிவு, நிதிப்பிரிவு, நீதி நிர்வாகம், பொதுநிர்வாகம், காவல்துறை, ஒலி-ஒளிபரப்பு நிறுவனங்கள், அச்சு ஊடகத்துறை முதலியன உள்ளடங்கிய ஒரு சுயாட்சிப் பிராந்தியத்துக்கான பெரும்பாலான மாதிரிகள் கொண்டு அமைந்துள்ளதாக விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப்பிரதேசம் விளங்குகின்றது.

இலங்கைத் தீவினுடைய அரசியல் யாப்பு வளர்ச்சியில் நாம் அவதானிக்கக் கூடிய விடயம் என்னவெனில், இலங்கையில் வாழும் அத்தனை சமூகங்களினதும் சமூக ஒப்பந்தமாக- அதாவது எல்லாசமூகங்களினதும் கடமைகள், உரிமைகளை சரிவர உறுதிப்படுத்துவதாக இலங்கையில் எந்த அரசியல் யாப்பும் திகழவில்லை என்பதாகும். சிங்கள மக்களால் சிங்களமக்களுக்காக இயற்றப்படும் சட்டங்கள், அதனைப் பேணி அமுல்படுத்தும் சிங்கள இனத்துக்கான நீதியை நிலைநாட்டும் நீதித்துறை, சிங்கள தேசியத்தை வளர்க்கும் நிறைவேற்று நிர்வாகத் துறை இவற்றைத் தொகுத்துக்கூறும் இலங்கை அரசியல் யாப்பு என இலங்கையில் நடைமுறை அரசியல் யதார்த்தம் இருக்கிறது. இதனால், ஒரு சிறுபான்மை இனமான தமிழினத்தின் சார்பில், தனது கட்டுப்பாட்டுப்பிரதேசத்துள் இராணுவ அரசியல் பலத்துடன் ஊன்றி நின்றபடி, அந்த இனத்தின் உரிமைகளை உறுதிப்படுத்தும் வகையிலான உடன்பாடுகளுக்கோ, ஒப்பந்தங்களுக்கோ செல்லும்போது சிங்களவர்களால், சிங்களவர்களுக்கான, சிங்களவர்களின் அரசியல் யாப்புக்கும் அந்த அரசியல் யாப்பு விதந்துரைக்கும் இறைமைக்கும் அப்பாற்பட்டே விடுதலைப் புலிகளால் அவை கைச்சாத்திடப்படமுடியும். அந்த வகையில் இலங்கையின் அரசியல் யாப்புக்கு அப்பால நின்றுதான் ரணில்விக்கிரமசிங்க அவர்கள் பிரபாகரன் அவர்களுடன் புரிந்துணர்வு உடன்பாட்டைக் கைச்சாத்திடும்போது புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தை ஏற்றுக்கொண்டார்.

அப்புரிந்துணர்வு உடன்பாட்டுக்கு இணங்க இரு தரப்பாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலையில் நோர்வே அனுசரணையுடன் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு ஸ்கன்ரிநேவிய நாடுகளின் பங்களிப்புடன் உருவாக்கப்பட்டு போர்நிறுத்தம் கண்காணிக்கப்படுகின்றது. நோர்வே நாட்டின் அனுசரணை இலகுபடுத்தல் (facilitation) என்பவற்றுடன் பல சுற்றுப் பேச்சுக்கள் சர்வதேச நகரங்களில் இடம்பெற்றன.

## இறைமையை மீறும் ஆவணமென்ற விமர்சனம்

அத்தருணத்தில் ஜனாதிபதி சந்திரிகா, லக்ஷ்மன் கதிர்காமர், ஜே.வி.பி. தலைவர்கள் புரிந்துணர்வு உடன்பாட்டை மிகத் தீவிரமாக விமர்சித்தனர். இலங்கையின் அரசமைப்பை அவமதிக்கும் வகையில் இலங்கையின் இறைமையை மீறும் ஆவணம் என்றும் உடனடியாக கிழித்தெறியவேண்டும் என்றும் உரக்கக் கதைத்தனர். நோர்வே, விடுதலைப் புலிகளின் சார்பாக நடப்பதாகக் குற்றஞ்சாட்டினர். புரிந்துணர்வு உடன்பாடு இலங்கையின் இறைமைக்கும் தன்னாதிக்கத்துக்கும் தீங்கு விளைவிப்பதாக சிங்கள மக்களை உஷார்ப்படுத்தினர். இலங்கையிலுள்ள நோர்வேத் தூதரகமும் அதன் இராஜதந்திரிகளும் கணிசமான அவமதிப்புக்களுக்குள்ளாகினர். ஜே.வி.பி நோர்வேயை வெளியேறும்படி ஆர்ப்பாட்டம் செய்தது.



## நோர்வே அவதூறு செய்யப்பட்டது

நோர்வேத் தூதரகத்துக்கு முன்பாக நோர்வே நாட்டுக்கொடியை ஜே.வி.பியின் ஆதரவாளர்களும் தற்போதைய ஜாதிக ஹெல உறுமயவினரும் எரித்துச் சாம்பலாக்கினர். இவ்வாறான பல அவமதிப்புக்களுக்கு உள்ளாகிய நோர்வேயின் இலங்கைக்கான தூதுவர், விடுதலைப் புலிகளுக்கான ஒலிபரப்புச் சாதனங்களைச செய்து கொடுப்பதில் உதவினார் என்ற குற்றச்சாட்டை தொடர்ந்தும் தாங்கிக் கொண்டு கசப்புக்களுக்கு மத்தியில் செயற்பட வேண்டியதாயிற்று. கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கிலப் பத்திரிகைகளும், சிங்களப் பத்திரிகைகளும் நோர்வேயை கிழித்துத் தாக்கின. நோர்வேத் தூதுவரின் நடவடிக்கைகள் தொடர்பாக தனது அதிருப்தியை கடிதம்மூலம் உத்தியோகபூர்வமாக நோர்வே அரசாங்கத்துக்கு வெளிப்படுத்தினார் ஜனாதிபதி சந்திரிகா அவர்கள்.

## நெருக்கடிகளுக்குள்ளான கண்காணிப்புக் குழு

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவை மிகக் கடுமையான நெருக்கடிக்குள்ளாக்கிய விவகாரமாக்கி, மணிராசகுளம் ~ புலிகளின் முகாம் விவகாரத்தை ஜனாதிபதி, லக்ஷ்மன் கதிர்காமர், மகிந்த ராஜபக்ஷ முதலியோர் கையாண்டனர். மணிராசகுளம் புலிகளின் முகாம் விவகாரத்தை தெற்கின் ஆங்கில, சிங்கள ஊடகங்கள் ஊதி ஊதிப் பெருப்பித்தன. அதேவேளையில், விடுதலைப் புலிகளின் கடற்புலிகளின் கடல் நடமாட்டங்கள், கடற்பரிமாற்றங்கள், கப்பல்கள், புலிகளின் சாதாரண கடற்கலங்களின் போக்குவரத்து, கடற்பரப்பில் அவ்வப்போது இடம்பெற்ற மோதல்கள் போன்ற விவகாரங்களையும் தெற்கில் ஆங்கில, சிங்கள ஊடகங்கள் பூதாகரமாக்கி சிங்கள மக்களுக்கு வழங்கின. கடற்பிராந்தியத்தில் ஏற்பட்ட நெருக்கடிகள், மணிராசகுளம் விவகாரம் ஆகிய இரண்டிலும் இலங்கை ஜனாதிபதி அரசியல் யாப்புக்கிணங்க முப்படைகளின் தளபதி தானே என்கின்ற அதிகாரத்தைப் பயன்படுத்தினார்.

## ரணிலின் சமாதானத்தில் மண் விழுந்தது

புரிந்துணர்வு உடன்படிக்கைக்குச் சவாலான சூழலை உருவாக்குவதன் மூலம் ரணில் விக்கிரமசிங்கவினால் அரசியல்தீர்வு விவகாரத்தில் இம்மியளவு கூட நகரமுடியாத முட்டுக்கட்டையை ஜனாதிபதி போட்டுவிட்டார். அதேவேளையில் விடுதலைப் புலிகளுக்கு அதிக விட்டுக்கொடுப்புக்களை ரணில் அரசாங்கம் செய்துள்ளது என்றும் ~ சிங்கள மக்களுக்கு இதன்மூலம் பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்பட்டுவிட்டது என்றும் ~ கொழும்பில் சிங்கள, ஆங்கில ஊடகங்கள் மேற்கொண்ட பிரசாரங்களும் ஜனாதிபதிக்குச் சாதகமாகின. சமாதானத்தில் முதலிடப்பட்ட ரணிலின் சொந்த அரசியல் இலாபத்துக்கு உண்மையில் மண்விழுந்தது.

## நழுவிய புலிகள்

ரணிலின் அரசாங்கம் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதற்கான அதிகாரங்கள் இன்றி உள்நாட்டில் தடுமாறியதால் விடுதலைப் புலிகளுக்கு வழங்கிய புனர்வாழ்வு, புனர்நிர்மாணம், மீள் குடியமர்வு என்பன தொடர்பான இராணுவ, பொருளாதார விடயங்களை நிறைவேற்ற முடியாமற்போனது. சமாதானத்தின் பங்காளிகளான விடுதலைப் புலிகள், இலங்கைத்தீவின் அபிவிருத்தியிலும் பங்காளிகளாகத் திகழ்கின்றனர் என்பதை சர்வதேச சமூகத்துக்கு காட்டி அபிவிருத்தி மூலம் சிங்கள சமூகத்திடமிருந்து தனது அரசியலை வென்றெடுத்து விடலாம் என்ற இனிமையான திட்டம் ரணிலிடம் இருந்தது. 2003ஆம் ஆண்டு ஜூன் மாதம் 10ஆம் திகதி ஆரம்பமான இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளின் ரோக்கியோ கூட்டத்தில் விடுதலைப் புலிகள் பங்குபற்றாமல் 'நழுவியமை' ரணிலின் அரசியல் உபாயத்தில் பெரும் இடியென விழுந்தது. ரோக்கியோ உதவி வழங்கும் கூட்டத்தில் ஏறத்தாழ 55 நாடுகள், 15 சர்வதேச நிறுவனங்கள் கலந்து கொண்டன. அக்கூட்டத்தில் வைத்து ~ சமாதானம், அபிவிருத்தி, சகவாழ்வு என்பனவற்றின் பேரால் ~ இனிமேல் ஆயுதம் தூக்கி போராட மாட்டோம்; என்றொரு வாக்குறுதியையும் அளிக்க புலிகளை நிர்ப்பந்திக்கலாம் என ரணில் கனவு கண்டிருந்தார் என்றும் பின்னர் செய்திகள் வெளியாகியிருந்தன.

மேலும் ரணில், ஆரம்பம்முதல் சர்வதேச பாதுகாப்பு வலைப்பின்னல், இந்தியாவுடன் பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தம் என்பன போன்ற வேம்பாய்க் கசக்கும் சில விவகாரங்களையும் சேர்த்தே நகர்த்தலாம் என்று அட்டவணைப் படுத்திவைத்திருந்தார்.

## ஜே.வி.பியும் ஹெல உறுமயவும் இடையறா எதிர்ப்பு

முடங்கிய பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட வேண்டுமானால் இடைக்கால நிர்வாகம் தொடர்பான யோசனைகளை முன்வைக்குமாறு விடுதலைப் புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் ரணில் அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டார். அரசாங்கம் யோசனைகளை ஓரிரண்டு பக்கங்களில் வழங்கியது. ஆனால், அவை தமிழ் பிராந்தியத்துக்கு, அப்பிராந்தியத்தில் வாழும் தமிழ் மக்கள் சார்பில் விடுதலைப் புலிகள் எதிர்பார்க்கும் இடைக்காலத் தீர்வுக்கு எள்ளளவும் வழிகாட்டவில்லை என்பதனால் விடுதலைப் புலிகள் முதன் முதலாக எழுத்து வடிவத்தில் தாமாகவே ஓர் இடைக்காலத்தீர்வு யோசனைகளை அரசாங்கத்திடம் கையளிக்க முன்வந்தனர். அக்கால கட்டத்தில் நோர்வே அனுசரணையுடனான சமாதான முயற்சிகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் பாதயாத்திரை ஒன்றை காலியிலிருந்து கொழும்பு வரை நான்கு நாள்களுக்கு ஜே.வி.பி. நடத்தியது. 2003 ஓகஸ்ட் 25ஆம் திகதி இப்பாதயாத்திரை இடம்பெற்றது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இந்த யாத்திரையை ஆதரித்தது. அக்கட்சியின் பல பிரமுகர்கள் அதில் பங்கேற்றனர். 2003 ஒக்ரோபர் 14ஆம் திகதி சிஹலஉறுமய (இன்றைய ஜாதிகஹெல உறுமய) தனது ஆதரவாளர்களுடன் மணிராசகுளம் ~ புலிகளின் முகாமுக்கு ஊர்வலமாகச் செல்ல முற்பட்டனர். ஆனால், பொலீஸார் அவர்களை சில கிலோமீற்றர் தூரத்தில் வைத்துத் தடுத்து நிறுத்தினர்.

## மூன்று அமைச்சுக்கள் பறிக்கப்பட்டன

2003 ஒக்ரோபர் 31ஆம் திகதி விடுதலைப் புலிகள் தமது இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கான யோசனைகளை அரசாங்கத்திடம் சமர்ப்பித்தனர்.

2003 நவம்பர் 04ஆம் திகதி ரணிலின் அரசாங்கத்திடமிருந்த பாதுகாப்பு அமைச்சு, உள்நாட்டலுவல்கள் அமைச்சு, ஊடகத்துறை அமைச்சு என்பன ஜனாதிபதியால் கையேற்கப்பட்டன. அன்றைய தினம் அமெரிக்காவுக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டிருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ச் டபிள்யூ புஸ் ஆரத்தழுவி ஆறுதல் கூறி தனது உள்ளன்பை வெளிப்படுத்தினார். புஷ்ஷின் பேச்சாளர் கூட வெளிப்படையாக கொழும்பில் ரணில் அரசாங்கத்துக்கு அமெரிக்க நிர்வாகத்தின் ஆதரவை வெளிப்படுத்தியிருந்தார்.

## ஜனாதிபதியும் புலிகளும் போரை விரும்பவில்லை

அமைச்சுக்களை ஜனாதிபதி பொறுப்பேற்ற போது ரணில் அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் கடைப்பிடித்து வந்த போர்நிறுத்தம் மீண்டும் கேள்விக்குள்ளானது. பாதுகாப்பு அமைச்சை பொறுப்பேற்ற ஜனாதிபதி ஏற்கனவே சர்ச்சைக்குள்ளாகியிருந்த மணிராசன்குளம் விவகாரங்கள் போன்றவற்றுக்கு இராணுவ ரீதியான அணுகு

# நோர்வேயி

முறைகளை தொடங்குவார் என்றும் இதன் காரணமாக மீண்டும் போர் வெடிக்கலாம் எனவும் கூட எதிர்பார்க்கப்பட்டது. எனினும், மணிராசகுளம் விவகாரத்தை ஜனாதிபதி அரசியல்நோக்குகளுடன்தான் முன்பு பயன்படுத்தினார் என்பது வெளிப்பட்டது. தென்பகுதியில் இடம்பெற்று வரும் அரசியல் சிக்கல்களுக்கு மத்தியிலும் போர் நிறுத்த உடன்பாட்டை தமது அமைப்பு முறைப்படி பேணும் என்று விடுதலைப் புலிகளும் அறிவித்தனர். ஜனாதிபதியும் போர்நிறுத்தத்தை தொடரவே விரும்பினார்.

## மனோ-மலிக் குழு தோற்றது

மூன்று அமைச்சுக்களை பொறுப்பேற்றமை தொடர்பாக பிரதமர் ரணிலுடன் ஏற்பட்ட சர்ச்சையைத் தீர்ப்பதற்கு தாம் விரும்புவதாக சர்வதேச சமூகத்திற்கு வெளிப்படுத்துவதற்காகவும் உள்ளூரில் தனது சமரசப் போக்கை நிரூபிப்பதற்காகவும் மனோ-மலிக் குழுவுக்கு ஊடாக ஜனாதிபதி முயற்சிகளை மேற்கொண்டார். பிரதமர் ரணிலுடன் ஓர் அரசியல் சகவாழ்வுக்கு தான

**டன்ஸ்ரன் லூயிஸ்**

முயற்சிப்பதாகக் கூறி அமெரிக்கா போன்ற சர்வதேச நாடுகளை திருப்திப்படுத்தினார். இந்திய அரசாங்கமும் நாடாளுமன்றத்தைக் கலைத்து புதிய தேர்தல் நடத்தப்பட்டால் விடுதலைப் புலிகள் நிறுத்தும் பிரதிநிதிகளுக்கு தமிழ்மக்களிடமிருந்து ஏகோபித்த அரசியல் ஆதரவு கிடைத்துவிடும் என்றும் அது புலிகளின் அரசியல் வெற்றியாகிவிடும் என்றும் ஆரூடம் தெரிவித்து, ஜனாதிபதியும் பிரதமர் ரணிலும் அரசியல் சகவாழ்வுக்கு வருவதே சிறந்தது என்று ஆலோசனை கூறியதாக அரசியல் அவதான ஆய்வுகளில் இருந்து தெரியக்கூடியதாக இருந்தது. மனோ-மலிக் குழுவின் நடவடிக்கைகள் ஒரு கண் துடைப்பாகத்

தொடர்ந்தது.

### பொதுத் தேர்தல் 2004

எனினும், ஏற்கனவே பல மாதங்களாகத் தொடர்ந்து ஜே.வி.பி. – ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி கூட்டணி அமைப்பதற்கான பேச்சுவார்த்தை வெற்றியளித்ததால் 2004ஜனவரி 20ஆம் திகதி இரு கட்சிகளும் பரஸ்பர புரிந்துணர்வு ஒப்பந்தத்தைக் கைச்சாத்திட்டன. அதனையடுத்து 2004 பெப்ரவரி 7ஆம் திகதி நள்ளிரவு இலங்கையின் 12ஆவது நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது. ஏப்ரல் 2ஆம் திகதி 13ஆவது நாடாளுமன்ற தேர்தல்கள் நடந்தது; ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, ஜே.வி.பி ஆகியன உள்ளடங்கும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சியமைத்தது.

### புதிய அரசாங்கத்தின் புதுச் சமாதானமும் கதிர்காமரும்


தற்போது சமாதானப் பேச்சு வார்த்தைகளை மீள ஆரம்பிப்பதற்கான முயற்சிகளை ஜனாதிபதி நோர்வே ஊடாக மீளவும் ஆரம்பித்துவிட்டார். அதேவேளை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் இந்தியத் தலையீட்டை இந்தியாவிடம் கோரியுள்ளார். புலிகளின் விருப்பு வெறுப்புக்களுக்கு மாறாக இவ்விடயத்தைக் கையாள கதிர்காமர் விரும்பமாட்டார் போலத்தான் தெரிகிறது. இந்த இடத்தில் கதிர்காமரை நினைக்கும் போது ஒரு பழமொழிதான் ஞாபகத்துக்கு வருகிறது. கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை என்பதே அப்பழமொழி. ஒரு கட்டத்தில் பேச்சுக்களை விடுதலைப் புலிகளை ஏகப்பிரதிநிதிகளாக (Sole Representatives) கதிர்காமர் விவரித்துள்ளார். இந்திய ஊடகவியலாளர்களுக்கே இதனைக் கூறினார். வடக்கு –கிழக்கு புனர் நிர்மாணம், அபிவிருத்தி என்பவற்றினூடாக இந்தியா இலங்கை விவகாரத்துள் இலகுவாகப் பிரவேசிக்கலாம் என்றும் பகிரங்கமாகக் கதிர்காமர் பேசியுள்ளார்.

### புதிய அரசாங்கத்தின் புதுச் சமாதானமும் சந்திரிகாவும்

நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கிஸன், விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் ஆகியோரும் இலங்கைக்கான நோர்வேத் தூதரக இராஜதந்திரிகளும் கடந்த வாரம் ஜனாதிபதியைச் சந்தித்துத் தாம் விடுதலைப் புலிகளுக்கு ஜனாதிபதியின் சார்பில் என்ன என்ன விடயங்களை எடுத்துச்சென்று விவரிக்க வேண்டும் என்பதையிட்டு பேச்சுக்களை நடத்தினர். அதனையடுத்து எரிக்சொல்ஹெய்ம் தலைமையிலான குழுவினர் கிளிநொச்சி சென்று விடுதலைப் புலிகளின் அரசியல் துறையுடன் ஜனாதிபதியின் நிலைப்பாடுகள் பற்றி தெளிவுபடுத்தினர். அவை சார்பில் தமது நிலைப்பாடுகளை விடுதலைப் புலிகள் நோர்வே குழுவுக்கு விவரித்துள்ளனர். தமது நிலைப்பாடுகளுக்கும் ஜனாதிபதியின் நிலைப்பாடுகளுக்குமிடையில் பாரிய வேறுபாடுகள் இல்லையென அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் நம்பிக்கையுடன் தெரிவித்தார். தொடரும் நோர்வேயின் முயற்சிகளுக்கூடாக பேச்சுவார்த்தைக்கான நிகழ்ச்சி நிரல்கள் தயாரிக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தார். இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கான தீர்வுயோசனைகளை விடுதலைப் புலிகள் சமர்ப்பித்துள்ளனர். அதனையிட்டு பேசி விரைவில் வடக்கு–கிழக்குப் பிராந்தியத்துக்கான இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை அமைக்கப்படவேண்டும் என்றும் அரசாங்கம் அரசியல் பொருளாதார இலாபங்களை உள்ளூர் மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் ஈட்டிக் கொள்வதற்கான நோக்கத்துடன் பேச்சுக்களை இழுத்துக்கொண்டு செல்லக்கூடாது என்றும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள், நோர்வே குழுவினருக்கூடாக ஜனாதிபதிக்குத் தெரிவித்துள்ளனர்.

### ஹக்கீம் புதிய திசையில் நகர்கிறார்!

இந்நிலையில், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், தனது குழு சகிதம் எரிக் சொல்ஹெய்ம் குழுவினரைச் சந்தித்து ஆரம்பிக்கப்படவுள்ள சமாதானப் பேச்சுக்களில் முஸ்லிம் தனித்தரப்பாகப் பங்குபற்ற வேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளார். அத்துடன் ஹக்கீமின் பிரதிநிதிகளுக்கும் ஜனாதிபதியின் பிரதிநிதிகளுக்கும் இடையில் நட்பு ரீதியான தொடர்புகள் வலுப்படுத்தப்பட்டுவருவதுடன் இருவரும் விரைவில் முறைப்படியாகச் சந்தித்து உடன்பாட்டுக்கு வருவர் எனவும் தெரியவருகிறது. ஏற்கனவே பேரியல் அஷ்ரப், அதாவுல்லா போன்றவர்கள் புதிய அரசாங்கத்தில் அங்கம் வகித்துள்ளனர். தாமும் சில முன்நிபந்தனைகளுடன் அரசாங்கத்துக்கு ஆதரவைத் தெரிவிப்பதன் மூலமே ஆரம்பமாகப் போகும் பேச்சுக்களில் பிரவேசிக்க முடியும் என்றும் ஹக்கீம் நம்புகிறார். அல்லாவிட்டால் பேரியல் அஷ்ரப், அதாவுல்லா போன்றோர் பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம்களின் பிரதிநிதிகளாக பங்குபற்றும் நிலைமை தோன்றிவிடுமோ எனப் பயப்படும் ஹக்கீம், அவர்கள் இருவரும் அம்பாறை முஸ்லிம்களின் ஆதரவை மட்டுமே பெற்றவர்கள் என்றும் ஒட்டுமொத்த வடகிழக்கு முஸ்லிம்களின் ஆதரவைப் பெற்றுள்ள முஸ்லிம் அரசியல் சக்திதானே என்றும் – அதனால் ஜனாதிபதியுடன் தான் காணும் இணக்கப்பாட்டின் அடிப்படையில்தான் பேச்சுக்களில் பங்கு கொள்வது அவசியமென்றும் – ஹக்கீம் தனியார் தொலைக்காட்சியொன்றுக்குத் தெரிவித்தார்.



## ...யின் மத்தியஸ்தம்...

### கடும் நம்பிக்கையீனங்கள் மத்தியில் நம்பிக்கைகள்

இந்நிலையில், பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதன் மூலம் நாடாளுமன்றத்தில் தனது பெரும்பான்மையை நிரூபிப்பதற்கான யுத்திகளிலும் சர்வதேச பொருளாதார உதவிகளைப் பெறுவதற்கான நற்பெயரைச் சம்பாதிப்பதிலும் ஜனாதிபதி வெற்றிபெறுவாரா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். ஏனெனில், தீவிர சிங்கள அரசியல் கொள்கையுடைய ஜே.வி.பி., கிராம மட்டத்தில் அதிகாரங்களைப் பரவலாக்கிப் பிரச்சினைகளைத் தீர்க்கும் நம்பிக்கைகளை கைவிட்டு விட்டதா என்பது தெரியவில்லை. இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனைகளை மேசையில் வைத்துப் பேச்சுக்களுக்கான நிகழ்ச்சி நிரலைத் தயாரிப்பதற்கு ஜனாதிபதியை ஜே.வி.பி. எவ்வளவு தூரம் அனுமதிக்குமோ தெரியவில்லை. இம்முறை கொழும்பில் நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கிஸன், "தீவிர அரசியல் சக்திகளின் செல்வாக்கு கொழும்பில் அதிகரித்துள்ளதால் அரசாங்கத்திலுள்ள சிலர் கூறுவதுபோல உடனே பேச்சுக்கள் ஆரம்பிக்கும் என எதிர்பார்ப்பது யதார்த்தமல்ல" என்றார். எனினும் விடுதலைப் புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் வன்னி வருகிறார் என்ற செய்தியும் நோர்வே வெளிவிவகார அமைச்சர் பீற்றர்சன் மேற்கொள்ளும் கொழும்பு விஜயமும் அவநம்பிக்கைகளிலும் நம்பிக்கைகளை அதிகளவில் ஏற்படுத்துமா?

☆

## கூத்தரங்கம் 2ஆவது இதழ்



செயல்திறன் அரங்க இயக்கத்தினால் வெளியிடப்படும் 'கூத்தரங்கம்' எனும் அரங்க செயற்பாடுகள் தொடர்பான செய்திப் பரிமாற்ற ஏடு கடந்த மார்ச் மாதத்தில் இருந்து வெளிவருகின்றது. தற்போது மே மாதத்திற்குரிய வெளியீடு வெளிவந்துள்ளது. இதில் ஈழத்து மூத்த எழுத்தாளர் கவிஞர் இ.முருகையன் அவர்களின் சிறப்புப் பேட்டி, கல்வியியல் துறைப் பேராசிரியர் சபா.ஜெயராசா அவர்கள் ஈழத்து மூத்த நாடகக் கலைஞர் குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்களின் நாடக வழக்கு நூல் தொடர்பாக எழுதிய விமர்சனம் கலாநிதி எஸ்.சிவலிங்கராஜாவின் கருத்துரை, இலக்கியா எழுதிய 'கல்லின் கசிவு' பெண்கள் அரங்கு தொடர்பான விமர்சனம், தி.செல்வ மனோகரன் எழுதிய தேவானந்தின் 'நெஞ்சுறுத்தும் கானல்' இரு நாடகப் புத்தகத்தின் அறிமுகக் குறிப்பு, அரங்குசார் அனுபவப் பகிர்வு போன்றவற்றை உள்ளடக்கி வெளிவந்துள்ளது.

கூத்தரங்கம் க.பொ.த.உயர்தரத்தில் நாடகமும் அரங்கியலும் பாடத்தினைக் கற்கும் மாணவர்க்கும் பல்கலைக்கழகத்தில் உள்வாரியாகவும் வெளிவாரியாகவும் நாடகத் தைக் கற்கும் மாணவர்க்கும் மிகவும் பயனுள்ள விடயங்களைக் உள்ளடக்கி இரு மாதங்களுக்கு ஒரு தடவை வெளிவருகிறது.

'கூத்தரங்கம்' நாடகத்துறை சார்ந்தவர்களின் சாதனைகளையும் ஊர்கள்தோறும் நாடகங்களை மேடை ஏற்றுகின்ற நாடக மன்றங்களையும், நாடகச் செயற்பாடு தொடர்பான செய்திகளையும்,நாடக ஆற்றுகை தொடர்பான விமர்சனங்களையும், வெவ்வேறு அரங்க வடிவங்கள் தொடர்பான ஆய்வு நிலைக்கட்டுரை களையும்,அரங்கு சார்ந்த வெளியீடுகள் தொடர்பான அறிமுகங்கள், கற்கை நெறியாக அரங்கு செயற்படும் ஆக்கநிலைகள் பற்றிய குறிப்புக்களை தாங்கி வருவதற்கு திட்டமிட்டுள்ளதாக இதன் ஆசிரியர் குழுவினர் தெரிவித்துள்ளார்கள்.

'கூத்தரங்கம்' அரங்க மாணவர்கள் எழுதுவதற்கான பயில் களமாக அமையவேண்டும் என்பது கூத்தரங்கினுடைய நோக்காக அமைகிறது. கூத்தரங்கத்திற்கு அரங்க மாணவர்கள், நாடக ஆசிரியர்கள், நெறியாளர்கள், ஆய்வாளர்கள் தங்கள் ஆக்கங்களை பின்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கலாம். கூத்தரங்கை செயல்திறன் அரங்க இயக்க அலுவலகத்திலும் யாழ். புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

**முகவரி:-**
**'கூத்தரங்கம்'**
**செயல்திறன் அரங்க இயக்கம்,**
**அருளகம்**
**ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.**

## ஓயஸிஸ்(Oasis)

### வவுனியாவில் இருந்து ஓர் ஆங்கில சஞ்சிகை



ஆங்கில மொழியின் அவசியமும் தவிக்கவியலாப் பிரதானத்துவமும் அனைவராலும் உணரப்படத் தொடங்கியுள்ள இந்தக்காலச் சூழலில் உயர் கல்வி பெறவும் புதிய துறை சார்ந்து கற்கவும் இளைய தலைமுறையினர் பெருமளவு முனைந்து வருகின்ற ஒருநிலையில் ஆங்கில மொழி சார்ந்து பொது வாசிப்பு முயற்சிகள் அவசியமாகின்றன. ஒப்பீட்டளவில் இன்று ஆங்கிலத் தினசரிகளைத் தேடிவாசிக்கும் இளையோரின் எண்ணிக்கை அதிகமாகியிருக்கிறது. வாசிப்பு மகிழ்ச்சிக்காக என்றில்லாவிடினும் எப்படியாவது ஆங்கிலத் தேர்ச்சி பெற்றுவிடுவது என்ற முனைப்பின் உந்துதல் அவர்களை வாசிக்க வைத்திருப்பது ஒரு நல்ல மாற்றம்தான்.

இந்நிலையில், வவுனியாவில் இருந்து வவுனியா ஆங்கிலக் கழகத்தினரால் வெளியிடப்பட்டுள்ள ஓயஸிஸ் (பாலைவனச்சோலை) என்ற சஞ்சிகை ஆங்கில வாசிப்பு மற்றும் ஆங்கிலத்திலான எழுத்து முயற்சிகள் போன்றவற்றுக்கு உதவும் வகையில் வெளியிடப்பட்டுள்ளது.

வவுனியா வளாக ஆங்கில விரிவுரையாளர் கந்தையா ஸ்ரீகணேசன், எஸ்.சிவபாலன் ஆகியோரை ஆசிரியர்களாகக் கொண்டு வெளிவருகிறது.

பல்துறைப்பட்ட விடயங்களையும் உள்ளடக்கியுள்ள இச்சஞ்சிகை கவிதை, சிறுகதைகள், கட்டுரைகளெனப் பொதுவான அம்சங்களை கொண்டுள்ளதோடு, ஆங்கிலத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் சில ஆக்கங்களையும் கொண்டுள்ளது.

ஆங்கிலத்திலும் தமிழிலும் எழுதிவரும் எமது மண்ணின் எழுத்தாளர் சாந்தன் அவர்களது தலைமுறைகள் என்னும் குறுங்கதை குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்களது 'யார்கொலோசதுரர்' நாடகம் பற்றிய சோ.ப அவர்களின் விமர்சனம் ஆங்கில ஆசிரியர்களுக்கான ஒரு நாடகப் பட்டறை பற்றிய கந்தையா ஸ்ரீகணேஸனின் கட்டுரை, கவிஞர் ஆர்.முருகையன் ரஞ்சன் செல்லரூபா ஆகியோரின் கவிதைகள் றம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயத்தின் ஓய்வுபெறும் அதிபர் வண. சகோதரி எம்.எம்.மடுத்தீன் அவர்களது பேட்டி, பேராசிரியர் என்.பாலகிருஸ்ணன் அவர்களது வணிகவியல் தொடர்பான ஒரு கட்டுரை முதலான பல அம்சங்கள் இந்த சஞ்சிகையில் காணப்படுகின்றன.

சஞ்சிகை முகப்பில் எமது மண்ணின் ஓவியரான ஆசை.இராசையா அவர்களின் ஓவியம் காணப்படுகிறது அர்த்தங்கள் பல சொல்லும் அந்த ஓவியம் உடபடப் பல அரிய விடயங்களை தாங்கி வெளிவந்துள்ளது. இந்தச் சஞ்சிகை தேவைப்படுவோர்

**பொதிகை,**
**395/145 அலைகரை ஒழுங்கை,**
**றம்பைக்குளம், வவுனியா**
என்னும் முகவரியோடு தொடர்புகொள்ளவும்

oasis இன் வரவு பலராலும் ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகிறது. தொடர்ச்சியான வருகை என்பது சவாலாகியுள்ள ஒரு சூழலில் தொடர்ந்தும் இச்சஞ்சிகை வெளிவருவதென்பது வாசகர் மற்றும் படைப்பாளிகளின் ஆய்வில் தங்கியுள்ளது.

ந.சத்தியபாலன்

## மாணவருக்கான திருக்குறள் நூல்



திருக்குறள் தமிழர்களாகிய நமக்கு உலகப் புகழ் தேடித்தந்துள்ள நூல். பல குறள்களை ஆங்கிலத்திலோ வேறு மொழிகளிலோ மொழிபெயர்த்தால், அவ்வவ்மொழி பேசும் மக்கள் தமக்கும் பொருத்தம் உடையனவாக அவை அமைந்துள்ளன என்று கூறுவர். அத்தகைய பெருமைமிகு நூலினை நமது மாணவர்கள் எல்லோரும் கற்று உணரவேண்டும். அதற்காக திருக்குறள் பற்றி எத்தனையோ நூல்கள் எழுதப்பட்டுள்ளன. மாணவர்களுக்குத் திருக்குறளை அறிமுகம் செய்யும் வகையில் அமைந்துள்ள நூல் வரிசையிலே மாணவர் வாழ்வில் திருக்குறள் என்னும் நூல் கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச் சங்கத்தினால் வெளியிடப்படுகின்றது.

இந நூலின் சிறப்பு என்னவென்றால் கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச் சங்கம் ஆண்டுதோறும் மாணவர் மத்தியில் நடத்தப்பெறும் திருக்குறள் தமிழ் இலக்கியத் திறன் தேர்வுக்கான பாடத்திட்டம் இதனுடன் இணைக்கப்பட்டுள்ளதாகும். தமிழறிஞர் வ.சுப.மாணிக்கம் எழுதிய மாணிக்கக் குறள்களில் 11 குறள்கள் இந்நூலில் தரப்பட்டுள்ளன. குறட் கருத்துக்களை அரண் செய்யும் ஆத்திசூடியும் கொன்றை வேந்தனும் இணைக்கப்பட்டுள்ளன.

இவை யாவற்றையும் "மாணவர் வாழ்வில் திருக்குறள்" என்னும் நூலாகத் தொகுத்தவர் திரு.வே.பரமநாதபிள்ளை. தூய தமிழ் பயன்பாட்டுக்காக அரும்பாடுபடுபவர் இவர். கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச் சங்கத்தினூடாகத் தமிழ்ப் பணி செய்து வருகிறார். இப்பணியின் ஓர் இழையாக இந்நூல் வெளியீடு அமைகின் றது. திருக்குள் பற்றி எவ்வளவு நூல் வந்தாலும் அவை எங்களுக்கு வேண்டியளவே. இந்த வகையில் இந்நூலையும் வரவேற்று, தொகுப்பாசிரியரையும் தமிழ்ச் சங்கத்தினரையும் பாராட்டி இச்சிறிய அணிந்துரையை நிறைவு செய்கிறேன்.

பேராசிரியர் அ.சண்முகதாஸ்
தலைவர், தமிழ்த்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

# பிறந்த வீட்டில் மீண்டும் ஒருமுறை கால் பதிக்கும் ஒலிம்பிக்!

ஒலிம்பிக் போட்டிகள் நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் சர்வதேசப் போட்டி ஆகும். பண்டைக்கால கிரேக்கர்களின் தேசிய விழாவே ஒலிம்பிக் போட்டியாகப் பரிணாமம் பெற்றுள்ளது.

இவ்விழாவை கிரேக்கர்கள் ஒலிம்பியா என்னும் சமவெளியில் ஜூஸ் என்னும் தம்முடைய தேவதையின் வழிபாடாக நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்திவந்தனர். முதல் நாளில் கடவுள் வணக்கமும் மற்றநாள்களில் போட்டிகளும் நடைபெற்றன. தொடக்கத்தில் ஓட்டப்பந்தயம் மட்டுமே நடைபெற்றது. நாளடைவில் குத்துச்சண்டை, மற்போர், குதித்தல் போன்ற மற்றப் போட்டிகளும் சேர்க்கப்பட்டன. போட்டியில் பெண்கள் கலந்துகொள்ளவில்லை. போட்டியில் வெற்றி பெற்றவர்கள் புகழ்ந்து பாராட்டப்பட்டனர். 'ஒலிவ்' பூ முடி அவர்களுக்குச் சூட்டப்பட்டது. அவர்கள் பெயர்கள் நாடு முழுவதும் பறை சாற்றப்பட்டன. இவ்வாறு கி.மு. 8 ஆம் நூற்றாண்டு முதல் நடைபெற்று வந்த இந்த விழாவை ரோமாபுரி மன்னர் கி.பி. 394 இல் தடை செய்தார். அதுமுதல் 1500 ஆண்டுகள் வரை இவ்விழா நடைபெறவில்லை.

பாரன் பியர் தா கோபர்ட்டின் (Baron Pierre de Coubertin) என்ற பிரெஞ்சு நாட்டவர் ஹெர்பட் (Herbert) என்ற ஆங்கிலேயரின் துணையோடு 1894 இல் சர்வதேச மாநாடு ஒன்றை நடத்தினார். அந்த மாநாட்டில் சர்வதேச ஒலிம்பிக் குழு ஒன்று அமைக்கப்பட்டு நவீன ஒலிம்பிக்கின் முதல் விழா கிரேக்கத் தலைநகர் ஏதென்ஸ் நகரில் 1896 இல் நடத்தப்பட்டது. குழுவினரால் தேர்ந்தெடுக்கப்படும் இடத்தில் நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை ஒலிம்பிக் ஆட்டம் நடத்துவது எனவும் அப்போது முடிவு செய்யப்பட்டது.

ஒலிம்பிக் மத்திய குழுவில் எல்லா நாடுகளும் அங்கம் வகிக்கின்றன. ஒவ்வொரு நாட்டிலும் உள்நாட்டு ஒலிம்பிக் கழகமும் ஒலிம்பிக் குழுவும் உள்ளன. நாட்டு ஒலிம்பிக் கழகம் உள்நாட்டு ஒலிம்பிக் ஆட்டவிழாவை நடத்துவதோடு, சர்வதேச ஒலிம்பிக் ஆட்டவிழாவிற்குத் தன் நாட்டு வீர, வீராங்கனைகளை அனுப்புகிறது.

மதுமிதா

இரண்டு உலக யுத்தங்களின் போதும் ஒலிம்பிக் போட்டிகள் இடம்பெறவில்லை. 1928ஆம் ஆண்டிலிருந்து ஒலிம்பிக் போட்டிகளில் பெண்களுக்குரிய பந்தயங்களும் நடைபெறுகின்றன.

ATHENS 2004

தற்கால ஒலிம்பிக் ஆட்ட விழாவில் எத்தகைய சமய, வகுப்பு இன, நிற வேறுபாடுகளுமின்றி எல்லா நாட்டவர்களும் கலந்து வருகின்றனர். விழாத் தொடக்கத்தில் பலியிடும் பண்டைய வழக்கமில்லை. அதற்குப் பதிலாக ஒலிம்பிக் ஒளிவிழா நடைபெறுகிறது.


உலகப் புகழ்பெற்ற இந்த ஒலிம்பிக் போட்டிகளின் வரிசையில் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 13ஆம் திகதி முதல் 29 ஆம் திகதி வரை கிரேக்க நாட்டுத் தலைநகரான ஏதென்ஸில் 28ஆவது ஒலிம்பிக் போட்டிகள் இடம்பெறவுள்ளன.

ஒலிம்பிக்கின் பிறப்பிடமான கிரேக்கத்தில் மீண்டும் ஒலிம்பிக் போட்டிகள் இடம்பெறுவதால் இம்முறை இந்த உலக விளையாட்டு விழா தனிச் சிறப்புப் பெறுகிறது. நவீன ஒலிம்பிக் போட்டிகள் இங்கு இடம்பெறுவது இது இரண்டாவது தடவையாகும். ★

**புராதன ஒலிம்பிக் போட்டிகள் ஆரம்பமாகும் போது பலிகள் கொடுக்கப்பட்டன. ஆனால், நவீன ஒலிம்பிக் ஒளியேற்றும் விழாவுடன் அங்குரார்ப்பணம் செய்யப்படுகிறது. இந்த விழா ஒலிம்பிக்கின் பிறப்பிடமான கிரேக்க நாட்டின் ஏதென்ஸ் நகரில் உள்ள 'ஹெரா' ஆலயத்தில் இடம்பெறுவது வழக்கம். இந்த விழாவில் ஏற்றப்படும் ஒலிம்பிக் தீபம் உலகெங்கும் எடுத்துச்செல்லப்பட்டு போட்டிகள் ஆரம்பிக்கும் தினத்தில் மைதானத்துக்குக் கொண்டுவரப்படும். 28ஆவது ஒலிம்பிக் போட்டிக்கான ஒளியேற்று விழாவின் காட்சிகள் இங்கு....**



புராதன கிரேக்கப் பெண் மதகுரு போன்று உடையணிந்த கிரேக்க நடிகை தாலியா புரோகோபியோ 'ஹெரா' ஆலயத்தில் குவிவாடியைப் பயன்படுத்தி சூரிய ஒளி மூலம் தீப்பந்தத்தை எரியூட்டுகிறார்.




ஒலிம்பிக் தீபம் ஏற்றப்படுகிறது.



ஒலிம்பிக் வளையங்கள் குறிப்பிடும் 5 கண்டங்களுக்கும் முன்னர் ஒலிம்பிக் போட்டிகள் இடம்பெற்ற நகரங்கள் ஊடாக ஒலிம்பிக் தீபம் தொடர் ஓட்டமாக எடுத்துச் செல்லப்படவுள்ளது. அதில் முதற்கட்டமாக கிரேக்க விளையாட்டு வீரர் கொஸ்டஸ் கட்ஜியோடிஸ் ஏதென்ஸ் நகரமூடாக ஒலிம்பிக் தீபத்தை ஏந்திச் செல்கிறார்.



கிரேக்கர்களின் ஒளிக் கடவுளான அப்பலோவுக்கு ஒலிம்பிக் தீயை சமர்ப்பிக்க காணிக்கை தீபம் ஏற்றப்படுகிறது.



காணிக்கை தீபத்தை ஒளிக்கடவுளான அப்பலோவே உமது கிரணங்கள் மூலம் ஏதென்ஸ் நகரின் பெருமை பேணும் இந்தத் தீபத்தை புனிதமாக்குவீராக என்று கூறிச் சமர்ப்பிக்கிறார் நடிகை தாலியா.











## கரப்பந்தாட்டம் ஏன் பிரபல்யமடையவில்லை?



சர்வதேச ரீதியில் மிகவும் பிரபல்யம் வாய்ந்த விளையாட்டாகத் திகழ்வது கரப்பந்தாட்டம்.

உதைபந்தாட்டம், கிரிக்கெட் விளையாட்டுக்கள் போல பிரபல்யமடையாவிட்டலும்கூட ஏனைய விளையாட்டுக்களைவிட பிரபல்யமடைந்துள்ளது.

இலங்கையைப் பொறுத்தவரை கரப்பந்தாட்டம் தேசிய விளையாட்டாக இருந்த போதிலும், அதன்வளர்ச்சி நிலை ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது நேர் எதிராகவே காணப்படுகிறது.

இலங்கையின் ஏனைய மாவட்டங்களிலும் குறிப்பாக தென்பகுதியில் உள்ள அநேக மாவட்டங்களில் பொரும்பான்மை இனத்தவர்கள் கிரிக்கெட் ஆட்டத்திற்கு வழங்கும் முக்கியதத்துவத்தை கரப்பந்தாட்டத்திற்கு மட்டும் கொடுத்து, விளையாடுகின்ற போதிலும் சர்வதேச போட்டிகளில் பிரகாசிக்கமுடியவில்லை.

தமிழர் பிரதேசங்களான' வடக்கு - கிழக்கு மாகாணத்திலும் கரப்பந்தாட்டம் அவ்வளவாக வளர்ச்சி அடையவில்லை. பெரும்பான்மை இனத்தவர்கள் செறிவாக வாழும் பகுதிகளான அம்பாறை, திருகோணமலை ஆகிய பகுதிகளில் ஓரளவு வளர்சி கண்டுளளது. யாழ் மாட்டத்தைப் பொறுத்தவரை அதன் வளர்ச்சி நிலை திருப்தியாகவில்லை. அதற்குப் பல காரணங்கள் உண்டு. இதன்வளர்ச்சியைப் பாதிப்பதில் முக்கிய பங்காற்றும் காரணி கிராமப்புறங்களில் விளையாடப்படும் "ஓவர்கேம்" முறையிலான கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டிதான். இதனை தடைசெய்வதன் மூலம்தான் கரப்பந்தாட்டத்தை வளர்க்கமுடியும்.

கரப்பந்தாட்டம் (Volly Ball) என்று கூறும் போது அது "செற்அப்" (Set Up) ஆட்டத்தையே குறிக்கும். ஆனால் கிராமப்புறங்களில் உள்ளவர்கள் "ஓவர் கேமை"யே கரப்பந்தாட்டம் எனக்கூறுகின்றனர்.

"செற்அப்" ஆட்டத்தைப் பொறுத்தவரை ஓர்ஆட்டத்தில் 6 பேர் பங்குபெற்றும் ஆட்டமாகவும் 2 பேர் பங்குபெற்றும் ஆட்டமாகவும் சர்வதேசரீதியில் நடைபெறுகின்றன. இது மிகவும் உடல்ரீதியாகவும், உளரீதியாகவும் விளையாடப்படும் ஓர் விளையாட்டுயாகும். அதுமட்டுமல்லாது மிகவும் களைப்பு மிகுந்த விளையாட்டாகவுமுள்ளது.

ஆனால், ஓவர்கேம் ஆட்டமானது சிரமமில்லாது இலகுவாக விளையாடப்படும் விளையாட்டு. ஆதனால், வயது வேறுபாடின்றி அந்த ஆட்டத்தில் அனைவரும் பங்கு பற்றுகின்றனர். இதனால் "செற்அப்" ஆட்டத்தில் பங்குபற்றுவதில் உள்ள ஆர்வம் குறைந்து செல்கிறது.

இந்த "ஓவர்கேம்" முறையிலான கரப்பந்தாட்ட முறையானது இலங்கையைத்தவிர வேறு எந்த நாட்டிலும் நடைபெற்றதில்லை.

சர்வதேச நாடுகளில் "செற்அப்" முறையிலான ஆட்டங்களே இடம்பெறுகின்றன. நாள் செல்லச்செல்ல பல்வேறு சட்டதிட்டங் களுடனும் புதிய புதிய தொழில் நுட்பங்களுடனும் இது விளையாடப் படுகின்றது.

- *வஸந்தன்*











அதிகரித்திருக்கிறது...
விலையல்ல
அதன் சாரம்.
இப்போது, உங்கள்
பிரியமான லாகர்
அதிகரிக்கப்பட்ட
4.9%
சாரத்துடன்
வருகிறது
Monde Selection Award 2000
BREWED FROM THE FINEST MALTS AND HOPS
Kings
LAGER
ACL V/V 4.9%
Kings லாகர்
என்றுமே, உங்கள் சித்தம் குளிரும் துணை
UBL
யுனைட்டட் பேவரிஸ் லங்கா லிமிற்றெட்
122, யுனியன் பிளேஸ் கொழும்பு- 02. தொலைபேசி 2302538-40 ஃபக்ஸ்: 2302541
ADMASTERS